# இந்து ஒளி

# HINDU OLI








கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்

அகில இலங்கை இந்து மாமன்றம்
காலாண்டிதழ்

*Quarterly of*
*All Ceylon Hindu Congress*


கொழும்புத் தமிழ்ச் சங்கம்
03 SEP 2003
நூலகம்




தீபம் - 5

சுடர் - 3

# மாமன்றத்தில் மகா சிவராத்திரி நிகழ்வுகள்



மகாசிவராத்திரி தினத்தன்று ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு பூஜை நடைபெறுகிறது.



ஸ்ரீ அரவிந்தர் ஆச்சிரமத்தைச் சேர்ந்த ஸ்ரீ சதாள் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார். அருகே, உரையை மொழிபெயர்த்த பொதுச்செயலாளருடன், மாண்புமிகு நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன்.



இரத்மலானை இந்துக் கல்லூரி விடுதி மாணவர்களுடன் மாண்புமிகு நீதியரசர் சி. வி.விக்னேஸ்வரன், ஸ்ரீ அரவிந்தர் ஆச்சிரமம் ஸ்ரீ சதாள், மாமன்ற துணைச் செயலாளரும், கல்லூரி அதிபருமான ந. மன்மதராஜன்



விடுதி மாணவர்களுடன் மாண்புமிகு நீதியரசர் சி. வி.விக்னேஸ்வரன், ஸ்ரீ அரவிந்தர் ஆச்சிரமம் ஸ்ரீ சதாள்,

உ
சிவமயம்

## பஞ்ச புராணங்கள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்
(அப்பர் சுவாமிகள் அருளியது.)

மாட்டினேன் மனத்தைமுன்னே மறுமையை யுணர மாட்டேன்
மூட்டி நான் முன்னை நாளே முதல்வனை வணங்க மாட்டேன்
பாட்டினாய் போல நின்று பற்றதாம் பாவந் தன்னை
ஈட்டினேன் களைய மாட்டேனென் செய்வான் தோன்றினேனே.

### திருவாசகம்
(மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது.)

யானேதும் பிறப்பஞ்சே
னிறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில் வேண்டேன்
மண்ணாள்வான் மதித்துமிரேன்
றேனேயு மலர்க் கொன்றைச்
சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் னருள் பெறுநா
ளென்றென்றே வருந்துவனே.

### திருவிசைப்பா
(பூந்துருந்தி நம்பி காட நம்பி அருளியது.)

கடியார் கணம்புல்லர் கண்ணப்பர் என்றுன்
அடியார் அமர் உலகம் ஆளநீ ஆளாதே
முடியாமுந்தீ தீவேள்வி மூவா யிரவரொடும்
குடிவாழ்க்கை கொண்டு நீ குலாவிக் கூத் தாடினையே.

### திருப்பல்லாண்டு
(சேந்தனார் அருளியது.)

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்ற
தார்பெறு வார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே.

### பெரியபுராணம்
(சேக்கிழார் சுவாமிகள் அருளியது.)

ஞாலம் உய்ய நாம் உய்ய
நம்பி சைவ நன்னெறியின்
சீலம் உய்யத் திருத்தொண்டத்
தொகை முன் பாடச் செழுமறைகள்
ஓலமிடவும் உணர்வரியார்
அடியா ருடனும் உளதென்றால்
ஆலம் அமுது செய்தபிரான்
அடியார் பெருமை அறிந்தாரார்.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

# இந்து ஒளி

தீபம் - 5 சுடர் - 3
விஷு வருடம் சித்திரை 24ம் நாள்
07. 05. 2001

## நவீன தொழில் நுட்ப வளர்ச்சிப் பாதையில் மாமன்றத்தின் சேவை

அகில இலங்கை இந்து மாமன்றம் மக்கள் சேவையும் மகேஸ்வரன் பூசையே என்ற புனிதப் பாதையில் தன் பணிகளைத் தொடர்ந்து செய்து கொண்டு வருகின்றது.

ஆதரவற்ற மாணவர்களுக்காக அகில இலங்கை இந்து மாமன்றம் இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியில் நடாத்தும் இலவச மாணவர் விடுதி, கிளிநொச்சி யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்திற்கும், வன்னியில் நடத்தப்படும் இனிய வாழ்வு இல்லத்திற்கும் வழங்கும் ஆதரவு, மட்டக்களப்பில் கட்டப்பட்டு நிறைவு பெறும் சுவாமி விபுலானந்தர் முதியோர் இல்லக் கட்டிடப் பணி என்று எங்கள் சேவை தொடர்கிறது.

களுத்துறைச் சிறைக்குச் சென்று சட்டத்தின் பெயரால் அநீதியாகச் சிறைப்பிடித்து வைத்திருக்கும் நூற்றுக்கணக்கான இந்து மக்களுக்கு ஆறுதல் தந்தோம்.

தமிழ் மக்களுக்கு அவர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் அரசியற் தீர்வு வேண்டும் என தொடர்ந்தும் குரல் கொடுத்தும் பிரார்த்தனை செய்து வருகின்றோம்.

சமய தீட்சை ஒழுங்குகளைச் செய்து சமய அனுட்டானத்திற்கான வழிவகைகளை ஏற்படுத்தி வருகிறோம்.

இந்து மக்களுக்கு ஒரு கையேடு தயாராகிறது. கூடிய விரைவில் அது பிரசுரிக்கப்படும்.

பண்ணிசைப் பயிலரங்கு நடத்தவும் ஒழுங்குகள் செய்து வருகிறோம்.

கதிர்காமத்திலுள்ள இந்து விடுதியை பரிபாலிக்கும் பொறுப்பை எங்களுக்குத் தரவேண்டும் என வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு, வடக்கு கிழக்கு தமிழ் விவகார, இந்து சமய கலாசார அமைச்சைக் கேட்டிருக்கிறோம். எங்களின் கோரிக்கை நிறைவேறினால் கதிர்காமத்திலும் எங்களின் பணி பரவும்.

நவீன தொழில் நுட்ப வளர்ச்சிப் பாதையில் எங்கள் சேவை ஆரம்பமாகிறது. அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு ஒரு கணனித் தளத்தை அமைத்துத் தந்திருக்கிறார் சேவை மனப்பான்மையும் அறிவுத்திறனும் மிக்க பல்கலைக்கழக இளைஞரான செல்வன். கு. பார்த்தீபன். அக்கணனித் தளத்தை இந்த இதழ் வெளியாகும் மே மாதம் 7ம் திகதி காணக் கூடியதாக இருக்கும். இத்தளத்தில் இந்து மாமன்றத்தின் நடவடிக்கைகளைப் பற்றிய செய்திகளும் "இந்து ஒளியில்" வெளியாகும் ஆக்கங்களும் வெளியிடப்படும். அத்தளத்தைப் பார்த்துப் பயன் பெறுங்கள். ஆதரவு தாருங்கள்.

## அம்மன் துதிப் பாடல்

# கண்திறந்து பாருமம்மா



**பல்லவி**

கருணையம்பதி ஆளும் கருப்பையடி மீனாட்சி
கண் திறந்து பாருமம்மா கவலைகள் தீருமம்மா - (கருணையம்பதி)

**அனுபல்லவி**

தெள்ளு தமிழால் உன்னைத் தெண்டனிட்டுப் பாடுகிறேன்
உள்ளம் களி கொள்ள உனதுருவம் காட்டிடுவாய் - (கருணையம்பதி)

**சரணங்கள்**

அரசமர நிழல் அமர்ந்தாட்சி செய்பவளே
தென்றல் வந்து தாலாட்டும் தென்னஞ்சோலை அருகுடையாய்
மாதுளம் பூ நிறத்தாளே மாயனவன் சோதரியே
மாயப் பிணி அகற்றி மக்கள் தமைக் காத்திடுவாய் - (கருணையம்பதி)

திக்கெல்லாம் ஒளி வீசும் திங்கள் சூடி நாயகியே
சக்தியும் சிவனுமாய் சராசரம் ஆள்பவளே
எத்திக்கும் ஏதிலியாய் பறந்தலையும் எம்மக்கள்
சித்தம் சித்திக்க சிந்தை கனிந்தருள்வாய் - (கருணையம்பதி)

**ஆக்கம் : புனிதவதி சண்முகலிங்கம்**

(தென் கருணையம்பதி சோழங்கன் கருப்பையடி மீனாட்சி அம்மன் மீது பாடப்பெற்ற பாடல் இது)

★★★

## அன்பு வேண்டுகோள் — ஆதரவற்ற மாணவர்க்கு ஆதரவு தாரீர்.

*அகில இலங்கை இந்து மாமன்றம் பராமரிக்கும் இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரி இலவச மாணவர் விடுதியில் ஆதரவற்ற மாணவர்களுக்கு, மாமன்றம் பல நலன்விரும்பிகளின் உதவியால் ஆதரவளிப்பதன் மூலம் அவர்கள் நல்ல பிரஜைகளாக வளர்கிறார்கள்.*

*நீங்களும் இந்தப் புனிதப் பணிக்கு தாராளமாக உதவுங்கள். உங்களது உற்றார், உறவினர்களின் நினைவு தினங்களில் உணவு வழங்க ஒழுங்கு செய்யலாம். மாதாந்த அடிப்படையிலும் தொடர்ந்து உதவலாம்.*

*-அகில இலங்கை இந்து மாமன்றம்.*

எந்தவிதமான சுயநல நோக்கமும் இல்லாமல், பணம் புகழ் மற்றும் வேறு எதிலும் கவனம் செலுத்தாமல் நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவே தொண்டு செய்பவன்தான் சிறப்பாகப் பணியாற்றுகிறான். இத்தகைய மனநிலையில் ஒருவன் பணியாற்ற வல்லவனாகும் போது, அவன் ஒரு புத்த பகவான் ஆகிவிடுவான். உலகத்தையே மாற்றி அமைக்கக்கூடிய வகையில் வேலை செய்யும் சக்தி அத்தகையவனிடமிருந்து வெளிப்படுகிறது.

(சுவாமி விவேகானந்தர்)

தனது குழந்தைகளில் யாரேனும் ஒருவருக்காவது உதவி செய்யும் வாய்ப்பை ஆண்டவன் உனக்குக் கொடுத்தால் அதன் மூலம் நீ பாக்கியம் பெற்றவன் ஆகிறாய். ஆனால் அது காரணமாக உன்னைப்பற்றி நீ மிகவும் பெருமையாக நினைத்துக் கொள்ளாதே. மற்றவர்களுக்குக் கிடைக்காத இந்த அரிய வாய்ப்பு உனக்குக் கிடைத்திருக்கிறது. இதனால் நீ பாக்கியசாலி ஆகிறாய். எனவே நீ செய்யும் இந்தச் சேவையைக் கடவுள் வழிபாடாகவே செய்.

(சுவாமி விவேகானந்தர்)

# அகில இலங்கை இந்து மாமன்றம்

## சித்திரை புத்தாண்டின் போது விடுத்திருந்த பகிரங்க வேண்டுகோள்

இந்த நாட்டிலுள்ள இரண்டு பிரதான சமூகங்களுக்கும் ஒரு பொதுவான புத்தாண்டு இருக்கின்ற போதிலும், ஒரு சமூகம் தங்கள் சொந்தநாட்டில் மாற்றான்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படும் காரணத்தால் புத்தாண்டைக் கொண்டாடும் உரிமை பறிக்கப்பட்டுள்ளமை துரதிர்ஸ்டவசமானது.

### தமிழ் பேசும் மக்களும் இந்நாட்டு மன்னர்களாக

ஜனநாயக சோஷலிஸக் குடியரசு என்று அழைக்கப்படும் ஒரு நாட்டில் ஒவ்வொரு பிரஜையும் சுதந்திரமாகவும் சுயமரியாதையுடனும் அடிப்படை உரிமைகளுடனும் வாழக்கூடியதாக இருக்க வேண்டும். ஜனநாயக ஆட்சி என்பது மக்களின், மக்களுக்காக, மக்களால் ஆனதாக இருத்தல் வேண்டும். சகல பிரஜைகளும் தாங்கள் இந்நாட்டு மன்னர்கள் என்று பெருமைகொண்டாலொழிய, இது ஒரு ஜனநாயக நா்டு என்று இருக்க முடியாது. பெரும்பான்மையானோர் இந்துக்களாகவுள்ள தமிழ்பேசும் மக்கள். இனரீதியானதும், பாகுபாடானதுமான சுலோகங்கள் மூலம் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களால் இந்த ஜனநாயக உணர்வுகள் மறுக்கப்பட்டுள்ளன.

இலங்கையிலுள்ள இந்து மன்றங்களினதும் அறங்காவல் சபைகளினதும் ஒன்றியமான அகில இலங்கை இந்து மாமன்றத்தின் நிறைவேற்றுக் குழு சிங்கள – தமிழ்ப் புத்தாண்டு ஆரம்பிக்கும் இவ்வேளையில் இந்தப் பகிரங்க வேண்டுகோளை விடுப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

### பிரார்த்தனை

எங்கள் மீது அருள்மழை பொழிந்து எங்கள் அனைவரையும் இன்றைய அபாயகரமான நிலையிலிருந்து காத்தருளும் வண்ணம் ஸ்ரீசிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீநடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கும் வண்ணம் எமது சகல இந்து சகோதர சகோதரிகளையும் வேண்டுகின்றோம்.

### இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழ முடியாது.

சகல அரசியல் கட்சிகளும் தங்கள் அரசியல் வேறுபாடுகளையும் குறுகிய மனப்பான்மைகளையும் மறந்து தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய வகையில் அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய உரிமைகளை வழங்கி அவர்கள் இந்த நாட்டுப் பிரஜைகளாக சமத்துவமாகவும் கௌரவமாகவும் வாழ வழிவகுக்குமாறு வேண்டுகின்றோம். அவர்கள் தங்கள் சொந்த நாட்டில் தொடர்ந்தும் அகதிகளாகவும் இரண்டாந்தரப் பிரஜைகளாகவும் வாழவேண்டும் என எதிர்பார்க்க முடியாது.

### அர்த்த புஷ்டியான பேச்சு வார்த்தை.

தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலான ஒரு அரசியல் தீர்வுமூலம் இந்த நாட்டில் சமாதானத்தை உருவாக்குமுகமாக அரசாங்கம் இந்த சிங்கள தமிழ் புதுவருடப் பிறப்பிலாவது ஒரு யுத்த நிறுத்தத்துக்கு உடன்பட்டு தமிழர் விடுதலைப் புலிகளுடனும் ஏனைய கட்சிகளுடனும் ஓர் அர்த்தபுஷ்டியான பேச்சுவார்த்தைக்கு வழிவகுக்க வேண்டும். வடக்கு கிழக்கின் சகல பகுதிகளுக்கும் உணவு, மருந்து வகை, பாடசாலை மாணவருக்கான உபகரணங்கள் கட்டிடப் பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களும் எவ்வித தடைகளும் இன்றிக் கிடைக்க வழிவகுக்கப்பட வேண்டும்.

### தடைகளை நீக்கவும்.

தமிழ்பேசும் மக்கள் மீதான இராணுவ நடவடிக்கைகளும் பொருளாதாரத் தடைகளும் பல்வேறு துன்புறுத்தல்களும் எவருக்கும் எதுவித பலனையும் கொடுக்கவில்லை என்பதையும், மாறாக சகலரும் துன்பத்திற்குள்ளாகியதும், தொடர்ந்தும் துன்பத்திற்குள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்பதையும் ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்கள் பெரும்பாலான சிங்கள மக்களுக்குத் தெரியாது. அவர்களும் சர்வதேச சமூகமும் தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளையும், துன்பங்களையும், அவமானங்களையும் விளங்கிக்கொண்டு அரசாங்கத்தையும் மற்றும் ஏனையோரையும் இராணுவ நடவடிக்கையை நிறுத்தும்படியும், பாதுகாப்பு நடவடிக்கை என்ற போர்வையில் விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடையை நீக்கி ஒரு நீதியான அரசியல் தீர்வுக்கு உடன்படுமாறும் தூண்ட வேண்டும்.

### முக்கியமான விடயங்கள்

சில முக்கியமான விடயங்களை கீழே குறிப்பிடுகிறோம்.

- ஒரு தேசிய பாதுகாப்புப் படை என்ற வகையில் அல்லாமல் ஓர் இன அடிப்படையில் செயற்படும் இராணுவத்தினரின் நடவடிக்கைகள் சம்பந்தமான அண்மைக்கால செய்திகள், தமிழ் பேசும் மக்களை அரசியல் தீர்வு கிடைக்கும் என்ற கனவிலிருந்து தூர விலக்கியுள்ளது.
- எங்களாலும் வேறு பலராலும் பாரதூரமான சகிக்க முடியாத மனிதாபிமானமற்ற செயலென்று எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட, பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வையில் இந்த நாட்டுப் பெண்களுக்கு இராணுவத்தினரால் இழைக்கப்பட்ட பாலியல் துன்புறுத்தலும் தாக்குதலும். இவ்வாறான பயங்கர

துன்புறுத்தலுக்குட்பட்ட ஒருவர் கர்ப்பிணித் தாய் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஏதாவது நாகரிகமடைந்த சமுதாயத்தில் இது நடக்க முடியுமா? இவ்வாறன செயல்கள் ஒவ்வொரு தமிழ் பேசும் பிரஜையையும் "நாம் ஏன் ஒரு அந்நியனிலும் பார்க்கக் கேவலமாக நடத்தப்படுகிறோம்" என்று ஆத்திரப்படச் செய்கிறது.

● இராணுவத்தால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்படுவோர் சில சமயங்களில் உயிரோடு திரும்புவதில்லை. 28. 02. 2001 அன்று மன்னாரில் நடந்த கே. உதயகுமாரின் சம்பவம் பற்றிக் குறிப்பிடுகிறோம். நீதிமன்றங்களால் விடுவிக்கப் பட்டவர்கூட சில சமயங்களில் நீதிமன்றச் சட்டங்களுக்கு எதுவித மதிப்பும் கொடுக்கப்படாது திரும்பவும் கைது செய்யப்படுகிறார்கள் (உதாரணம்: வவுனியாவில் எஸ் பிரதாபன் மீளக்கைது செய்யப்பட்டமை)

● வடக்கு கிழக்கிலுள்ள சில பகுதி மக்களுக்குப் போதிய உணவு வசதிகளும், மருந்து கட்டிடப் பொருட்களும் வேறு அத்தியாவசியப் பொருட்களும் மறுக்கப்பட்டுள்ளன.

● பட்டினிச் சாவுக்கும் பல்வேறு வகையான துன்பங்களுக்கும் உள்ளாக்கப்பட்ட மக்களிடமிருந்து ஓர் அரசாங்கம் எப்படி ஒரு நல்லெண்ணத்தை எதிர்பார்க்க முடியும்? வடக்கு கிழக்கு மக்களைப் பார்த்து "நீங்கள் தனிநாடு கோரத் தேவையில்லை. நாங்கள் உங்கள் அரசாங்கமும் கூட. உங்கள் எல்லோரையும் நாங்கள் கவனிக்கிறோம்" என்று கூறுவது ஒரு கூற்றாகுமா?

● மக்கள் நடமாட்டத்துக்கு தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வன்னியில் இத்தடை உள்ளது. இதனால் ஒருவர் தனது சொந்த நாட்டில் சுதந்திரமாக நடமாடும் அடிப்படை உரிமை பறிக்கப்படுகின்றது.

● பிரசித்தி பெற்றதும், பழமை வாய்ந்ததும், சமயகுரவர்களால் வணங்கப்பட்டுப், பாடல் பெற்றதுமான திருக்கேதீஸ்வரம் கோவில் பூஜைகள் எதுவுமின்றி பல ஆண்டுகளாகப் பூட்டப்பட்ட நிலையில் இருக்கிறது. அதேபோன்று இன்னொரு தலமான திருக்கோணேஸ்வரமும் வழிபடுவோர் சுதந்திரமாகச் செல்ல முடியாத நிலையிலுள்ளது.

● பல கோவில்கள் இராணுவ நடவடிக்கையால் அழிக்கப்பட்டு இன்றும் திருத்தப்படாமல் இருக்கின்றன. இவை சம்பந்தமான சேதவிபரங்கள் எம்மால் சேகரிக்கப்பட்டு வடக்கு புனர்வாழ்வு – புனரமைப்பு, வடக்கு கிழக்கு விவகாரம், இந்து கலாசார அமைச்சுக்கு சமர்ப்பித்துள்ளோம்.

● இலங்கையிலும் சரி வேறு எங்காவது சரி புத்த சமய வழிபாட்டுத் தலங்கள் உட்பட எந்தச் சமய வழிபாட்டுத் தலங்களும் அழிக்கப்படும்பொழுது நாங்கள் அவற்றைக் கண்டிக்கிறோம். வேறு நாட்டில் நிகழ்பவற்றிற்கு ஆட்சேபனை தெரிவிக்கும் அரசாங்கம், இந்த நாட்டில் நிகழும் இந்து ஆலயங்களின் அழிவுகளைப்பற்றிப் பாராமுகமாக இருப்பதையிட்டு வருந்துகின்றோம்.

● இந்தக் கடைசி நேரத்திலாவது அரசாங்கம் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் ஆகிய புனித பூமிகளை அமைதி வலயங்களாகப் பிரகடனப்படுத்தி இராணுவத்தை அந்தப் பிரதேசங்களிலிருந்து வாபஸ் பெறவேண்டும் என வேண்டுகின்றோம்.

● பல எண்ணிக்கையான தமிழ்பேசும் மக்கள் வழக்கு விசாரணைகள் இன்றி மறியல்சாலைகளில் துன்புறுகின்றனர். அவர்களுக்கு அரசாங்கத்திடமிருந்து போதிய பாதுகாப்பு இல்லாதுள்ளது "தமிழர்கள்" என்ற காரணத்திற்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகின்றோம். அரசாங்கம் அவர்களுக்கு சட்ட உதவிகள் செய்வதற்கும் ஒழுங்குகள் செய்யவேண்டும்.

● பல எண்ணிக்கையான சிறார்கள் அகதி முகாம்களிலும் வீடுகளிலும் கூட கல்வியின்றி இருக்கின்றனர். இந்தப் பாகுபாடான செயல் அவர்களை வன்முறைக்கு இட்டுச் செல்லும். எனவே ஒவ்வொரு பிள்ளைக்கும் பாகுபாடின்றி கல்வி அளிக்கப்படுகின்றது என்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும். இந்த நாட்டில் தற்சமயம் இருக்கும் கவலைக்குரிய நிலைமைக்கான காரணங்களில் ஒன்று மாறிமாறிவரும் அரசாங்கங்களின் கல்விக் கொள்கையாக இருந்து வருகிறது.

● இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த ஏராளமான குடும்பங்கள் தங்கள் சொந்த இல்லங்களுக்குத் திரும்பிக் குடியேறும் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கை காரணம் காட்டப்பட்டு தங்கள் வதிவிடங்ளில் வசிக்கும் உரிமை மறுக்கப்பட்ட கவலைக்கிடமான நிலையில் அவர்கள் இருக்கிறார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இருக்கும் சகல இந்து மக்களையும் புதுவருடக் கொண்டாட்டங்களில் வீண் செலவு செய்வதை தவிர்த்துப் பிரார்த்தனையில் ஈடுபடுமாறும், சொல்லொனாத் துயரங்களில் ஆழ்ந்திருக்கும் எமது சகோதர சகோதரிகளின் நல்வாழ்வுக்காக உதவுமாறும் பணிவன்புடன் வேண்டுகின்றோம். அநாதரவான மக்களுக்கு உதவுவதற்கான எமது சமூக நலன்புரிச் சேவைகளுக்கான நிதியுதவிகள் "அகில இலங்கை இந்து மாமன்றம் , இல 91/5 சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (தொலைபேசி இல. 434990 தொலை நகல் இல. 344720)

எமது மக்களுக்குச் சாந்தியும் சமாதானமும் கிடைக்க அருளாசி வழங்குமாறு எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீநடராஜப் பெருமானை இப்புனித நாளான வருடப் பிறப்புத் தினத்தில் பிரார்த்திப்போமாக.

*வி. கயிலாசபிள்ளை*
*தலைவர்.*

*கந்தையா நீலகண்டன்.*
*பொதுச் செயலாளர்.*

# இருள் அகல இடர் விலக ஏற்றுக சிவக்கொடி

அடியார்க்கடியான் க. சிவகுருநாதன்

சிவாலயம் விராட்புருடனின் வடிவில் அமைக்கப் பட்டுள்ளது. சிவமாகிய இறையுடன் சிவனாகிய ஆன்மா இரண்டறக் கலக்கும் இடம் என்ற காரணம் பற்றியே சிவாலயம் (சிவ+ஆ+லயம்) எனப்பட்டது. இங்கு கர்ப்பக் கிரகமாகிய மூல ஸ்தானத்தில் இறைவன் (இலங்கு – பிரகாசிக்கும்) ஆத்ம இலிங்க ரூபமாக அமைந்து காட்சியளிக்கிறார். இவருக்குப் பூசை, புனஸ்காரம், ஆராதனை, அபிடேகம் முதலியவை மூலம் தொழுகை நிகழ்கிறது. தொழுதல் என்றால் எமது திரிகரணங்களாகிய மனம், வாக்கு, காயம் மூன்றும் ஒன்றுபடுதல் என்று பொருள்.

சிவாலயத்தில் சிறப்பான தினங்களிலும் வருடமொரு முறையும் உற்சவங்கள் நடத்தப்படுகின்றன. இக்காலங்களில் ஆலயத் தம்பத்தில் கொடி ஏற்றப்படும். இது மூல மூர்த்தியின் ஆற்றல், பண்பு முதலியவற்றை வெளிக்காட்டும் ஊடகமாக அமைகிறது. இவ்வாறு சிவனுக்குரியதாகச் சிவாலயங்களில் ஏற்றப்படும் கொடி "நந்தி"க் கொடி.

இக் கொடியேற்றம் சிவ தத்துவத்தையும் அதன் பண்புகளையும் மக்களுக்கு விளக்குமுகமாக அமைக்கப்பட்ட கிரிகை. சீவர்களாகிய எம்மிடம் இரண்டு முரண்பாடான தன்மைகள் இருக்கின்றன. ஒன்று ஒளி மயமான பகுத்தறிவு. மற்றது ஆணவம், கன்மம், மாயை எனும் இருள்மயமான மும்மலங்கள். இவையிரண்டும், ஒன்று வலிகூடும் போது மற்றது மறைவதும், மற்றது வலிகூடும் போது முன்னையது மறைவதும் ஆன இயல்பைக் கொண்டு விளங்குகின்றன.

சிவ்மாகிய மெய்யறிவு எம்மிடம் பிரகாசிக்கும் போது ஆணவம் முதலாம் மலங்கள் அழிந்து விடுகின்றன. ஆனால் மலங்கள் எம்மைப் பற்றியிருக்கும் போது மெய்யறிவு அழிவதில்லை. அது ஒளிந்திருக்கும். சூரியனை மறைக்கும் மேகம் போல மல உபாதை அகன்றதும் சிவம் மீண்டும் பிரகாசிக்கும்.

மெய்யறிவு என்பது என்ன? அது புகட்டும் மெய்பொருள் எது அப்பொருளினின்றும் வெளிப்படும் அருட்சக்தி எது? அவ்வருட் சக்தியைக் காணக்கூடிய கண் எது? அக் கண்ணில் மெய்யறிவைத் தோற்றாதே தடுக்கும் இருள் எது? என்ற கேள்விகளுக்கு விடையாக நிற்பது சிவமாகிய மெய்பொருளே.

அந்த மெய்ப்பொருளாகிய சிவத்தை, எமது மன வாக்குக் காயங்களால் முயன்று தேடினாலும் காணவோ அறியவோ முடியாது. எம்முடன் இரண்டறக் கலந்து நிற்கும் அவனை வெளியிலும் தேடி அறிய முடியாது. அவனை அறிய அவன் அருளாகிய திருவருளே வேண்டும். அத்திருவருளாக வருபவனே குரு. அவன் மறைபொருளாக விளங்கும் ஊமை எழுத்தையும், பேசும் எழுத்தையும் உணர்த்துவான், அவன் உணர்த்தினால் பஞ்சாட்சரம், அட்டாட்சரம், சச்டாச்சரம், சதுராட்சரம், ஏகாட்சரம் முதலிய எல்லாவற்றினதும் மெய்ப்பொருள் துலங்கும். மெய்ப்பொருள் துலங்கினால் நாம் சிவமயமாக மாறலாம்.

அத்திருவருளாக குருவருளாக விளங்குபவன் நந்தியம்பரனே. அவன் எமக்கு ஞானத்தையும் தெளிவையும் தரவல்லவன். அதனாலேயே சிவக்கொடி "நந்தி" யாகிய திருவருளை குறித்து நிற்கிறது.

*சிவமே பொருளெனத் தேற்றி என்னைச்*
*சிவவெளிக் கேற்றும் சிகரத்தில் ஏற்றிச்*
*சிவமாக்கிக் கொண்டது பாரீர் – திருச்*
*சிற்றம் பலத்தே திரு நடஜோதி.*

என்று சிற்றம்பலமாகிய தில்லை அம்பலத்தில் நின்று ஆடிப் பறந்து பிரகாசிக்கின்ற "நந்தி எம் பெருமான்" தன்னை சிவமாக்கி விட்ட பேற்றினை உருகிப் பாடுகிறார் வள்ளல் பெருமான்.

இத்தில்லையம் பதியில் இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் உமாபதிசிவம். அவர் தில்லை மூவாயிரவருள் ஒருவர். மறைஞானசம்பந்தர் என்ற ஞானியின் தொடர்பால் ஆணவமாகிய மூல மல இருள் நீங்கப் பெற்றவர். இருள் நீங்கப் பெற்றதனால் யாவிலும் யாவையும் சிவமாகக் காணும் ஆற்றலைப் பெற்றார். ஒரு நாள் மறைஞானசம்பந்தர் தாழ் குடிப்பிறந்த ஒருவர் வீட்டில் உணவாக உப்பில்லாக் கஞ்சியை வாங்கி அருந்தினார். அப்போ அவரது கை வழியாக வழிந்த கஞ்சியைப் பிரசாதமாக ஏந்தி அருந்தினார் உமாபதிசிவம். அதனால் அவரைத் தில்லை மூவாயிரவர் சாதிப் பிரஸ்டம் செய்தனர். தில்லையம்பலத்தினுள் நுழையவும் அனுமதிக்கவில்லை.

உமாபதிசிவம் எவ்வித சலனமுமின்றி ஒரு மடத்தே சென்று தங்கி தவம் இயற்றலானார். அவ்வாண்டு மார்கழி உற்சவத்திற்குக் கொடியேற்ற வேண்டிய நாள் வந்தது. தில்லை மூவாயிரவர் யாவரும் சேர்ந்து முயன்றும் கொடி ஏற்ற முடியாது போயிற்று. ஏதும் இறை குற்றமாகவிருக்கலாமென எண்ணி, தில்லைக்கூத்தனிடம் இறைஞ்ச "உமாபதிசிவத்தைக் கொண்டு ஏற்றுவீர் கொடி" என அசரீரி கேட்டது. அது கேட்டு அந்தணர்கள் தாம் செய்த தவற்றை உணர்ந்து வருந்தி, உமாபதிசிவத்திடம் ஓடிச் சென்று தம் செயலுக்கு மன்னிப்புக் கேட்டு அவரை வந்து கொடியையேற்றி வைக்க வேண்டியதோடு, இறைவனின் அசரீரி பற்றியும் கூறினர்.

உமாபதிசிவமும் அழைப்பை ஏற்று, சிற்றம்பலம் ஏகி தம்பத்தின் தென் புறமாய் நின்று இறைவனை வணங்கி, அறியாமை இருளில் ஆழ்ந்து மெய்ப்பொருளை உணராதிருக்கும் மக்களுக்கு மெய்பொருளை உணர்த்தவும் பூரணநிலை அடையவும் வேண்டி இக்கொடியை ஏற்றுகிறேன் எனும் பொருள்படும் நான்கு கொடிக்கவிகளைப் பாடினார்.

முதல் பாடல் பாடிய மாத்திரத்தே கொடி எவ்வித முயற்சியுமின்றித் தம்பத்தின் உச்சிக்கு ஏறிச் சென்று ஆடிப்பறந்தது. அவர் பாடிய முதற்பா இது.

*ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் ஒன்று மேலிடில் ஒன்று*
*ஒளிக்கும் எனினும் இருள் அடராது உன் உயிர்க்குயிராய்*
*தெளிக்கும் அறிவு திகழ்ந்துளதேனும் திரிமலத்தே*
*குளிக்கும் உயிர் அருள் கூடும் படி கொடி கட்டினேன்.*

தில்லைவாழ் அந்தணரின் சாதிச் சழக்கையும், ஆணவ இருளையும் கெடுத்து மெய்ஞ்ஞானத் தெளிவை அருளி சமரச சுத்த சன்மார்க்கத்துக்கு வழிவகுத்தது நந்திக் கொடி.

முத்திநிலை அடைந்து தானே அவனாய், அவனே தானாய் விளங்கும் சதாசிவ நிலையை அருள்வது நந்திக்கொடி. அந்த ஒருமை நிலையை அடைந்தவர்கள், சிரஞ்சீவிகளாக நெடுங்காலம் வாழ்ந்து விரும்பிய காலத்தில் நிர்விகற்ப சமாதி அடைவார்கள்.

இவ்வாறு 3000 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து, தில்லையம்பதியிலே சதாசிவ நிலையை அடைந்து சமாதி கொண்டவர் திருமூலர். அவருக்கு அந்த நிலையை அருளியவர் திருநந்திதேவர்.

*வினையின் நீங்கி விளங்கிய அறிவின்*
*முனைவன் கண்டது முதல் நூலாகும்*

என்பது தொல்காப்பியர் வாக்கு. அதற்கமைய திருமந்திரம் எனும் சிவாகமத்தை ஆக்கி எமக்களித்தார் இந்தத் திருமூலர்.

*நந்தி திருவடி நான் தலை மேற் கொண்டு*
*புந்தியினுள்ளே புகப் பெய்து போற்றி செய்து*
*அந்தி மதிபுனை அரனடி நாடொறும்*
*சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேனே!*

என்று அவர் தாம் சதாசிவ நிலையில் விளங்கிய நந்திதேவர் அறிவிக்க அதனைச் சிவாகமமாகத் தந்ததாகக் கூறுகிறார். அதுவே தமிழர்களுக்குரிய சிவாகமம்.

ஒரு யோகியானவன் பத்மாசனமிட்டு தவத்தில் இருக்கும் போது அவனது மூலாதாரத்தில் மூண்டெழும் அனலை, சூரிய சந்திர கலைகளாகிய சுவாசத்தால் மேல் எழுச் செய்து, ஆறாதாரங்களிலும் உள்ள தடைகளைக் கடந்து, சிதாகாயத்தில் சுழிமுனை வழியே ஏற்றி, நிறாதாரத்துள் செலுத்த அது அங்கு ஒளிமயமாகப் பிரகாசிக்கும். இப்படிப் பிரகாசிக்கும் (அனல்) தீ நமது காய்க் கோவிலில் பிரகாசிப்பதால் அது நம் + தீ = நந்தி என்று பெயர் பெற்றது. இது ஆன்ம தத்துவம்.

இந்த உயர்ந்த தத்துவத்தை விளக்கி நிற்கும் நந்திக் கொடியை சிவக் கொடியாக ஆக்கிவைத்த நம் முன்னோரைப் போற்றாமல் இருக்க முடியாது. அவர்கள் எமக்களித்த ஒப்புயர்வற்ற மெய்ப்பொருளை அதன் பொருளுணர்ந்து கடைப்பிடித்து வருவோமானால் நாமும் சிவமயமாகி இன்ப துன்பங்களுக்குக் காரணமான பிறவிப் பிணியினின்றும் நீங்கி உய்தி அடையலாம்.

*அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்*
*விண்ணில் அமரர் தமக்கும் விளங்காது*
*அண்ணல் அறைந்த அறிவு அறியாவிடின்*
*எண்ணில் கோடியும் நீர் மேல் எழுத்தே.*

என்று மூலன் வாக்குக்கமைய சிவாகமத்தின் மெய்ப்பொருளை உணர்ந்த சான்றோர்களை அண்டி அதன் மெய்ப்பொருளை உணர்ந்து உய்தி அடைவதே இன்று வேண்டற்பாலது.

இன்றைய மாயா வினோத உலகில் பழமையை மறந்து புதுமையில் உழலும் மக்களுக்கு மெய்யறிவைப் பிரகாசிக்கச் செய்யும் நந்திக் கொடியைச் சகல வைபவங்களிலும் ஏற்றிச் சிறப்பிப்பதோடு, உமாபதிசிவாச்சாரியார் ஆக்கித் தந்த கொடிக்கவி நான்கையும் பாராயணம் செய்து வருவோமானால், சிவனருளால் இடர்கள் நீங்கும், அகவிருள் அகலும், நாம் அமைதியாக வாழலாம்.

மூதாதையர் எமக்கு அளித்து, நாம் அறியாமையால் மறந்து கைவிட்ட இந்த அற்புதமான சிந்தனைக்குப் புதுமெருகூட்டி வைத்த உலக சைவப் பேரவைக்கும், அதன் நோக்கங்களை நிறை வேற்றுவதற்காகத் தம்மை முற்றாக அர்ப்பணித்துக் கொண்டு செயலாற்றும் கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தைத் தலைமைதாங்கி இயக்கும் செல்வர் தனபாலா அவர்களுக்கும் நந்தியம் பெருமானின் பூரண அருள் கிட்டி சிவமயமாக வாழ வாழ்த்துகிறோம்.

★★★

இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவை. வலிமை நிறைந்த ஒரு களஞ்சியமாக உன்னை உருவாக்கிக் கொள். முதலில் உலக மக்களின் துன்பங்களைக் குறித்து நீ வருந்து......... வெறுப்பு உணர்ச்சியாலோ, பொறாமையாலோ, உன்னுடைய மனம் அலைக்கழிக்கப்படாமல் இருக்கிறதா என்று உன்னையே நீ கேட்டுக்கொள். உலகின் மீது வெறுப்புணர்ச்சி, கோபம் ஆகியவை அடுக்கடுக்காகச் சுமத்தப்பட்டு வருகின்றன. அது காரணமாக நல்ல காரியங்கள் தொடர்ந்து பல காலமாக நிறைவேற்றப்படாமற் போயிருக்கின்றன. மாறாகத் தீமையே விளைவிக்கப்பட்டிருக்கிறது. நீ தூய்மை உள்ளவனாக இருந்தால், வலிமை உள்ளவனாக இருந்தால், நீ ஒருவனே உலகிலுள்ள அத்தனை பேருக்கும் சமமானவனாவாய்.

(சுவாமி விவேகானந்தர்)

★★★

*கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிரத் தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை – இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு நான் புரிந்துகொண்டிருக்கிறேன். மக்களுக்குச் சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய்பவனாகிறான்.*

(சுவாமி விவேகானந்தர்)

# புதுமைக்கும் வழிகாட்டிகளாகப் பண்டே நின்றொளிரும் பண்பாட்டுச் சுடர்கள்

ஆ. குணநாயகம்

## "நமது நற்றுணையாம் நன்மரங்கள்"

உலகப் பொருட்கள், தாவர வர்க்கம், மிருக வர்க்கம் என இரு பெரும் பிரிவுகளாக அமைகின்றன. இவை ஒன்றனுக் கொன்று உறுதுணையாகவும் பாதுகாப்பாகவும் உள்ளன. ஒன்று அறவே இல்லையாயின் மற்றையது நிலைத்திருத்தல் முடியாது. இந்த உண்மையைச் சைவ சமய வர்க்கத்தினர் நன்கு உணர்ந்திருந்தனர். சைவக் கோவில்களின் தலவிருட்ச மரபு அதற்குப் போதிய சான்றாகின்றது. ஒவ்வோர் கோவிலுக்கும் அதற்குரிய தலவிருட்சமாக ஒவ்வோர் விருட்சம் குறிக்கப் பெற்று, அது பாதுகாப்பாகக் கோவிற் பிரகாரத்தில் வளர்த்துப் பாதுகாக்கப்படுகின்றது.

'யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை' என்பது திருமூல நாயனார் திருவாக்கு. ஏன் அவ்வாறு கூறினார்? பச்சிலை யாவர்க்கும் இலகுவில் கிடைக்கக் கூடியது என்பது ஒரு காரணம். இன்னோர் மிகப் பிரதானமான காரணமும் உண்டு. உயிர் வர்க்கங்களுக்கு உதவும் சூரிய சக்தி மரங்களின் பச்சிலை மூலமாகவே கிடைக்கிறது என்பது விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ள உண்மை. இலைகளின் பச்சையிலே அச்சூரிய சக்தி சேமிக்கப்பட்டு, பின்னர் உயிர் வர்க்கங்களால் உட்கொள்ளப்படும் பொழுதில் அது உரிய பயனைத் தருகின்றது.

செடி, கொடி, மரங்களும் பெரியவையாகப் போற்றப் பெறுகின்றன என்பதைக் காட்ட அநேக சான்றுகள் எமது புராணங்களிலே கூறப்பெற்றுள்ளன.

நாம் மிகச் சாதாரணமானவை எனக் கருதும் வீட்டுச் செடிகளே மிக அற்புதமான பலாபலன்களை மனிதர்க்கு அளித்துள்ளன. மனிதர்க்கு மாத்திரமன்று, மிருக வர்க்கத்திற்கு உணவாகியும் மருந்தாகியும் கூடப் பயன்படுகின்றன. இந்த ஒரு நிகழ்ச்சியை எத்தனை பேர் கவனித்தார்களோ தெரியவில்லை. சில வேளைகளில், வீட்டில் வளர்க்கும் நாய் அறுகம்புல்லை உட்கொண்டு, பின் கக்குவதைக் கவனித்திருக்கின்றோம். இதனை நாய் தனக்கு ஒரு சிகிச்சையாகவே செய்கின்றது. அறுகம் புல் அற்புதமானவோர் மூலிகை.

செடி, கொடிகள், மரங்களின் உறுப்புக்கள் யாவும் உயிர்இனம் யாவற்றிற்கும் பயன்தரும் வகை அனந்தம். ஆனால், எமது கண்ணிற்கு முன்னால் என்ன நடைபெறுகின்றது. தற்கொலை போன்ற முயற்சியிலேயே மனிதன் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றான்.

பண்டைத் தமிழ் மக்கள் தாவர வர்க்கங்களை மிகப் பெரிதாகக் கருதிப் போற்றிப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள். கபிலதேவ நாயனார் பாடியுள்ள குறிஞ்சிப் பாட்டு என்னும் சங்க இலக்கியத்திலே தொண்ணூற்றொன்பது வகையான வெவ்வேறு மலர்கள் ஆர்வமாகக் குறிக்கப் பெற்றுள்ளன. தமிழ் நிலத்து மலர்கள் இத்தனை மாத்திரமேயென்று சொல்ல முடியாது. நமக்குச் சாதாரணமாகத் தெரிந்துள்ள மலர்களோ இப்பட்டியலில் இடம் பெறவில்லை. "காந்தள்" ,"கடம்பை", "அசோகம்" என்னும் சில இத்தகையதான, மலர்கள் மீதும், மரங்கள் மீதும் நிலவி வந்துள்ள உணர்வுடை, ஆர்வம், ஒருவரோடு இருவரோடு நின்று விடவில்லை. இது தமிழ் மக்கள் யாவரிடமுமே நிலைபெற்ற சீரிய ஒரு பண்பாக இருந்து வருகின்றது.

போரில் வெற்றி தோல்வியைக் குறிப்பதற்கும் மலர்களே சின்னமாக விளங்கின. அரசியற் சின்னங்களாயும் பயன்பெற்றன.

இத்தகையதோர் நல்மரபு பண்டைய தமிழ் உலகிலேயே என்பதனைக் காட்ட, நற்றிணை என்னும் ஒரு சங்க நூலிலிருந்து செய்தி ஒன்றினை இவண் எடுத்துக் காட்டுகின்றோம்.

மணலில் கொட்டை முதலியவற்றை மறைத்து வைத்து விளையாடிய தமிழ் சிறுமி ஒருத்தி, புன்னைக் கொட்டையை மணலிலேயே மறந்து விட்டுச் சென்றாள். அது முளைவிட்டு வளரத் தொடங்கியது. இதனைக் கவனித்த அப்பெண், அது தனது குழந்தை எனப் பாராட்டி, பாலும் நெய்யும் ஊற்றி அதனை வளர்த்தாள்.

பின்னர் அப் பெண் தானே பருவம் வந்ததும் மணம் செய்து கொண்டாள். நாளடைவில் பெண் குழந்தைகளையும் பெற்றாள். இக் குழந்தைகள், சிறிது வளர்ந்ததும், மிகத் துடியாட்டமாக ஓடித் திரிந்தன. பானையை உடைத்தன. ஏனைய பிள்ளைகளுக்குத் துன்பம் கொடுத்தன. இவற்றைக் கவனித்த தாயார், தனது முதற் குழவியாகிய புன்னை, விட்ட இடத்திலேயே வேரூன்றி நிற்பதைப் புகழ்ந்தாள். அவ்வாறு பன்முறை வற்புறுத்தியதைக் கேட்ட மகளும், அப் புன்னையைத் தம் தமக்கையாகவே நம்பி வாழ்ந்தாள்.

பின்னொரு நாள் தன் தலைவனோடு கூட வருகின்றாள் எள்ளி நகையாடி வருகின்றார்கள். உடனே, அப்பெண், "இது அக்காவினுடைய இடம், எள்ளி நகையாடும் இடம் அல்ல, நாம் மரியாதை செலுத்திச் செல்ல வேண்டிய இடம்" என்று எச்சரிக்கை செய்கின்றாள். தாவர வர்க்கத்திற்கும் அவ்வளவு மேம்பாடாக மரியாதை செலுத்தப் பெற்றது. இதோ இதற்குரிய பாடற் பகுதி:

*"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி*
*மறந்தனம் துறந்த காழ்முளை அகைய*
*நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப*
*நும்மினுஞ் சிறந்தது நுவ்வை ஆகும் என்று*
*அன்னை கூறினள் புன்னையது சிறப்பே*
*அம்ம நாணுதும் நும்மொடு நகையே!"*

இச் சீரிய கருத்தை எமது முன்னோர்கள் எவ்வளவு சிறப்பாகவும், மேம்பாடாகவும், நொய்மையாகவும் எடுத்து, 2000 ஆண்டுகளுக்கு முன்னமே விளக்கியுள்ளார்கள். தமிழ் இனத்தின் சிந்தனை நலனும், பண்பாட்டுச் சிறப்பும் இத்தகைய சான்றுக்களால் இனிது புலனாகின்றன. தமிழினத்தின் பண்பாட்டுத் தொன்மையும் மேன்மையும் இவ்வாறு எடுத்து விளக்கப்படும் பொழுது நாம் பெருமிதம் அடைதல் மிகச் சாலும். இந் நிலைமையோடு, இப்போதைய எமது நடைமுறைகளைப் பார்த்தால், நாம் தலை குனிபவர்களாகின்றோம். இப் பழங்கதைகளெல்லாம் எமக்கு எதற்கு என்று சொல்வாரும் உண்டு. தமிழ் மொழி நடை மிகக் கடுமையாக இருக்கின்றதே என்று இகழ்ந்து, அதனை எடுத்து வீசி விடுவாரும் உண்டு. தமிழ் நடை பிழையானது எனக் கூறுதல் பொருந்தாது. பிழை எம்மிடத்திலே தான் உள்ளது. தமிழ் மொழி அழியாதவாறு சிறப்புடன் 2,500 ஆண்டுகள் நிலைத்து வருகின்றது என்று Encyclopaedia Britanica என்னும் ஆங்கில மொழிக் களஞ்சியம் எடுத்து விளம்புகின்றது. நாம் தாம் அழித்தொழிக்க முனைகின்றோம். ஒருவர் எப்படியானவர் என்பதனை அறிய அவரது சிந்தனைகளே நற்சான்று. என்னென்ன அற்புதமான சொற்களை எமது முன்னோர் எமக்கு ஆக்கித் தந்துள்ளார்கள். அவற்றின் அருமைப்பாட்டைத் தெரியாமல் நாம் கெடுகின்றோம். ஒவ்வோர் சொல்லின் நுட்பமான பொருளை அறிந்து, அவற்றைக் கையாள்வது எமது கடமை. அல்லது நமது பழம்பெரும் செல்வத்தைக் கடலிலே வீசியவர்களாவோம். அழித்தல் இலகு, ஆக்கல் கடினம்.

இங்கு கூறப்பெற்றுள்ள கருத்திற்கும், சமர்ப்பிக்கும் கட்டுரைக்கும் நேர்தொடர்பு இல்லாது இருப்பினும் இக்கருத்தின் முக்கியத்துவம் நோக்கி இவண் தருகின்றனம். மன்னிக்கவும்.

*முற்றும்*

(மாமன்றத்தின் அறங்காவலர் சபைத் தலைவரும், ஈழத்து தமிழ் திருநெறி மன்றத் தலைவருமான திரு. ஆ. குணநாயகம் அவர்கள் கடந்த மூன்றாண்டுகளாக எழுதிய இத்தொடர் இத்துடன் நிறைவு பெறுகின்றது. அரிய பல கருத்துக்களை தனக்கென உரிய தனிப் பாணியில் திரு. குணநாயகம் இத்தொடரில் எழுதிவந்தார். அவருக்கு எமது மனமார்ந்த நன்றி.)

*ஆசிரியர் குழு.*

★★★

## திருவிழாக்கள்

கொடியேற்றிய நாள்முதல் பத்துநாட்கள் நிகழும் திரு விழாக்களும் தனித்தனி தத்துவங்களை உணர்த்துகின்றன. "முதனாள் விழா தூல உடம்பை நீக்குவதற்காகவும், இரண்டாம் நாள் விழா தத்துவமயமான உடம்பு நீங்கும் பொருட்டும், மூன்றாம்நாள் விழா மூவினை, முக்குணம், மும்மணம், முக்குற்றம், முப்பிறப்பு, முப்பற்று முதலியன நீங்குவதற்கும், நான்காம் நாள் விழா நாற்கரணம் நால்வகைத் தோற்றம் நீங்கவும், ஐந்தாம்நாள் விழா ஐம்பொறிகள், ஐந்தவத்தை ஐந்து மலங்கள் நீங்கவும், ஆறாம் நாள் உற்சவம் உட்பகையாறும் கலையாதியாறும் கன்மமலகுணமாறும் பதமுக்தி ஆறும் நீங்கவும், ஏழாம்நாள் விழா ஏழ்வகைப் பிறப்பும், ஏழுவகைத் தத்துவங்களுமாகிய மலகுணமேழும் நீங்கற் பொருட்டும், எட்டாம்நாள் உற்சவம் எண்குணங்கள் விளங்கவும், ஒன்பதாம்நாள் உற்சவம் மூவடிவம் முக்கிருத்தியம், மூவிடத் துறைதலிலை என்ற பொருட்டும், பத்தாம்நாள் விழா சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைத்தாய், அந்தமிலின்பத்தழிவில் வீடான பரமானந்தக் கடலில் அழுந்ததற் பொருட்டும் செய்யப்படுவன" என பத்துநாள் திருவிழாக்கள் சுட்டுந் தத்துவத்தை மகோத்ஸவ விளக்க நூல் தனித்தனி விளக்கிக் காட்டியுள்ளது.

- பேராசிரியர். கா. கைலாசநாதக்குருக்கள்

## கும்பத்தின் அமைப்பு


பகிர்யாகத்தில், வேதியில் நடுக்கும்பத்தில் இறைவனையும் சுற்றியுள்ள கும்பங்களில் பரிவார தெய்வங்களையும் ஆவாகித்துப் பூசிப்பதுடன் சிவாக்கினியில் இறைவனை ஆவிர்ப்பவிக்கச்செய்து ஹோமம் நிகழ்த்துதல் வேண்டும். ஆகமவறிவினைத் துணைக் கொண்டு இறைவனை ஆவாகிக்கும் கும்பத்தை நோக்குமிடத்து அதன் அமைப்புப் பின்வருமாறு விளங்கும்: குடம் மாம்சம்; அதனுள் நிரம்பியுள்ள நீர் இரத்தம்; உள்ளே இடப்படும் இரத்தினங்கள் எலும்புகள்; சுற்றுப்பட்டுகளின் நூல்வரிசைகள் நாடிகள்; வஸ்திரம் தோல்; மந்திரம் பிராணன்; கூர்ச்சம் தலைமயிர்; மாவிலை சடை; தேங்காய் தலை; இதுவே கும்பத்தின் அமைப்பு.

-பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள்

அந்நாளில் நிலவிய தொண்டு மனப்பான்மை, கீழ்ப்படிதல், தன்னடக்கம் ஆகிய வீரனுக்கு உரிய பண்புகள் இன்று எங்கே போய்விட்டன? போருக்குச் செல்லும் வீரன் தன்னைத் தியாகம் செய்து கொள்கிறானேயன்றி, தனது நலத்தைக் கருதுவதில்லை. ஒருவன் மற்றவர்களுடைய இதயங்களின் மீதும் வாழ்க்கையின் மீதும், ஆணை செலுத்த வேண்டுமானால், முதலில் கட்டளைக்கு உட்பட்டு முன்னேறிச் சென்று தன் உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும்.

(சுவாமி விவேகானந்தர்)

# POLONNARUWA BRONZES AND SIVA WORSHIP AND SYMBOLISM.



**Extracts from an Account of the Nataraja and other Saiva Bronzes found at Polonnaruwa and now in the Colombo Museum, with an explanation of their symbolism and their relation to the Saiva Siddhanta system of philosophy. These speak of historical significance**
**by**
**SIR PONNAMBALAM ARUNACHALAM**

## I.

The Bronzes that I propose to speak about were discovered with others in the years 1907 and 1908 by the late Archaeological Commissioner, Mr. H. C. P. Bell, while pursuing his excavations in the "buried city" of Polonnaruwa, and are now in the Colombo Museum. It is, perhaps the most important find yet made by the Commissioner. Some of the principal images were unearthed near a Siva temple, popularly but erroneously called the Dalada Maligawa, or the Shrine of the Tooth Relic, and distinguished in Mr. Bell's Report (Sessional Paper No. V. of 1911) as "Siva Dewale No. 1". The other bronzes were found near a building which he has designated "Siva Dewale No. 5", (Sessional Paper VI. Of I913).

In February, 1909, I wrote for the late Director of the Museum, Dr. Willey, a short paper identifying the bronzes. It was published, with illustrations, in the Spolia Zeylanica of September 1909. Another description by Dr. A. K. Coomara Swamy (with illustrations) appeared in the Memoirs of the Colombo Museum, Series A, No.,, published in 1914. Other illustrations have been prepared for this Paper. None of the illustrations quite do justice to the originals. I am indebted to the present Director, Dr. Pearson, for permission to show some of the original bronzes to-day.

The Siva Dewale No. 1 is the choicest example of a Hindu temple found at Polonnaruwa, if not throughout the Island, and lies just south of the elevated quadrangle within which lie the ruins of Buddhist and Hindu shrines, combining the architectural features of Ceylon, South India and Cambodia in strange and not inharmonious grouping. The Dewale is all of carved stone, delicately fitted and wrought. "In almost every detail," says Mr. Farrer in his Old Ceylon, "the thing is perfect, and perhaps it is more than fancy that finds Hellenic memories in the purity of its line and the perfection of its proportions ...... Tradition calls this lovely jewel of stone-work, the Dalada Maligawa of Polonnaruwa asserting that this was the shrine of the Tooth Relic. Tradition here lies, for this temple is not Sinhalese but Tamil of the finest, it is not Buddhist but Hindu, it is not a shrine of the Tooth Relic but a temple of Siva the Destroyer. The Tooth Relic, we know, was treasured in the wata-da-ge, and in all probability this Saivite shrine, so beautiful and ornate, is some family chapel of Parakrama Bahu the Great, who, for all his cult of Buddhism and its ancient monuments, never swerved from the faith of his ancestors." The Court religion in Ceylon was usually Brahminical, the kings and nobles being closely connected by marriage and other ties with S. India. Parakrama Bahu himself was (as Mr. Still shows by an analysis of his ancestry) not more than 22/64 Sinhalese. The traditional name may be due, as Mr. Bell conjectures, to the building having been at some time or other used as a temporary resting-place of the Tooth Relic, pending its permanent lodgment in a Buddhist shrine worthy of its sanctity. Tradition also assigns the construction of the temple to King Kirti Nissanka, who seated himself on Parakrama's throne in 1198 A.D.

The temple is similar in plan and structure to, but more elaborated than, the Siva Dewale No. 5, or the better preserved shrine indicated in Mr. Bell's Report as "Siva Dewale No.2," but hitherto called Vishnu Dewale in spite of its obtrusive indications of Siva worship, the bull and the lingam still found there. That Siva Dewale No. I was also devoted to the same worship is conclusively established by the finding here of the bronze images described below as well as of the pedestal of a Siva lingam..

## II.

Before proceeding to a description of them, I will deal with their probable date. Mr. Rea (Superintendent of the Archaeological Survey, Southern Circle, Madras Presidency) declares the temples to be similar in outline to Chola and Pandya temples of the 11th and 12th centuries in India. The Siva Dewale No. 1 is, he says, generally more advanced in plan and Ornate architectural detail than the Siva Dewale No.2; the former, with its pilaster-lined walls and niches for images, somewhat resembles the detached Subrahmanya shrine in the great temple of Siva (Brihad-isvara) at Tanjore. This temple is a Chola structure of the 11th century, and the Subrahmanya shrine-a gem of South Indian Architecture-is ascribed by Ferguson to the 12th century, an opinion in which Mr. Rea concurs. He assigns the same date approximately to Siva Dewale No. 1. A short pillar-slab, inscribed with Grantha Tamil characters, unearthed in the hall (man-dapam) records . Arch. Commissioner's Report for 1907 (Sess Paper V of 1911 page 37) that it was set up by Lanka Vijaya Senevirat, a Sinhalese general, by order of King Gaja Bahu ll. (1242-1264 A.D.). Mr. Bell thinks this pillar was not originally connected with the temple, but brought later from elsewhere. In Siva Dewale No.2 there are three inscriptions cut on the walls in Grantha Tamil character which give a safer clue to the date. The longest of these inscriptions* records a grant of a lamp and lamp-stand to the temple, and that the temple authorities and servants hold themselves responsible for the keeping of the lamp alight for ever.t The date of the grant is mentioned as the reign (No. of the year missing) of Parakesarivarman alias Udaiyar Sri Adhirajendra Deva, a Tamil King of the Chola dynasty who ruled in South India circa IO7-IO73 A.D. His valour and greatness are described in the first nine lines of the inscription in ornate Tamil prose. One of the predecessors of Rajendra Chola I. (1029 to 1042 A.D.) is referred to in another of the inscriptions.

This was about the period when, according to the mahavansa, the rule of the Chola kings in Ceylon was at its zenith. The Sinhalese king Sena V., who ascended the throne at Polonnaruwa about 991A.D., having quarrelled with his commander-in-chief, had to take refuge in the Rohana country, leaving his capital in the hands of the Tamils. His successor, Mahinda V. (1001 A.D.), lived with great difficulty for 12 years at Anuradhapura and then was driven to Rohana. The Tamils had hitherto come mainly from the Pandyan kingdom of Madura, and whether as invaders, allies, rulers or colonists, had exercised a predominant influence in the Island. The rival Chola dynasty, whose seat was at Kanchipura, near Madras, was now in the ascendant. The king of Chola, hearing of the distracted state of the Island, sent an army which overran the whole country, captured and deported Mahinda to India (where he died 12 years later) and "stationed themselves in the city of Pulatti (Polonnaruwa) and held possession of the King's country even unto the Rakkhapsana place" (mahavans,a, LV. 21-23). Thenceforward the northern half of the Island was securely held for half a century as fief of the Chola kings until Vijaya Bahu I. (son of Mahinda) threw off the yoke (1065 A.D.). It is to this period of Cholian conquest, contemporaneous with the period in English history from Cnut to Willlam the Conqueror, that the Hindu temples of Polonnaruwa and the bronzes in question belong. One of the other inscriptions in Siva Dewale No.2 refers to a date about 8 years later than the victory of Vijaya Bahu. We may take it, then, that the bronzes are about eight and a half centuries old.

★★★

This is the gist of all worship – to be pure and to do good to others. He who sees Shiva in the poor, in the weak, and in the diseased, really worships Shiva; and if he sees Shiva only in the image, his worship is but preliminary. He who has served and helped one poor man seeing Shiva in him, without thinking of his caste, or creed, or race, or anything, with him Shiva is more pleased than with the man who sees Him only in temples.

**(Swami Vivekananda)**

To me the very essence of education is concentration of mind, not the collecting of facts. If I had to do my education over again, and had any voice in the matter, I would not study facts at all. I would develop the power of concentration and detachment, and then with a perfect instrument I could collect facts at will. Side by side, in the child, should be developed the power of concentration and detachment.

**(Swami Vivekananda)**

# கௌமார நெறியின் தோற்றமும் வளர்ச்சியும்

*திரு. கி. புண்ணியமூர்த்தி*
B. A (Dip. in Ed.)

முருகனை முழுமுதற் கடவுளாக வணங்கும் சமயம் கௌமாரமாகும். தமிழரின் முழுமுதற்கடவுளாகவும் முருகனைக் கொள்வதுண்டு. சிவனின் நெற்றிக்கண்களிலிருந்து புறப்பட்ட பொறிகளின் மூலம் சரவணப் பொய்கையில் முருகன் தோற்றம் பெற்றான் எனக் கந்தபுராணம் கூறுகிறது.

வேத இலக்கியங்களில் "பிரமணிய" என்னும் கருத்து முருக வழிபாட்டைக் குறிப்பதாகவே காணப்படுகிறது. புராணக் கதைகளில் அசுரர்களை அழித்து உலகை உய்விக்கும் பொருட்டே முருகன் தோற்றம் பெற்றதாகக் கூறப்பட்டுள்ளது. குஷானர், குப்தர், யௌதேயர் ஆகியோரின் காலங்களிலும் முருக வழிபாடு இருந்ததற்குரிய ஆதாரங்கள் உண்டு. இவர்களின் நாணயங்களில் முருகனின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. குப்தர் காலமளவில் கௌமார நெறி பரத கண்டமெங்கும் பரவியது. மன்னர்கள் பலரும் "குமார", "ஸ்கந்த" என்னும் பெயர்களைப் பெற்றார்கள். "குமார சம்பவம்" எனும் காளிதாசரின் புகழ்மிகு காவியம் இக்கால கௌமார நெறியின் வளர்ச்சிக்குச் சான்று பகர்கின்றது. தக்கணத்தில் குமாரக் கடவுளை " வப்பஸ்வாமி", "வப்பட்டாரகர் " என அழைத்தனர். குப்த நாணயங்களில் மயில் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

சங்க காலத்தில் கௌமார நெறி சிறப்புற்றிருந்தது. "சேயோன் மேய மைவரை உலகும்" எனத் தொல்காப்பியம் கூறி நிற்பதிலிருந்து இதனை அறிந்து கொள்ள முடிகிறது. ஐங்குறுநூற்றிலும், குறுந்தொகையிலும், அகநானூற்றிலும் வெறியாட்டம் பற்றிக் கூறப்படுகிறது. இவ் வெறியாட்டத்தில் ஆடுபவர் தன் கையில் வேலைக்கொண்டு ஆடுவதால் வேலன் எனப்பட்டார். குறுந்தொகையில் முருகக் கடவுளுக்கு ஆட்டைப் பலியாகக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. அகநானூற்றில் வேலுக்கு மாலை சூட்டி, சிவந்த தினை அரிசியை முருகனுக்குப் படைத்ததாகக் கூறப்படுகிறது. "வெல்லும் போரே வல்ல முருகன் " என மலைபடுகடாம் கூறுகிறது. சங்க இலக்கியங்களில் காணப்படும் "முருகு" என்ற சொல் முருகனையே குறிக்கிறது முருகனுக்குக் கோயில் இருந்ததாகப் புறநானூற்றில் கூறப்படுகிறது. திருமுருகாற்றுப்படையில் ஆறுபடை வீடுகள் பற்றிக் கூறப்படுகின்றது. கச்சியப்பர், அருணகிரிநாதர், குமரகுருபரர் போன்றோர் முருக வழிபாடுபற்றி விபரித்துக் கூறியுள்ளனர்.

பௌத்த கலாச்சாரத்தில் முருக வழிபாட்டின் செல்வாக்கு மிகுந்து காணப்படுகிறது. பௌத்தர்களின் " ஓம் படைக்கிழவி" யில் திரிரத்தினங்களோடு சிவன், விஷ்ணு, குமாரக் கடவுள் முதலியோரும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. திருச்செந்தூர்ப் புராணம் முருகனின் பெருமையை சிலாகித்துக் கூறுகின்றது. திருச்செந்தூர் ஆறுபடை வீடுகளில் ஒன்று. இது நக்கீரரால் துதிக்கப்பட்டதாகும். மேலும் சங்க இலக்கியங்களில் ஆல் கெழு கடவுளின் புதல்வன், மலைமகளின் மகன், கொற்றவையின் சிறுவன் எனும் பெயர்களால் முருகன் அழைக்கப்படுகின்றான்.

முருகனின் தோற்றத்தையும் வரலாற்றினையும் கந்தபுராணம் விரிவாகக் கூறுகின்றது. சிவாகமங்கள் இருபத்தெட்டில் காமிகம், காரணம், சுப்ரபேதம் ஆகிய ஆகமங்கள் முருகனின் வரலாறு பற்றிக் கூறுகின்றன. குமார தந்திரம் எனும் ஆகமம் முருகனின் வரலாறு, விழா, பூசை, விரதம் முதலியவற்றை விபரித்துக் கூறுகிறது. சண்மதங்களை வகுத்த சங்கரர் கூட ஒரு சிறந்த முருக பக்தர் ஆவார். இந்து சமயத்தின் ஆறு பிரிவுகளாலும் முருகன் போற்றப்படுவது சிறப்பம்சமாகும். முருக வழிபாடு பற்றிக் கூறும் ஏனைய முக்கிய நூல்களாக ஸ்கந்த புராணம், சுப்பிரமணிய புஜங்கம், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தர் கலி வெண்பா, கந்தர்சஷ்டி கவசம், கதிரைமலைப் பள்ளு, வேல் விருத்தம், மயில் விருத்தம் போன்றவற்றைக் கொள்ளலாம்.

'சிவ, உமை, ஸ்கந்த வடிவங்கள் ஒரு திருவுருவத்தில் வெளிப்படும் வடிவம் சோமாஸ்கந்தர் வடிவமாகும்'. இவ்வமைப்பு பல்லவ ஓவியங்களிலும் ஏனைய தமிழகச் சிற்பங்களிலும் காணப்படுகிறது. சோழர் காலத்திற்குரியனவாகக் கண்டெடுக்கப்பட்ட பொலநறுவைப் படிமங்களிலும் இவ் வடிவம் காணப்படுகின்றது.

முருகனுக்குரிய வழிபாட்டுத் தலங்களாகச் சோழர் காலத் கடம்புமலை, பாலசுப்பிரமணியர் கோயில், ஆறுபடை வீடுகள் என்பன தமிழ் நாட்டிலும், நல்லூர், மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி, மண்டூர், வெருகல், சித்தாண்டி, திருக்கோயில், கதிர்காமம், குமாரபுரம் போன்றவற்றை ஈழத்திலும் குறிப்பிடலாம்.

தென்கிழக்காசிய நாடான சம்பாவில் முருகனை 'கார்த்திகேய குமர' எனும் பெயரால் வழிபட்டனர். இதுவரை கண்டெடுக்கப்பட்ட முருகனின் உருவச்சிலைகள் இரண்டில் வாகனமாக மயிலும் வேறு இரண்டிலே காண்டாமிருகமும் காணப்படுகின்றன. பொதுவாக யானை, மயில், சிங்கம், மகரம் என்பதையும் முருகனது வாகனங்களாகக் கொள்ளப்படுகின்றன. முருகனுக்குரிய ஆயுதங்களாக வஜ்ஜுராயுதம், கத்தி, கோழி, வரதம், யபமாலை, ஸ்விஸ்திகம், கேடயம், கரும்பு, வில், சூலம், பரசு, ஆரணிக்கட்டை, சக்கரம், அங்குசம், பாசம் என்பன காணப்படுகின்றன. முருகனுக்குரிய மாலைகளாக, புஸ்பமாலை, அரை நூல் மாலை, தாமரை மாலை என்பன காணப்படுகின்றன. முருகனுக்குரிய முத்திரைகளாக அபயம், லோவம் என்பன உள்ளன.

முருக கடவுளின் வடிவங்கள் பதினேழு உள்ளன. அவையாவன: சுப்பிரமணியர், ஸ்கந்தர், அக்கினியாதர், சௌரமேயர், காங்கேயர், சரவணோத்பவர், கார்த்திகேயர், குமாரர், ஷண்முகர், தாரகாரி, சேகானீ, குகன், பிரமஹஸாரி, தேசிகர், கிரௌசர், மயில்வாகனர், வேலாயுதர் என்பனவாகும்.

முருகனின் பிரதிமா லட்சணத்தைப் பார்ப்போமானால் அழகிய இளைஞனாகக் காட்சியளிக்கும் குமரன் ஆறுமுகங்களும், பன்னிருகைகளும், வேற்படையும் உடையவனுமாய் வள்ளி,

தெய்வானை எனும் தேவியரை இரு மருங்கிலும் வைத்து படமெடுத்த நாகத்தின்மேல் நின்றாடும் மயில்வாகனத்தில் அமர்ந்த தோற்றத்தில் செந்நிறமாகக் காட்சியளிக்கிறார்.

### *தத்துவ சிந்தனைகள்*

முருகனின் ஆறு முகங்கள் ஆறு அத்துவாக்களை விளக்குவனவாக உள்ளன. அத்துவாக்கள் என்பது ஆன்மாக்களின் மலங்களை நீக்கி முத்தியின்பத்தைக் காட்டும் வழியைக் குறிக்கும். அவையாவன: மந்திராத்துவா, பதாத்துவா, வருணாத்துவா, புவனாத்துவா, தத்துவாத்துவா, தலாத்துவா என்பனவாகும். இவ் அத்துவாக்களுக்குள் அடங்கும் கலைகளும், மந்திரங்களும் பதங்களும் யாவுமே ஆறுமுகப்பெருமானிடத்தில் அடங்கியுள்ளதாக குமரகுருபர சுவாமிகள் தமது கந்தர் கலிவெண்பாவில் கூறியுள்ளார். குமரனின் ஆறு அழகிய முகங்களும் ஆறு குணங்களை எடுத்துக் காட்டுவதாகவும் கூறுவர். ஆறு குணங்களாவன: முற்றுணர்வு, வரம்பிலின்பம், இயற்கையுணர்வு, தன்வயமுடைமை, பேரருள், வரம்பிலாற்றல் என்பனவாகும்.

முருகனின் தோற்றமும் அவனது வரலாறும் சைவ சித்தாந்தத்துடன் தொடர்புபடுத்தப்பட்டு ஆராயப்படுகின்றது. திருவருள் வடிவமான முருகன் அசுரர்களை அழித்தமை ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்களை அழித்ததாகவே கருதப்படுகிறது. ஆன்மா திருவருள் பெறுவதற்கு முதலில் மாயையிலிருந்து விடுதலை பெறுதல் வேண்டும். இதனை விளக்குவதற்கு பத்தாயிரத்து முந்நூற்று நாற்பத்தைந்து (10,345) பாடல்களைக் கொண்ட கச்சியப்பரின் கந்தபுராணம் தாரகாசுர வதத்தை எடுத்துக் கூறுகிறது. சிங்கமுகன் கன்ம வினையின் பிரதிரூபமாகக் காட்டப்படுகிறான். வினைகளில் நல்வினைகளும், தீவினைகளும் இருப்பதற்கு அடையாளமாகச் சிங்கமுகனிடம் நற்பண்புகளும் தீயபண்புகளும் காணப்பட்டன. முருகப் பெருமான் முழுமுதற் கடவுளான சிவனே என்பதனையும் அவரை வெல்லல் இயலாது என்பதனையும் ஞானவானாகிய சிங்கமுகன் உணர்ந்திருந்தான்.

ஆணவத்தின் முழுவடிவமாக சூரபன்மன் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறான். குமாரக் கடவுளின் ஞானசக்தியால் வீழ்த்தப்பட்ட சூரபன்மன் அழியாது வேலும் மயிலுமாக வருவதும் பணிந்து நிற்பதுமாகிய செய்திகள் அழிவுறாத ஆணவம் இறுதியில் அடங்கி ஒடுங்கும் நிலையைப் புலப்படுத்துகின்றன. ஆணவம் வலி ஒடுங்கிய நிலையில் திருவருள் பதித்தலாகிய சத்திநிபாதம் நிகழ ஆன்மா பேரின்பப் பெருவாழ்வு பெறும் நிலை கைகூடுமென்பதனை சூரபன்மனின் வரலாறு எடுத்துக் கூறுகிறது. கந்த புராணம் சிறந்த காவியமாக மட்டுமன்றி சிறந்த பக்தி இலக்கியமாகவும், திகழ்கிறது. இதில் பக்திக் சுவை மாத்திரமன்றி வீரம், சிருங்காரம், அவலம் முதலிய சுவை நிறைந்த பாடல்களும் உண்டு.

முருகனின் திருவுருவம் அருவமும் உருவமுமாகி நிற்கும் தன்மையையே காட்டுகிறது. தந்தைக்கு ஞான உபதேசம் செய்த ஞானபண்டிதனான முருகன் மகிழ்ச்சியைக் கொடுப்பனவாகவே உள்ளான். இவனது வேல் ஞானத்தைக் குறிக்கும் சின்னமாகவே உள்ளது. வள்ளியம்மை இச்சாசக்தியாகவும், தெய்வயானை கிரியா சக்தியாகவும் கருதப்படுகிறார்கள். அத்துடன் வள்ளி ஆன்மாவாகவும், முருகன் குருவாகவும், வேடர்கள் ஐம்புலன்களாகவும் தத்துவ நோக்கில் கொள்ளப்படுகின்றனர்.

### *வழிபாட்டுமுறைகள்*

முருக வழிபாடு ஆகமம் சார்ந்த வழிபாடாகவும், ஆகமம் சாராத வழிபாடாகவும் இடம் பெற்று வருகிறது. ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறைகளாக நித்திய கிரியை, நைமித்திய கிரியை, காமிக பூசை என்பன நிகழ்த்தப்படுகின்றன. ஆகமம் சாராத வழிபாட்டு முறைகளாக பூசாரியைக் கொண்டு வழிபாடியற்றல், வாய்கட்டிப் பூசை செய்தல், குருவையிட்டு அவன் புகழ் பாடுதல், தோரணம், மணி, கதம்பமாலை முதலியவை கொண்டு அலங்கரித்து வழிபடல், விழா எடுத்தல் என்பன இடம்பெறும்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் ஆகம முறைப்படி அமைக்கப்படாவிட்டாலும் அங்கு ஆராதனைகள் ஆகம முறைப்படியே நிகழ்த்தப்படுகின்றன. இது திருப்படைக் கோயில் போன்ற அமைப்பில் பதினைந்தாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது. கதிர்காமம் புராதன முருக வழிபாட்டுத் தலமாகும். இங்கு மிகப் பெரிய கோபுரமோ, ஆலய மண்டலங்களோ, மூலத்தான விக்கிரகமோ, மந்திர ஒலிகளோ இல்லை. 'கப்புறாளை' எனப்படுவரால் வாய்கட்டி மௌனபூசை நிகழ்கிறது. இது பௌத்த வழிபாட்டுத் தலமாகவும், புனித நகரமாகவும், காவற்தெய்வம் குடிகொண்ட கோயிலாகவும் உள்ளது. முருகன், விநாயகர், விஷ்ணு, தெய்வயானை, வள்ளி, முத்துக்குமார சுவாமி ஆகியோருக்கு இங்கு தனித்தனிக் கோயில்கள் உண்டு. எனினும் ஆகமம் சாராத வழிபாடே இங்கு இடம்பெற்று வருகிறது.

### *முருக விரதங்கள்*

#### *(அ) கந்தசஷ்டி விரதம்*

இவ்விரதம் ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையை அடுத்து வளர்பிறை பிரதமை முதல் சஷ்டி ஈறாகவுள்ள ஆறு தினங்களும் அனுஷ்டிக்கபடும். 'சங்கரன்பிள்ளை சட்டியிலே மா வறுத்தார்' என்பார். ஆணவ வடிவமாகிய அசுரனை அறிவுமயமாகிய ஆறுமுகன் அடக்கியதைச் சுட்டுவதே கந்தர் சஷ்டி விரதமாகும். இவ் விரதம் அனுஷ்டிக்கப்படும் ஆறு நாட்களின் போதும் மக்களின் மனதிலுள்ள காமம், வெகுளி, ஈயாமை, மயக்கம், செருக்கு, பொறாமை எனும் ஆறு பகைகளும் அழிக்கப்படுகின்றன.

#### *(ஆ) வெள்ளிக்கிழமை விரதம்*

வெள்ளி விரதம் ஐப்பசி மாதத்து முதல் வெள்ளி தொடங்கி பிரதி வெள்ளிக்கிழமை தோறும் அனுட்டிக்கப்படும்.

#### *(இ) கார்த்திகை விரதம்*

கார்த்திகைப் பெண்கள் பாலூட்டியதால் முருகவேள் கார்த்திகேயன் எனப் பெயர்பெற்றார். இதனால் கார்த்திகை நட்சத்திர நாள் விரதநாள் ஆயிற்று. கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திர நாளன்று முதலாகத் தொடங்கி மாதந்தோறும் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் அன்று இல்லங்களிலும் ஆலயங்களிலும் விளக்கீடு நடைபெறும். கோயில்களில் இத்தினத்தில் சொக்கப்பானை கொழுத்தி மகிழ்வர்.

இவ்விரதங்களைத் தவிர சூரன்போர் விழா, ஆடித்தேர்த் திருவிழா என்பனவும் முருகனுக்குரிய விழாக்களாக இடம் பெறுகின்றன. இவ் விழாக்களில் காவடி, கற்பூரதீபம், மாவிளக்கு என்பனவும் முதன்மை பெறும். எனவே முருகனை வழிபட்டு பக்தி நல்லெண்ணம், விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, சகோதரத்துவம், ஐக்கியம் முதலிய உறவுகளை வளர்த்துக் கொள்வோமாக.

# சமய வாழ்வு என்பது . . . .

செல்வி. அமுதினி இராமச்சந்திரன்
*( யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)*

*"வழங்கி வரும் திருமுறைகள் காட்டும் வழி
நல்லவழி என்பதை நாம் உணர்ந்துவிட்டால்
பழியேது, பாவமேது இப்புவியில்
பகையொழித்துப் பக்குவமாய் வாழலாமே".*

நாம் எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வழிகாட்டி நிற்கின்ற சமய நூல்களான திருமறைகள் கூறும் வழி நின்று வாழ்ந்தால் தமது வாழ்வில் துன்பம் ஏது? துயரம் ஏது? இன்பமே அல்லவா மேலோங்கி நிற்கும்.

சமய நூல்களை வாசித்து அறிந்து அதுபற்றி விளக்கம் அல்லது பிரசங்கம் செய்து கொண்டிருப்பது சமய வாழ்வு அல்ல. சமய வாழ்வு என்பது சமய நெறி வகுத்த வழியை நன்கு உணர்ந்து அதன்படி செயல்படுவதே ஆகும். ஒரு சில சமய நூல்களை மனப் பாடம் செய்து விட்டு அதைப்பற்றி அழகாகப் பிரசங்கம் செய்வது சமய வாழ்வல்ல. இதைப் பல நூல்களைக் கற்றுப் பெற்ற அறிவால் கடவுளை அறியமுடியாது. ஆன்மீக சக்தியாலேயே இறைவனை அறியலாம் என்று அழுத்தம் திருத்தமாக யோகி அரவிந்தர் கூறியுள்ளார். ஆம்! நூல்களைக் கற்றால் மட்டும் போதாது. அவற்றில் கூறப்பட்டுள்ள தத்துவ உண்மைகளை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

சமய நூல்களில் இப்படித்தான் கூறப்பட்டுள்ளது என்று மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுமுன் தான் அவ்வழியில் நடக்கின்றேனா எனத் தனது மனச்சாட்சியிடம் கேட்டுக் கொள்ள வேண்டும். சொல்வது ஒன்று. செய்வது வேறொன்றாக இருந்தால் சொல்லும் பொருளுக்கே அர்த்தமில்லாமற் போய்விடுவது மட்டுமல்ல கேலிக்குரியதாகவும் ஆக்கிவிடும். இப்படியான நிலைமை சமய நம்பிக்கையைக் களைந்துவிடும் செயலாகவும் அமைந்து விடும்.

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும் என்றார் ஒரு கவிஞர். நூலறிவைக் கொண்டு மற்றவர்களுக்குப் பிரசங்கம் செய்வதில் பயனில்லை. கற்றறிந்ததை உள்ளத்திலே இருத்தி அதிலுள்ள உண்மைகளை நன்குணர்ந்து அதன்படி தன் வாழ்வையும் அமைந்துக்கொண்ட பின்னரே மற்றவர்களுக்கு நல்லறிவைப் புகட்ட முற்பட வேண்டும். அதுதான் நல்லறிவின், நற்பண்பின், சமய ஒழுக்கத்தின் அடையாளங்கள்.

இல்லறத்திலேயே துறவறம் பூண்ட இரண்டு மகான்களான இராமகிருஷ்ணபரமஹம்சரையும் மகாத்மா காந்தி அடிகளையும் உதாரண புருஷர்களாக நோக்குவோம். சொல்லுக்கும் செயலுக்கும் இடையே மாறுபாடு இல்லாத வாழ்வு வாழ்ந்து இன்றும் உலகத்தவரிடையே உன்னத நிலையில் வைத்துப் போற்றப் படுகின்றனர் அவர்கள். உள்ளத்தால் உணர்ந்து உதித்த அவர்களின் வாக்கு அருள் வாக்குகளாக அல்லவா இன்றும் விளங்குகின்றது? என்றுமே விளங்கவும் போகின்றது.

மனிதநேயத்தின் மகத்தான புருஷராக விளங்கிய விவேகானந்தரின் சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு இருந்ததா? உலக மக்கள் இனத்தால், மதத்தால், மொழியால், நாட்டால் வேறுபட்டிருந்தாலும் எல்லோரும் ஒரே இறைவனின் குழந்தைகளே என்று சிக்காக்கோ மகாநாட்டில் முழங்கினாரே விவேகானந்தர். அது இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவமல்லவா?.

இந்து என்றால் பிற உயிர்களுக்கு இன்னா அதாவது துன்பம் செய்யாதவன் என்றே உபநிடதங்கள் குறிப்பிடுகின்றன. பிற உயிர்களென்னும் போது இறைவனால் படைக்கப்பட்ட சகல சீவராசிகளும் அதில் அடக்கம்.

தனது உள்ளத்தில் உதித்த உண்மையான ஆன்மீக உணர்வால், அன்பு மயமான சொற்களால் உலகையே தன் வயப்படுத்திய ஒரு துறவியான விவேகானந்தர் வாளெடுத்துப் போர் செய்தா, அல்லது துப்பாக்கிமுனை மூலமா உலக மக்களைத் தன் பால் கவர்ந்தார். தான் கற்றுணர்ந்த உண்மையை, தனது குருநாதர் போதித்த தத்துவத்தைத் தெளிவாக எடுத்துக் கூறியதன் மூலம் உலக மக்களின் உள்ளங்களை வென்றார். பல்வேறு பிரிவினராக, பல்வேறு சமயங்களைப் பின்பற்றுபவர்களாக, ஒன்றுக் கொன்று முரண்பட்ட தத்துவங்களைக் கொண்டவர்களாக இருந்த சர்வ சமய மகாநாட்டிலே எல்லோரையும் சகோதரர்களாக, ஒரே இறைவனின் குழந்தைகளாக விழித்துப் பேசிய பேச்சல்லவா அவரை உலகம் பெருமிதத்துடன் நோக்க வழிகாட்டியது. அது மட்டுமா? நமது சமயம் என்று நாம் கூறிக்கொள்ளும் இந்து சமயத்தின் அடிப்படைத் தத்துவத்தை உலகம் உணர வழிவகுத்தது.

விண்ணையும், மண்ணையும், கோடானுகோடி உயிரினங்களையும் படைத்தவன் இறைவன். அவனொருவனே எங்கும் நிறைந்தவன். எல்லாம் வல்லவன். எல்லாம் அறிபவன். நம்மையெல்லாம் ஆட்டிப் படைப்பவனும் அவனே. அவனின்றி ஓரணுவும் அசையாது என்ற நம்பிக்கையுடன் நல்வழி நடந்து உயர்வு பெறவழி காண்போம். அற்ப ஆசைகளுக்காக, போட்டிப் பொறாமைகளை வளர்த்து பேதமையால் வாடாது உள்ளத்தால் இறைவனின் திருவிளையாடல்களை உணர்ந்து அவனையே சரணடைவோம். உயர்வு காண்போம்.

★★★

# இதிஹாசங்கள் காட்டும் நாகரிகம்

செல்வி ஷியாமளா பசுபதீஸ்வர சர்மா
நல்லூர், யாழ்ப்பாணம்

இந்துகளின் ஆரம்ப வாழ்க்கையிலிருந்து இன்றுவரை பெரும் நாகரிக வளர்ச்சியைக் காணக்கூடியதாக உள்ளது. முற்காலத்தில் வேதகாலச் சமுதாயமும் இதிகாச கால சமுதாயத்தையும் நாம் அறிந்துள்ளோம். இவற்றில் வேதகால சமுதாயத்தைவிட இதிகாச கால சமுதாயம் வளர்ச்சி அடைந்துள்ளது. வேத கால நாகரிகத்தை வேத உபநிடதங்கள் மூலமும் இதிசாச கால நாகரிகத்தை இராமாயணத்தின் மூலமும் மகாபாரதம் மூலம் காணலாம்.

இதிகாச காலத்தில் நகரங்களும் மக்கள் உடை உடுப்பவர்களாகவும், பொழுது போக்கும் அம்சங்களை ஆதரிப்பவர்களாகவும் புது விதமான போர் ஆயுதங்களைக் கண்டுபிடித்துப் போர்க் கலையை வளர்த்து வந்தனர். இதுமட்டும் இன்றி ஆடல், பாடல்கள் என்பவற்றிலும் ஈடுபட்டு வந்தனர். இதனால் இக் கலையும் வளர்ச்சி பெற்றது. இவ்வாறான வளர்ச்சியின் பயனால் மக்கள் பலவிதமான கருவிகளைப் பயன்படுத்தி உள்ளனர். யுத்த ஆயுதமாக அங்கி ஆஸ்ரம் வருனாஸ்ரம் போன்ற ஆஸ்ரம் பயன்படுத்தி உள்ளனர். பல வியூகங்களையும் பயன்படுத்தி வந்துள்ளதை நாம் அறியலாம். உதாரணமாக நாகவியூகம் கருடவியூகம் போன்றன.

> கடவுளிடம் நம்பிக்கை வையுங்கள். திட்டம் எதுவும் தேவையில்லை. அதனால் ஆகப்போவதும் ஒன்றுமில்லை. துன்பத்தால் வாடுகிறவர்களுக்காக இரக்கம் கொள்ளுங்கள். பிறகு உதவிக்காகக் கடவுளை நோக்குங்கள். உங்களுக்குத் தேவைப்படும் உதவி நிச்சயமாக வந்தே தீரும்.
>
> (சுவாமி விவேகானந்தர்)

கட்டடக் கலை, சிற்பக் பலை, ஓவியக் கலை போன்றன காணப்பட்டன. பல மாடிக் கட்டிடங்கள் இருந்தன. அவற்றில் நிலா முற்றங்களும் சாளரங்களும் இருந்தன. இவற்றின் சுவர்களில் ஓவியங்களும் சிற்பங்களும் செதுக்கப்பட்டிருந்தன. இதனால் இங்கு கலைஞர்கள் இருந்துள்ளனர். இவற்றைத் தவிர மக்கள் பொன், மணி, முத்து போன்றவற்றினால் ஆபரணங்கள் செய்து அணிந்துள்ளனர். மக்கள் அறுசுவை உண்டி வகைகளும் பதினெட்டு வகை சம்பல் மதுபானமும் தயாரித்து இருந்துள்ளனர்.

இந்து தர்மத்தைக் கடைபிடிக்கும் நிலை காலம் காலமாகக் காணப்பட்டது. வர்ணாச்சிரம தர்மம் சிறப்பாகக் கடைப் பிடிக்கப்பட்டது. தர்மத்தை உணர்ந்தவராகவும். சஸ்திரியர்களிற்கும் வைசிகர்களுக்கும் வழிகாட்டியாகப் பிராமணர் மதிக்கப்பட்டனர். இவர்களுடைய ஆதிக்கம் மேலோங்கியே காணப்பட்டது. தர்மசாஸ்திரம் இதிகாச காலப்பகுதியிலே எழுதப்பட்டது. நீதி தவறாத ஆட்சியே நடை பெற்றது. அரசவையை கல்வி கற்றவர்கள் அலங்கரிப்பதையே அரசன் விரும்பினான். அவர்களுடன் அரசன் அமைச்சர்கள் சேனாதிபதி தண்டத் தலைவர்கள் ஐம்பெருங் குழு அண்பேராயம் என்பவர்கள் அரசியல் அமைப்பில் இடம் பெற்றனர். தன் நாட்டில் வாழும் மக்களுக்குத் தன் படையாலும் கள்வராலும் தன் சுற்றத்தார் எவராலும் அயல் மன்னர்களின் படையெடுப்பிலிருந்து தன் மக்களை பாதுகாத்தான் என்பதை அறியலாம். அரசன் தன் நாட்டு மக்களைப் பாதுகாக்கவும் அவர்களது வருமானத்தில் 1/6 பங்கு வரியாக அறவிட்டான்.

> கிராமம் கிராமமாகச் சென்று மனித குலத்திற்கும் பரந்த இந்த உலகத்திற்கும் நன்மை செய். மற்றவர்களுக்கு முக்தியை வாங்கிக் கொடுப்பதற்காக நீ நரகத்திற்கும் செல்ல வேண்டும். மரணம் வருவது இவ்வளவு உறுதியாக இருக்கும் போது நல்ல ஒரு காரியத்திற்காக உயிரை விடுவது மேல்.
>
> (சுவாமி விவேகானந்தர்)

குற்றங்கள் இழைப்போர்க்கு நீதியின் அடிப்படையில் தண்டனை வழங்கப்பட்டது. மரண தண்டனை வழங்கும் நியதியும் காணப்பட்டது. ராஜ துரோகத்திற்கும் மரண தண்டனையே வழங்கப்பட்டது. பெண்கள், குழந்தைகள் ஆகியவர்கள் மீது கருணை காட்டப்பட்டது. செல்வமாகப் பசுக்கள் கருதப்பட்டன. வெள்ளி நாணயம் பதக்க நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன. விவசாயம், வியாபாரம், நெசவு, மரவேலை, வைத்தியம் ஆசிரியத்தொழில் என்பன காணப்பட்டன. பண்டமாற்று முறையும் காணப்பட்டதோடு கூட்டுறவான வாழ்க்கையும் மக்களிடம் பரவி இருந்தது.

குருகுல வாசம் மூலமே கல்வி கற்கப்பட்டது. அரச குமாரர்கள் பெரும் வகுப்பினர் கல்வி பயின்றனர். இங்கே வேத உபநிடதக் கல்வி போதிக்கப்பட்டது. பெண்களும் கல்வி கற்று திகழ்ந்தனர். ஆன்மா ஈடேற்றத்திற்கு இக்கல்வி உதவும் என நம்பினர். தெய்வ வழிபாட்டில் விக்கிரகங்கள் இடம் பெற்றன. முக்கியமாக அவதார புருஷர்களான இராமர், கண்ணபிரான் அவதாரங்கள் போற்றப்பட்டன.

வேள்வி, யாகம், தீர்த்தயாத்திரை போன்றன சிறப்பாக இடம் பெற்றன. கிரிகைகளை விட பக்தியே சிறந்ததாகப் போற்றப்பட்டது. சமுதாய வளர்ச்சி பெரும்பங்கை பத்தி வைராக்கியத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டது. ஆலய வழிபாடும் காணப்பட்டன. இதற்கு மக்கள் நீதி தவறாத ஆட்சியில் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் மனிதன் மனிதனாக வாழ வழி சொல்லும் இதிகாசங்களான மகாபாரதமும் இராமாயணமும் துணை புரிந்தன. இன்றும் மக்களிற்கு நல் வழிகாட்டியாக இருக்கின்ற இவை மக்கள் தோழனாகத் திகழ்வதில் ஆச்சரியம் இல்லை.

# இறை உணர்வும் மாயையும்

லோ. துஷிகரன்

*"அன்போடு உருகி அகங் குழைவார்க்கு அன்றி*
*என்போல் மணியினை எய்த வெண்ணாதே"*

(திருமந்திரம் – 27)

உள்ளத்தை உருக்கும் அன்பை நாம் இறைவனிடத்தே செல்லும் போது தான் எம்மால் இறைவனைக் காண முடியும். அன்பே சிவம் என்பார்கள் பெரியவர்கள். இதயத்துள் இதயமாக நின்று இயங்கும் இதயத்தை நம் இதயம் அறிவதில்லை. இந்த இதயத்தை அன்பின் உணர்வால் அறிய விழைவதால் வெற்றி கண்டார்கள் சிவனடியார்கள். இறைவன் உணர்விக்கும் உணர்வாக உள்ளவன்.

"ஆய்ந்த உணர்வின் உணர்வே" என்கின்றார் கம்பர் ஆரணிய காண்டத்திலே. நாம் கடவுளை வணங்குகின்றோம். அவனை வணங்கும் உணர்வைப் பெறுவதற்கும் அவன் அருள் எமக்கு இருக்க வேண்டும். இதனையே "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்று திருவாசகத்திலே மணிவாசகர் அழகாகக் கூறுகின்றார். இறை அருளை அறிய முடியாது; உணர்வினாலே உணரத்தான் முடியும்.

*"ஐயுணர்வு எய்தியக் கண்ணும் வயமின்றே*
*மெய்யுணர்வு இல்லா தவர்க்கு"*

என்கின்றார் வள்ளுவர். நல்லதோர் இசையை மற்றவர்கட்கு இப்படி என அறிவிக்க முடியாது. அவர் அவரால் உணரத்தான் முடியும். உள்ளத்தில் உதிக்கும் உணர்வு எல்லாவற்றையும் பிறர் அறியும்படி எடுத்துச் சொல்ல இயலுவதில்லை. இறையுணர்வும் இது போன்றதே. இதைத்தான் மணிவாசகர் தனது திருவாசகத்திலே

*"தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்"*

என்கிறார்.

மனிதனின் உணர்வின் வழியேதான் குணங்கள் வளர்கின்றன. பிறக்கும் போது மனிதர்களுக்குள் இரு குணங்களே காணப்படுகிறது.

வித்தியா குணம், அவித்தியா குணம் என்பன அக்குணங்களாகும். அவற்றிலே வித்தியா குணம் என்பது எம்மை முத்தியை அடைவதற்கு வழிகாட்டுவது. அவித்தியா குணம் எம்மை உலகப் பற்றுக்குள்ளாக்க வல்லது. ஆரம்பத்திலே இரு குணங்களும் சமமாகவே காணப்படுகின்றது. பின் எமது உணர்வின் வழி அவை அவை தமது குணங்களின் வழி சென்று உயருகின்றது. பிறந்த பிறப்பின் பயனை அடையாது மாயை ஆகிய உலக இன்பங்களுள் சிக்கித் தவிக்கின்றது. சுவை எனும் இன்பத்தை நாடிச் சென்ற எலி, எலிப்பொறியில் சிக்கித் தவிப்பதைப் போன்று எமது ஆன்மா, வினைப் பயனுள் சிக்கித் தடுமாறுகின்றது. எமது பிறப்பின் நோக்கம் வீடு பேறு என்ற நிலையை அடைதலாகும். வீடு பேறு என்பது பிறவாத பேரின்பப் பெரு வீடு என்கின்றது சிவபுராணம்.

காந்தத்தால் இரும்பு கவரப்படவல்லது. ஆனால் இரும்பு கனமானால் காந்தத்தால் இரும்பு கவரப்பட மாட்டாது. காந்தம் போன்று கடவுளால் ஆன்மா கவரப்படுகின்றது. ஆனால் ஆன்மா மாயையுள் சிக்கி உணர்வினால் தடுமாறி கனத்தினால் அதிகரிக்கும் போது கடவுளால் கவரப்பட மாட்டாது.

ஒரு நீரோட்டத்தின் குறுக்கே தடியை பிடிக்கும் போது அது இரண்டு பிரிவுகளாகப் பிரிந்தோடுகின்றது. அதே போல் மாயை எனும் தடியால் ஆன்மாக்கள் ஜீவான்மா, பரமாத்மா என இரண்டு பிரிவுகளாகப் பிரிபடுகின்றன. ஆனால் ஆன்மா ஒன்றினோடு பந்தப்படுவதில்லை என்று வேதாந்தம் கூறுகின்றது. சரீரத்தின் மீது பற்றுவைத்தவர்களையே துன்பத்துக்குள்ளாக்கும். மற்றயவர்களை ஒன்றும் செய்யாது. புகை நான்கு சுவர்களுக்குள் இருந்து வெளிவரும் போது சுவரைக் கரியாக்குமே தவிர ஆகாயத்தை ஒன்றும் செய்யாது என்று உபதேசம் கூறுகின்றார் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

ஆன்மா பிரமத்தைக் காணவிடாது இடையிட்டு மறைக்கின்றது. குளத்தின் மேலே பாசி படர்ந்திருக்கும் போது நீர் தெரிவதில்லை. பாசியை அகற்றினால் நீரைக் காணலாம். அதே போல மாயையை அகற்றும் போது பிரமத்தைக் காணக் கூடியதாக இருக்கும். மாயை ஆற்றில் ஓடும் நீர் போன்றது. அதாவது இதை இயக்கசக்திக்கு ஒப்பிடலாம். பிரமம் தேங்கி இருக்கும் குளத்து நீர் போன்றது. இதை நிலைப்பண்புச் சக்திக்கு ஒப்பிடலாம். ஆனால் மாயா சக்தியை அகற்றும் போதுதான் நாம் பேரின்பத்தைக் காணலாம். அதாவது முத்தியைப் பெறலாம். முத்தி என்பது வீடு பேறு என்ற நிலையே ஆகும். மாயை என்பது முத்தியை குலைக்கும் சிற்றின்பம் ஆகும். இது ஆத்ம அபிவிருத்திக்கு இடையூறு விளைவிக்கும் காமம். இதைத் தவிர்க்கும் போதுதான் முத்தி என்கின்ற பேரின்பத்தை அடைய முடியும். இது சிற்றின்பங்கள் சூழ்ந்த உலகம். சிறிதளவாயினும் காம இச்சை தோன்றத்தான் செய்யும். புகை சூழ்ந்த அறையில் கரி படியத்தான் செய்யும் கவர்ச்சியின் மத்தியில் இருந்தால் ஆசையை அடக்க முடியாதுதான். இதனால் நாம் பக்தி மார்க்கத்தில் இருந்து புறம் தள்ளப் படுகின்றோம். தண்ணீரில் படகிருக்கலாம், ஆனால் படகினுள் தண்ணீர் வந்தால் ஆபத்துத்தான். நாம் சிற்றின்பங்களுக்கு இடையில் இருக்கலாம். ஆனால் எமக்குள் சிற்றின்பங்கள் வரககூடாது. கொள்கலனில் சிறிய துவாரம் இருந்தாலும் நீர் முழுவதும் வெளியேறி விடும். காம இச்சை இருந்தால் தவமெல்லாம் சிதையும். இச்சையை நன்றாக அடக்கும் போது உடலில் ஒரு வித மாறுபாடு ஏற்படும். இந்திரிய சக்திகள் ஆத்மீக சக்திகளாக மாறும். "மேதை" என்ற ஓர் தன்மை வளரும். பின்னர் சிறிது சிறிதாக உயர்ந்து "ஞானம்" என்ற நிலையை உண்டாக்கும்.

அழுக்கான கண்ணாடியில் வெளிச்சம் பிரதிபலிப்பதில்லை. அதே போன்று மாயை படைத்த மனங்களிலே கடவுளும் பிரதிபலிப்பதில்லை. எனவே மாயையை விலக்கி வீடு பேறு என்ற நிலைக்கு முயற்சிப்போம்.

# குடமுழுக்கு

*செல்வி க. காந்திமதி B.A. Dip.in Ed.*

கும்பாபிஷேகத்திற்கு குடமுழுக்கு என்றும் பெயர். கோபுரத்திலுள்ள குடம் போன்ற கலசத்திற்கு மந்திர சக்தி ஏற்பட்ட குடநீரால் முழுக்காட்டுவதைக் குட முழுக்கு என்று சொல்வர். புதிய கோயில்களில் மூர்த்திகளைப் பிரதிட்டை செய்யும் காலங்களிலும் கோயில்களைப் புனருத்தாரணம் செய்யும் காலங்களிலும் குடமுழுக்காட்டுவார்கள். கோயிலுக்கு மேலும் மேலும் இறையருட் சக்தியைக் கூட்டுவதற்காகப் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் குடமுழுக்குச் செய்வார்கள்.

கடவுளை லிங்கம் முதலியவற்றிலே வழிபடுவது போலக் கும்பத்திலும் வழிபடலாம். கும்பம் உடம்பின் பாவனை. அதிலே சுற்றிய சீலை = தோலாகும். நூல் = நாடிகள்; குடம் = தசை. தண்ணீர் = இரத்தம். அதனுள் இடப்படும் இரத்தினம் = எலும்பு. தேங்காய் = தலை. மாவிலை = தலைமயிர். தர்ப்பை = குடும்பி. அதிலே பதிக்கப்பட்ட மந்திரம் உயிர்.

கடவுளை வழிபடுதற்குரிய இடங்கள் மூன்று. அவையாவன: (1) கோயில், (2) சிவஞானிகள், (3) இருதயம். இவற்றுள் சிவஞானிகளுடைய திருமேனியைக் காண்பது மிக அரிது. அதை ஒரு பிறவியிலே ஒரு முறையேனும் காண மாட்டாமலிருந்தலுமுண்டு. இருதய வழிபாட்டிலே கண் முதலிய பொறிகளேனும் தலை முதலிய அங்கங்களேனும் தொழிற்படமாட்டா. இவைகள் சிவத்தொண்டிலே சென்றால் மாத்திரம் தீய வழியில் செல்லாமல் நிற்கும். ஆதலால் மூவகை வழிபாடுகளுள்ளும் எங்களுக்கு மிகப் பொருத்தமானது கோயில் வழிபாடே. கோயிலானது பாதகன் முதல் சிவஞானி ஈறாக உள்ள யாவருக்கும் அவசியமானது. ஞானிகளுடைய வருகையினால் கோயில்கள் சக்தியுடையவைகளாகின்றன.

மேலும் ஆலயங்கள் குடமுழுக்குப் போன்ற உற்சவங்களினால் சக்தி பெறுகின்றன. உற்சவம் என்ற சொல்லுக்குப் பல கருத்துக்கள் உண்டு. உத்-மேலான, சவம் – ஐந்தொழில். உத்-ஞானம், சவம்-போகமோட்சம். மேலான ஞானத்தையும் போக மோட்சத்தையும் கொடுப்பதென்பது கருத்து. சிவபெருமான் ஐந்தொழில்களையுஞ் செய்து உயிர்களைக் காக்கும் முறையைத் திருவிழாக்கள் வெளியிடுகின்றன. இவற்றுள் கொடியேற்றம் வரையுள்ள கிரியைகள் படைத்தலையும், வாகனத் திருவிழாக்கள் காத்தலையும், தேர்த்திருவிழா அழித்தலையும், மௌனோற்சவம் மறைத்தலையும், தீர்த்தம் அருளலையும் குறிக்கும்.

மனிதன் ஒவ்வொருவனும் அறிவு, இச்சை, செயல் என்ற மூன்று இயல்புகளையும் உடையவனாய் வாழ்கின்றான். இவை மூன்றும் இல்லாத மனிதன் இலன் என்றே கூறலாம். ஆலயங்கள் அனைத்திலும் மனிதனுடைய அறிவு இச்சை செயல் மூன்றுக்கும் உணவளிக்கும்படி மூவகை முறைகள் கையாளப்படும். அவை ஆலய அமைப்பு முறை ஆராதனை முறை, தரிசனமுறை என்பனவாம்.

ஆலயக் கட்டிடங்கள், அதன் பல அங்கங்கள், மண்டபங்கள், பிரகாரங்கள் முதலியனவும் அங்குள்ள விக்கிரகங்கள் அவற்றிற் கேற்பட்ட இடங்கள், யந்திரங்கள், பிரதிஷ்டைகள் முதலியனவும் அமைக்கப்பட்டிருக்கிறவிதம் ஆலய அமைப்பு முறையாகும்.

அர்ச்சகர் குருக்கள் முதலியோர் அங்கு பூஜை இயற்றும் முறை ஆராதனை முறையாகும். அடியார் சென்று வழிபடும் முறையெல்லாம் தரிசன முறையெனப்படும்.

இந்த மூன்று முறைகளும் தனித்தனியே அறிகுறிப் பொருள், அருள் நெறிப் பொருள், அனுபவப் பொருள் என மூவகைப் பொருள்களைக் கொடுக்கும். அறிகுறிப் பொருள் அடியாருடைய அறிவைப் பெருக்குவது. அருள் நெறிப் பொருள் அடியாருடைய இச்சையைப் பயன் படுத்துவது. அனுபவப் பொருள் அடியாருக்கு மன அமைதியையும் சாந்தியையும் ஆன்ம முன்னேற்றத்தையும் அளிப்பது.

அணு முதல் அண்டம் வரையுள்ள யாவுமே உயிருள்ளன என்பது இந்து மதக் கொள்கை. உயிரானது உலோகங்களில் உறங்குகின்றது. தாவரங்களில் கனவு காண்கின்றது. விலங்குகளில் நனவு காண்கின்றது. மக்கள் தேவரிடத்து அது விழிப்புடன் பகுத்தறிவும் உடையது.

ஒருவன் தன் பூத உடம்மைத் தானாகக் கொண்டு அதுவே தானாக உணர்ந்து ஒழுகும்போது அவன் பூதான்மா அல்லது தேகான்மா எனப்படுவன். பரா, பச்யந்த், மத்யமா வைகரீ என்னும் வாக்கை அவற்றிற்கு ஆதாரமான தன் இச்சைகளையும் விருப்பு வெறுப்புக்களையும் தானாக ஒருவன் கொள்ளும் போது அவன் அந்தரான்மா ஆவன். பிருதுவி முதல் புருடதத்துவம் வரையுள்ள ஆன்ம தத்துவங்களை அதாவது அவற்றை அழியுங் கருவியாகிய மனத்தையே தானாக ஒருவன் உணரும்போது அவன் தத்துவான்மா எனப்படுவன்.

மேற் சொன்ன யாவற்றையும் நான் அடக்கியாளக் கூடியவன் என்ற உணர்வு ஒருவனுக்குப் பிறந்து அதனால் நான் பிரம்மம் என்ற ஆணவ முனைப்பு ஏற்படும்போது அவன் முக்குணவசப்பட்ட ஜீவான்மா ஆவன். பின்னர் அவன் யான் எனதென்ற பசு நிலையை நீக்கவும் பேரின்ப வீட்டைப் பெறவும் விரும்பி மந்திரோபாசனையில் ஒன்றிநிற்கும் போது மந்திரான்மா எனப்படுவன். முடிவில் அவன் இறைவனோடு உடனாய் இரண்டறக் கலந்து நிற்கும் நிலையில் பரமான்மா ஆவன். எனவே ஆன்மாவின் இந்த ஆறு நிலைகளையும் அறிகுறியாக உணர்த்துவதே சிவாலயங்களிலுள்ள

| | | |
|---|---|---|
| முன்கோபுரம் | – | பூதான்மா |
| மகாபலிபீடம் | – | அந்தரான்மா |
| கொடிமரம் | – | தத்துவான்மா |
| மூலவர் | – | சீவான்மா |
| ஆசாரியார் | – | மந்திரான்மா |
| பரவெளி | – | பரமான்மா |

என்பனவாம்.

தைத்திரிய உபநிடதத்தில் இவற்றை அன்னமய, பிராணமய, மனோமய, விஞ்ஞானமய, ஆனந்தமய என்று சொல்லப்பட்டுள்ளது.

ஆலயம் செல்வோர் வெகு தொலைவில் வரும்போதே முதன் முதல் காண்பது கோயிலின் உயர்ந்த கோபுரம். கண்டதும் உடனே அதனை வணங்குவர். ஆலயத்திலுள்ள இறை உருவங்களுக்கு அடியில் யந்திர ஸ்தாபனம் செய்யப்பட்டிருப்பதாலும் அவற்றை மாத்திரம் மக்கள் ஆண்டவன் கானபத்திய சின்னங்களாகவும் அருட் கருவிகளாகவும் அறிந்து எங்கும் வணங்குவர். யந்திரப் பிரதிஷ்டை இல்லாத விக்கிரகம் எஞ்சின் இல்லாத மோட்டார் வண்டி போன்றது.

"மனிதன் உடம்பல்ல ஆன்மா" என்ற உண்மையை இடைவிடாது நமக்கு ஞாபகமூட்டி நிற்பதே ஆலயத்தின் முன்கோபுரமும் உள்ளிருக்கும் மூலஸ்தான மூர்த்தியும் அறிகுறியாகச் செய்து வரும் முதல் வேலை. அதனால் அடியார் ஒவ்வொருவரும் ஆலயத்தினையும் கோபுரத்தையும் புறத்தே கண்டவுடனே "நான் இந்த உடம்பல்ல உள்ளிருக்கும் ஆன்மா" என்ற உண்மையை அறிவுறுத்திக் கொள்ளுதல் வேண்டும். பிறரைக் காணும் போது அவர்களையும் உடம்பாகக் கருதாது ஆன்மாவாகக் காணும் தன்மையை வளர்த்துக் கொண்டு வருதல் வேண்டும். அப்போது அது பிற உயிர்களிடம் அன்பைப் பெருக்கித் தனக்கு உயர்ந்த மனநிம்மதியைக் கொடுப்பதற்குரிய ஓர் உத்தம ஆத்ம சாதனமான அனுபவத்தில் காணப்படும்.

★★★

# எங்கும் நிறைந்தவன் இறைவன்

*செல்வி. ஸ்ரீ ஜனனி மனோகரன் - கொழும்புத்துறை*

உலகிலுள்ள சகல உயிரினங்களும், தாவரங்களும் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாதவற்றுள் முக்கியமானது காற்று. காற்றை வாயுபகவான் என்று இந்துக்கள் இறைநிலையில் வைத்துப் போற்றுகின்றனர். நிறமில்லாத, உருவமில்லாத காற்று உலகம் முழுவதும் வியாபித்திருந்து அதாவது நீக்கமற நிறைந்திருந்து உலகை இயக்குகின்றது.

இக்காற்றை வாயுபகவான் என்ற திருநாமமிட்டு இந்துக்கள் ஏன் போற்றுகின்றனர் என்பதைச் சற்றே ஆராய்ந் தால் உண்மைபுலப்படும். இறைவனின் சக்திகளுக்கு ஒவ்வொரு பெயரிட்டழைப்பது இந்துக்களின் மரபு.

அந்த வழியிலே இயற்கையின் பேரருளான காற்றையும் போற்றி நிற்கும் பண்பு இந்துக்களின் மரபு. எங்கும் நிறைந்த இறைவனின் பண்பு, செயற்பாடு அவனது ஒருசக்தியான காற்றின் வாயிலாகப் புலப்படுத்தப்படுகின்றது.

புல்லாக, பூடாக, புழுவாக, மரமாக பல்மிருகமாக, பறவையாக, பாம்பாக, மனிதராக எப்படிப்பட்ட உருவிலும் இந்த உலகிலே வாழும் சகல உயிர்களுக்கும் காற்று அவசியம். சடப்பொருள் இயங்க காற்றெனும் சக்தி அவசியமாகின்றது.

சுவாசிக்கும் தன்மை நின்றுவிட்டால் உயிர் சடப்பொருளான உடம்பைவிட்டுப் பிரித்துவிட்டது, இயங்கிய உருவம் சடலமாகிவிட்டது என்று கொள்ளப்படுகின்றது. சுவாசம் நின்றவுடன் உடலெனப்படும் சடப்பொருள் இயற்கையுடன் கலந்துவிடுகின்றது. இதை நோக்கும்போது காற்றின் முக்கியத்துவம் உயிர்வாழ எவ்வளவு அவசியம் என்பது புரிகின்றது.

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைசக்தியான வாயுவுக்கு மரம், செடி, கொடி, பறவை, விலங்கு, மனிதன் என்ற பேதமில்லை அல்லவா? பேதமில்லாத தன்மை தான் இறைசக்தி. இந்த வாயு எனும் இறைசக்தி உலகிலுள்ள சகல உயிர்களையும் இணைக்கும் மாபெரும் சக்தியாகும்.

சிந்தித்துப் பார்த்தால் வாயுபகவான் என்று இந்துக்கள் போற்றும் சக்தியின் பெருமை விளங்கும். ஆம், காற்றுக்குப் பேதமில்லை. இன, மத, நாட்டு பேதங்கள் மட்டுமல்ல எந்தவொரு உயிர்மீதும் பேதமின்றி அருளுகின்றது வாயு. அதுமட்டுமல்ல உலகையே இணைக்கின்றது.

ஒரு உயிர் உள்வாங்கி வெளியிடுங்காற்றை இன்னுமொரு உயிர் உள்வாங்கி வெளியிடுகின்றது. நல்லவனோ, கெட்டவனோ, எந்தச் சமயத்தவனோ ஏன் ஏனைய உயிரினங்கள் கூட உள்வாங்கி வெளியிடும் காற்று இன்னுமொரு உயிர்வாழ, சுவாசிக்கப் பேதமின்றி உதவுகின்றது. இரத்த ஓட்டத்திற்கு காற்று அவசியம். இரத்த ஓட்டத்தைச் செம்மைப்படுத்த பேதமின்றி உதவும் காற்றை இறைசக்தியாகப் போற்றும் இந்து உலகத்தையே உறவு முறையில் நேசிக்கின்றான்.

பிறப்பின் மூலமும், பிற உறவுகள் மூலமும் மட்டும் உறவு முறைபாராட்டும் மனித குலம் வாயு பகவானின் செயற்பாட்டால் ஒன்றாக இணைக்கப்படுகின்றது என்பதைப் புரிந்து கொள்வது நல்லது. பேதமில்லா பெருவாழ்வு வாழ வேண்டும் என்பது இந்து தத்துவம். அந்தத் தத்துவத்தை உணர்த்திநிற்கும் வாவு பகவானைப் போற்றி வணங்குவதன் தத்துவக்கருத்து இந்துக்கள் உலகையே ஒருகுடும்பமாகக் கொண்டு மகிழும் பான்மைக்கோர் எடுத்துக்காட்டு.

பேரருளாளனான இறைவன் தனது அருளைப் பேதமின்றி வழங்குகின்றான் என்பதற்கு வாயுபகவான் சான்றாக விளங்குகின்றமையைச் சிந்திப்போம். இதன்மூலம் எல்லோரும் ஓர்குலம் என்ற தத்துவத்தை மனதிலிருத்தி பேதமில்லாத பெருவாழ்வு வாழ வழிகாண்போம்.

# பரிவாரத் தெய்வங்கள்

*செல்வி . ப. கனகசூரியம்*
*B.A (Cey) Dip. IN Ed.*

பரிவாரத் தெய்வங்கள் இறைவனது பணியாளராய்த் தத்தமக்குரிய குற்றேவல்களைப் புரிந்து நிற்பன. இவை தத்தமது கடமையைச் செய்யச்சுற்றி நிற்கும் பரிசனங்களை ஒத்தன. அரசனது மாளிகையில் அவனைச் சூழ்ந்து பணியாளர் நிற்பது போன்றது இறைவனைச் சூழ்ந்து பரிவாரத் தெய்வங்கள் காணப்படுவது. இறைவன் வெளியே புறப்படும் பொழுதும் இப்பரிவாரத் தெய்வங்களும் உடன் செல்லும். கோவில் உள்ளேயும் வெளியேயும் இறைவன் அரசனுக்குரிய பெரும் உபசாரங்களுடனேயே விளங்குகின்றான். சைவாகமங்கள் இவைபற்றிக் கூறும். திருக்கோவிலுள் நுழைந்து அதன் அமைப்பினை நோக்கும் பொழுதுதான் பரிவாரத் தெய்வங்கள் வழிபாட்டில் வகிக்கும் நிலையினை உணரமுடியும்.

சைவ சமயத்தில் இன்றியமையா இடம் வகிப்பவள் தேவி. சிவனுக்கு இடதுபக்கத்தில் தனிக்கோவிலில் இடம் பெறுகின்றாள். இறைவனுக்கு இடப்பக்கத்தில் கணபதிக்கும் வலப்பக்கத்தில் கந்தவேளுக்கும் தனித்தனிக்கோயில்கள் இருக்கின்றன. வாயிலில் உள்ளே நுழைந்ததும் நந்திதேவரைக் காண்கின்றோம். வாயிலுக்கு அருகாமையில் கோவிலின் உட்புறத்தில் பாதுகாவலனாக இறைவன் சந்நிதியை நோக்கியவாறு வைரவர் காணப்படுவார். இறைவன் சந்நிதானத்திற் கெதிரே வலப்புறம் சூரியனும் இடப்புறம் சந்திரனும் இறைவனை எதிர்நோக்கி வீற்றிருப்பர். நவக்கிரகங்களும் பரிவாரத் தெய்வங்களே, சிவனின் அடியவர்களான அறுபத்து நான்மரும் நடராசப் பெருமானை நோக்கியவாறு தமக்கென நிறுவப்பட்ட தனிஅறையில் இடம்பெறுவர். கோயில் வாயிலில் காவல்புரியும் துவாரபாலகர்களும் பரிவாரத்தெய்வங்களே. இதுமட்டுமல்ல கோவிலை உருவாக்கப் பயன்படும் ஒவ்வொரு பொருளும் கோவிலில் உறுப்பாயமைந்ததும் தெய்வீகம் வாய்க்கப் பெற்றுத் திகழும். இந்திரன் போன்றோரை உருவமைக்கப்பெற்று வழிபடாது விடினும் உரியவேளைகளில் இவர்களும் பரிவாரங்களாகப் பூசிக்கப் படுகின்றனர்.

மேலும், காணபத்தியம், கௌமாரம், சௌரம், சாக்கும், வைஷ்ணவம் ஆகியவற்றை சைவம் உள்ளடக்கி அத்தெய்வங்களை பரிவாரங்களாக மேற்கொண்டது. இவ்வாறு இவை பரிவாரத் தெய்வங்களாக விளங்கியபோதிலும் அவை தனித்தனிக் கோயில்களில் அமைக்கப்பட்டு பெருந் தெய்வங்களாகவும் விளங்குகின்றன. சிவாலயத்தில் நந்தி காணப்படின் பிள்ளையார் கோயிலில் மூஷிகம் இடம்பெறும். சுப்பிரமணியர் கோவிலில் மயில் நந்தியின் இடத்தை வகிக்கின்றது. அம்மன் கோயிலில் சிங்கம். இத்தகைய கோயில்களில் சிவனுக்கும் சக்திக்கும் இடம் உண்டதெனினும் சிவமும், சக்தியும் பரிவாரத் தெய்வங்களாகக் கருதப்படமாட்டார்கள். பிள்ளையார் சுப்பிரமணியர் கோயில்களில் கூட சிவனுக்கும், சக்திக்கும் உயரிடம் உண்டு. இந்தியாவில் சுவாமிமலையில் உள்ள முருகன் கோயில் இதற்கு உதாரணம். இலங்கையில் கொழும்பில் உள்ள முத்துவிநாயகர் கோயில் இதற்கு உதாரணம். சிவாகமங்கள் அனைத்தும் சிவனை முக்கிய இடத்திலும் ஏனையோரைப் பரிவாரத் தெய்வங்களாகவும் சுற்றி அமைக்கும்படி விதித்துக் கூறுகின்றன. இதிகாச புராணங்களும் இந்நிலையினையே தெளிவாகச் சுட்டக் காண்கின்றோம்.

சக்தி பரிவாரத் தெய்வமாக விளங்கும் போது மனோன் மணியாக இருகரங்கள் அபயகரமாக விளங்கும். இவ்வுருவம் இவள் பரதந்திர சக்தியாக இறைவனின் பரிவாரத் தெய்வமாக விளங்கும் நிலையினையே சுட்டுகின்றன. சக்தி மனோன்மணியாக விளங்கும் போது சந்திரனின் நிறம் வாய்ந்தவளாகவும் மூன்று கண்களும், தலையில் சடாமகுடம் அழகுறுத்தவும், நான்கு திருக்கரங்களுள் பின் வலக்கரம் தாமரையைத் தாங்கவும் பின் இடக்கரம் தொங்கியும் நிற்கும் முன்னுள்ள வலக்கரமும் இடக்கரமும் அபய வரத கரங்களாக அமையும்.

சிவனது பரிவாரத் தெய்வங்களில் அடுத்து இடம் பெறுவது விநாயகர். அடுத்து சுப்பிரமணியரும் பரிவாரத்தெய்வமாகப் போற்றப்படுகின்றார்.

அடுத்து நந்தியும் சிவாலயங்களில் பரிவாரத் தெய்வமாகப் போற்றப்படுகின்றது. தென்னிந்தியக் கோயில்களில் பிரகாரங்களைக் கடக்குந்தோறும் பிரமாண்டமான உருவங்களையுடைய பல நந்திகளைப் படிப்படியாகக் கடந்து உள்ளே செல்கின்றோம். பூஜைக்கு உரிய நந்திதேவர் இறைவன் சந்நிதானத்தில் இறைவனுக்கு நேரே அமர்ந்திருக்கக் காண்கின்றோம். நந்தியின் உருவம் இடபத்தின் உருவத்தை ஒத்தது.

சிவாலயங்களில் விஷ்ணு பரிவாரத் தெய்வங்களில் ஒன்றாக விளங்கக் காண்கின்றோம். இவ்வாறு அமைக்கும் போது விஷ்ணுவின் விக்கிரங்களை நிறுவி வழிபடும் முறையினை சிவாகமங்கள் எடுத்துக்கூறுகின்றன. விஷ்ணுவின் உருவம் சிவாலயத்தில் விமானங்களிலும் கோபுரங்களிலும் தூண்களிலும் இடம் பெறக் காண்கின்றோம். இவ்வாறு இடம் பெறும் உருவங்கள் விஷ்ணு சிவனின் பரிவாரத் தெய்வம் என்னும் அடிப்படையிலேயே அமைகின்றன. இவ்வாறமையும் உருவங்களில் சிவபிரான் மாலுக்குச் சக்கரமருவிய நிகழ்ச்சியினைச் சித்தரிக்கும் சிற்பமும் இடம்பெறும்.

சண்டேசுவரரும் பரிவாரத் தெய்வங்களில் ஒன்றாகக் கருதப்படுவார். சைவாகம முறைக்கிணங்க அமையும் சைவ வழிபாட்டில் விநாயகருக்கு உரிய முக்கியத்துவம் சண்டேசுவரருக்கும் உண்டு. கிரியைகள் தொடங்கும் போது விநாயகரை வழிபடுதல் அவசியம். சிவபூசை முடிவில் சண்டேசுவரரை வழிபடுதல் வேண்டும். இவ்வாறு வழிபடாதுவிடின் சிவபூசை நிறைவு பெறாது.

சிவனின் சந்நிதானத்தில் மகா மண்டபத்திலோ அல்லது அதற்கு வெளியேயுள்ள மண்டபத்திலோ வாயிலில் இருபக்கங்களிலும் சூரியனும் சந்திரனும் பரிவாரத் தெய்வமாக விளங்கும். இவர்கள் இருவரது விக்கிரகங்களும் இறைவனை நோக்கியவாறே நிறுவப்படும். தினந்தோறும் பகலில் நிகழும் பூசை சூரிய பூசையுடனும் இரவில் நிகழ்வது சந்திரபூசையுடனும் தொடங்கும்.

வைரவரும் பரிவாரத் தெய்வமே. பிரதான வாயிலை அடுத்து எல்லா மண்டபங்களுக்கும் வெளியே வடகிழக்குக்கும், வடக்குக்கும் இடையில் வைரவர் கோவிலில் இடம் பெறுவார். வைரவருக்கு சேஷத்திரபாலகர் என்னும் பெயரும் உண்டு. சேஷத்திரம் என்பது கோயிலைக் குறிக்கும், பாலகர் என்பது காப்பவர் எனப் பொருள்படும். வைரவர் கோயில்காவலாளி. நாயை வாகனமாக உடைய இப்பரிவாரத் தெய்வத்தின் உருவம் பயங்கரம் வாய்ந்ததாக இருக்கும்.

நவக்கிரகங்களும் பரிவாரத் தெய்வங்களே. சூரியன் சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, இராகு, கேது என்பனவாகும். தீங்குகள் நிகழாது தடுப்பதற்காக நவக்கிரகவழிபாடு நிகழ்கிறது. புராணங்கள் செவ்வாயை முருகனாகவும், புதனை நாராயணனாகவும் இவ்வாறே ஏனைய கிரகங்களையும் தனித்தனித் தெய்வங்களுடன் தொடர்புபடுத்துகிறது. பெருந்தெய்வங்களே நவக்கிரக வழிபாடு நிகழ்த்தியதாகப் புராணங்கள் தெரிவிக்கின்றன.

சிவனடியாரின் செயற்கரிய செய்த பெரியார்கள் நடராசர் சந்நிதியில் இவர்களுக்கு ஆலயம் நிறுவி நித்திய நைமித்திய வழிபாடு நிகழ்ந்து வருகிறது. பெரிய புராணங்கூறும் விபரங்களுக்கேற்ப இவர்களது உருவங்கள் அமைக்கவேண்டும். இவர்கள் உயர்நிலை எய்திய தினங்களில் இவர்களுக்கு திருவிழாக்கள் நிகழ்த்துவர்.

மேலே குறிப்பிட்டவர்களை விட அநந்தர், சூக்ஷமர், சிவோத்தமர், ஏகநேத்ரர், ஒகருத்தர், திரிமூர்த்தி ஸ்ரீகண்டர், சிகண்டி – என்னும் அஷ்டவித்திபேறுகரர்களும், நந்தி, மஹா கானர், பிருங்கி, விநாயகர் விருஷயர், கந்தர், தேவிகண்டர் முதலிய சிவ கணங்களும் பரிவாரத் தெய்வங்களாகக் கருதப்படுகின்றன.

★★★

## ஆலயங்களுள் சிறந்தது

மானுட சரீரமே ஆலயங்களுள் மிகச் சிறந்தது என்று ஆன்றோர்களால் சர்வகாலமும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அண்டமெங்கும் குடிகொண்டிருக்கும் தெய்வம் சிறப்பாக மானுட சரீரத்தில் வீற்றிருக்கிறார். ஆனால் சரீரத்தினுள் தெய்வம் எழுந்தருளியிருக்கிறார் என்னும் கோட்பாட்டைப் பாமரர்கள் எளிதில் அறிந்துகொள்ள முடியாது. பாமரர்களுக்குப் பயன்படுதற் பொருட்டே ஆலயங்கள் அமைக்கப்பெற்றன. உலகிலும் உடலிலும் உள்ள தத்துவங்களை விளக்குவதற்கு ஆலயங்கள் வந்துள்ளன. நமக்குத் தோன்றியவாறெல்லாம் ஆலயங்களைக் கட்டலாகா தென்பதும், ஆகமங்கள் விதித்துள்ளபடியே அவைகளை அமைக்க வேண்டும் என்பதும் கோட்பாடு. அதற்குத் தக்க காரணமும் ஒன்று உண்டு. தேசப்படம் ஒன்றை நமக்குத் தோன்றியவாறு வரையலாகாது. முறையாக அமைந்த படத்தின் நகலாக ஏனைய படங்களை அமைக்கலாம். முறையாக அமைந்த தேசப்படமே இயல்பாக அமைந்துள்ள தேசத்தின் சின்னமாகும். மூல அமைப்பு ஆகிய தேசத்தின் வடிவைப் படம் முற்றும் ஒத்திருக்கின்றது. ஆகையினால் அது தேசப்படம் என்று அங்கீகரிக்கப்படுகின்றது.

-ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்.

★★★

## வாகனம்

துவஜ ஸ்தம்பத்துக்கு அடுத்தபடியில் இருப்பது தெய்வத்துக்குரிய வாகனம். சிவபெருமானுக்கு நந்தி வாகனம். மகாவிஷ்ணுவுக்கு கருடன் வாகனம். அம்பிகைக்கு சிங்கம் வாகனம். வாகனம் எதுவாயினும் அது ஜீவாத்மனைக் குறிக்கிறது. மூலப்பொருளாகிய கடவுளைப் பார்த்தவண்ணமாய் வாகனம் அமைந்திருக்கிறது. கடவுளைச் சென்றடைய வேண்டியது ஜீவாத்மாவின் குறிக்கோள். கடவுளைச் சென்றடைவதற்குச் சர்வகாலமும் மனது கடவுள் நாட்டத்திலேயே இருக்கவேண்டும் என்னும் கோட்பாட்டை வாகனம் விளக்கிக் கொண்டிருக்கிறது. சுற்றி வருகின்ற பக்தன் ஆலயத்தின் உள்ளிருக்கும் தெய்வத்தையும் அதைப் பார்த்தவண்ணமாயிருக்கும் வாகனத்தையும் சேர்த்து வைத்து வலம் வருகிறான். குறுக்கே நுழைவது முறையன்று. வழிபடுகின்ற அனைவர்க்கும் வழிபாட்டுக்கு ஒத்தாசை செய்ய வேண்டும். இடைஞ்சல் செய்யலாகாது என்பது அதன் கருத்து. பிறர்க்கு இடைஞ்சல் செய்கின்ற அளவு தானே வழிபாட்டுக்குப் புறம்பாய் விடுகிறான். பிறர் வழிபாட்டுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து வைக்குமளவு ஒருவன் தானே வழிபாட்டில் முன்னேற்றமடைய முடியாது. பிறர்க்குப் பணிவிடை செய்து யாரும் முன்னேற்றமடையலாம். இக்கோட்பாடு ஆலயவழிபாட்டில் அடங்கியிருக்கிறது.

- ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

# சங்கரரின் அத்துவைதமும் இராமானுஜரின் விசிஷ்டாத்துவைதமும்

*திருமதி. உ. சுரேந்திரகுமார்*
*யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி*

சங்கரரும் இராமானுஜரும் உபநிடதங்களின் சுருக்கமாகிய பிரம சூத்திரத்திற்கு உரை எழுதினர். சங்கரரது பிரம சூத்திர பாஷ்யத்தை அடியொற்றித் தோற்றம்பெற்றதே சங்கரரின் அத்வைதவேதாந்தம். இராமனுஜர் பிரமசூத்திரத்திற்கு எழுதிய உரை ஸ்ரீபாஷ்யம் என்று அழைக்கப்படுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்ட இராமனுஜவேதாந்தம் தோன்றியது. இவ்வாறு சங்கரரும் இராமானுஜரும் பிரமசூத்திரத்திற்கு விளக்கம் கொடுத்தாலும் அவர்களது கொள்கை வேறுபாடுகாரணமாக வேதாந்தம் கோட்பாடுகளும் மாறுபடுகின்றன.

இந்து தத்துவங்களுக்கு மூலமாக அமைந்த உபநிடதங்களில் மூலப்பொருள் ஒன்று என்றும் பல என்றும் பொருள்படும் வசனங்களும் காணப்பட்டன. சங்கரர் தமது கோட்பாட்டிற்கு மூலப் பொருள் ஒன்று என்ற கருத்தையே மூலமாக கொண்டார். இராமனுஜர் தமது கோட்பாட்டில் பொருட்கள் பல என்ற கொள்கை உடையவர். இவர் தமது கோட்பாட்டில் முப்பொருள் உண்மையை விளக்குகிறார்.

சங்கரர் உண்மைப்பொருள் ஒன்று அதுதான் பிரமம் ஏனைய யாவும் தோற்றம் அதாவது பிரமத்திற்கு வேறாக ஆன்மா என ஒருபொருள் இல்லை உலகமும் உள்பொருள் அல்ல எனக் கூறி ஒருமைக்கோட்பாட்டமை விளக்குகிறார். ஆனால் இராமனுஜர் அசித், சித், ஈஸ்வரன் என்ற முப்பொருள் உண்மையை விளக்கி அதில் ஈஸ்வரனே மேலான பொருள், உலகமும் ஆன்மாவும் ஈஸ்வரனுக்கு உடல்கள் இறைவன் அங்கி ஆன்மாவும் உலகமும் இறைவனுக்கு அங்கங்கள் என்று கூறி தத்துவத்திரயம் பேசுகிறார். சங்கரர் பிரமம் மட்டும்தான் உண்மை ஆன்மாவும் உள்பொருள் அல்ல உலகமும் உண்மையல்ல என்று கூறுகின்றார். ஒன்றாகிய பிரமமே பல ஆன்மாக்களாகவும் உலகமாகவும் தோன்றுகிறது. பிரமம் உலகமாவதை மாயையைக் கொண்டு சங்கரர் விளக்குகிறார். பிரமம் ஆன்மாவாகத் தோன்றுவதை அவிந்தையைக் கொண்டு விளக்குகிறார். கயிறு பாம்பாகத் தோன்றுவது போல பிரமம் உலகமாகத் தோன்றுகிறது. கயிற்றில் உண்மையில் எந்த மாற்றமும் நிகழவில்லை, அது மாறாமல் இருந்தபடியே மாறி விட்டதுபோல காணப்படுகின்றது. இதே போன்று பிரமத்திலும் எத்தகைய மாற்றமும் நிகழவில்லை. ஆனால் அது மாறி உலக சிருஷ்டி ஏற்பட்டு விட்டது போலத் தோன்றுகிறது. காரணமாகிய கயிறு மட்டுமே உண்மை, காரியமாகிய பாம்பு உண்மையல்ல, காரணமாகிய பிரமம் மட்டுமே உண்மை காரியமாகிய உலகம் உண்மையல்ல என விவர்த்தவாதக் கொள்கையின் மூலம் விளக்குகிறார். ஆனால் இராமானுஜர் பரிணாமவாதி காரணமும் உண்மை காரியமும் உண்மை, இறைவன் ஆன்மாக்களையும் உலகத்தையும் தனக்கு உடலாகக் கொள்கிறார். இறைவனுக்கும் ஆன்மா உலகுக்கும் உள்ள தொடர்பு பிரிக்க முடியாதவை எனக்கூறுகின்றார். அதாவது ஆன்மாக்களினுள்ளும் உலகத்தினுள்ளும் இறைவன் அந்தர்யாமியாய் அதாவது உள்நின்று இயக்குகிறார். இறைவன் என்ற உயிர் இல்லையாயின் ஆன்மா உலகம் ஆகிய உடல்கள் இயங்காது. எனவே மேலான பொருள் ஒன்று எனக் கூறுகிறார். சங்கரர் உள்ள பொருள் ஒன்று எனக் கூற இராமானுஜர் முப்பொருள் உண்மையைக் கூறி ஆன்மாக்களை எல்லாம் தனக்கு உடலாகக் கொண்டு அவ்வான்மாக்களுக்கெல்லாம் ஆன்மாவாக நிற்கும் பரமான்மா ஒன்றுதான் என கூறுகின்றார்.

சங்கரர் பிரமத்திற்கு வேறாக ஆன்மா உலகம் உண்மையல்ல என்று கூற இராமானுஜர் மூன்றும் உண்மை என விளக்கி இவற்றை ஒன்றில் ஒன்று பிரிக்க முடியாது எனக் கூறுகிறார். இதனை விளக்க அப்பிரதச் சித்திக் கொள்கையை கையாளுகிறார். அப்பிரதசித்தி என்றால் பிரிக்க முடியாதது என்பது கருத்தாகும். அதாவது ஒன்று நிலைப்பதற்கு இன்னொன்று அவசியம் என்று கூறப்படுகிறது. ஒரு பழத்தில் இருந்து அதன் சுவையைப் பிரிக்கமுடியாது. சுவை பழத்தில் தங்கியுள்ளது. பழம் சுவையில் தங்கியுள்ளது. பழம் நிலைப்பதற்கு சுவை அவசியம். சுவை நிலைப்பதற்கு பழம் அவசியம். இதேபோன்று உயிர்களுக்கும் உலகுக்கும் இறைவன் இன்றியமையாதவன். உயிர்களும் உலகும் இறைவனுக்கு இன்றியமையாதன எனக் கூற இதனை மறுத்து சங்கரர் உலகமும் உயிர்களும் இறைவனது அங்கங்களாயின் அவற்றில் ஏற்படும் மாற்றம் இறைவனையும் பாதித்தே ஆகவேண்டும். ஆனால் பிரமம் பரம்பொருள் அது நிர்க்குணப் பிரமம் குறைபாடுகளைக் கடந்தது என்கிறார். அதாவது எல்லைகளுக்கு அப்பாற்பட்டு நிற்கும் உள்பொருள் என்பதை நிருபிப்பதற்காகவே உலகும் உயிர்களும் தோற்றம் என்று சங்கரர் கூறினார்.

சங்கரர் ஆன்மா பற்றிக் கூறும்போது ஒரேஒரு ஆன்மாதான் உண்டு அதுதான் பிரமம் என்ற ஏகான்மவாதக் கொள்கை உடையவர் பிரமமே அவித்தை காரணமாக ஆன்மாவாகிறது ஒன்றாகவேயுள்ள பிரமம் பலசீவன்களாகத் தோன்றுகிறது. சங்கரர் இதனை பிரதிவிம்பவாதம் அவச்சேதவாதத்தின் மூலம் விளக்குகிறார். பிரதிவிம்பவாதம் என்பது வானில் உள்ளது. ஒரே ஒரு சந்திரன் அது பல நீர் நிலைகளில் படும்போது பலவாகத் தோன்றுகிறது. இதுபோல பிரமத்தின் பிரதிவிம்பம் அவிந்தையிற் பட்டுப் பலசீவன்களாகத் தோன்றுகிறது. பூமியில் உள்ள நீர் நிலைகள் அழிக்கப்பட்டால் வானில் உள்ளது. ஒரு சந்திரன்போல அறிவினால் அறியாமை நீங்கும்போது உள்ளது ஒரே ஒரு ஆன்மா, அது தான் பிரமம் என்ற

உண்மை புலனாகும். இதனைச் சங்கரர் அவச்சேதவாதத்தின் மூலமும் விளக்குகிறார். உலகெங்கும் பரந்து காணப்படுவது ஒரேவெளி. அது பல தடுப்புக்களினாலும் தடுக்கப்படும்பொழுது பலவாகத் தெரிகிறது. இத்தடுப்புக்கள் நீக்கப்பட்டால் உள்ளது ஒரே ஒருவெளி இதேபோன்று அறியாமை நீங்க உள்ளது ஒரே ஒரு ஆன்மா என்ற ஏகான்மைக் கொள்கை தெளிவாகும் எனக் கூறுகிறார் சங்கரர்.

ஆனால் இராமானுஜரது கொள்கைப்படி ஆன்மாக்கள் பகுதி, இறைவன் அப்பகுதிகளை உடைய முழுப்பொருள், ஆன்மாக்கள் பல அவை இறைவனுக்கு உடல்கள். இறைவன் அந்த உடல்களை இயக்கும் உயிர். இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள தொடர்பு ஒரு முழுப்பொருளுக்கும் அதன் பகுதிக்கும் இடையிறு தொடர்பைப்போன்றது எனக் கூறுகின்றார். சங்கரர் மறுத்து இறைவன் முழுப்பொருள், ஆன்மா அதன் பகுதி எனில் இறைவனும் பகுதிகளை உடைய பொருள் என்ற கருத்து ஏற்பட்டுவிடும். இது பூரணமான பிரமத்திற்கு பொருந்தாது எனக் கூறுகிறார்.

மேலும் ஆன்மாவும் உலகும் இறைவனின் உடல்கள் எனில் அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் இறைவனின் உயிரையும் பாதிக்கும் என்பது சங்கரரின் வாதம். இராமானுஜர் உடலுக்கும் உயிருக்கும் இடையேயுள்ள தொடர்பை விளக்குவதற்கு உடலைப்பாதிக்கும் பிணி, மூப்பு, சாக்காடு எவையும் அதனை இயக்கும் உயிரைப் பாதிப்பதில்லை. இதுபோல ஆன்மா உலகுக்கு ஏற்படும் முறைபாடுகள் இறைவனைப் பாதிப்பதில்லை. இராமானுஜர் ஆன்மாக்கள் பலவாகினும் இயல்பிலே ஒன்று என்பார். சங்கரர் ஒன்றாகிய பிரமமே பலசீவன்களாகத் தோன்றுகிறது என்கிறார். இராமானுஜர் ஆன்மாக்களை மூன்று வகைப்படுத்துகிறார். சங்கரர் ஆன்மாக்கள் உடலோடு கூடிய நிலையிலுள்ளபோதே அடையும் சீவன் முத்தியை ஏற்றுக்கொள்கிறார். இராமானுஜர் சீவன்முத்தியை ஏற்றுக்கொள்ளவில்லை.

இராமானுஜர் ஆன்மாக்கள் அறியாமை காரணமாக கர்மங்களைச் செய்து பிறவிக்குட்படுகின்றன. பிறவியில் நின்றும் விடுபட்டு பிரமத்தோடு ஒன்றி விடுவதே மோட்சமாகும். இதற்குரிய வழியாக கர்மம். பக்தி ஞானம் ஆகிய மூன்று வழிகளையும் கூறுகிறது. இவர் பிரபத்திக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றார். இதன் மூலம் மோட்சமடைய முடியும் என இராமானுஜர் குறிப்பிடுகின்றார்.

சங்கரர் ஞானத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார். பிரமம் பற்றிய அறிவின் மூலமாக அதாவது சத் சித் ஆனந்தம் ஆக அறிந்து கொள்வதன் மூலம் அறியாமையில் இருந்து விடுபட்டுப் பிரமத்தோடு ஒன்றிவிடுகிறது என்று கூறுகின்றார். ஆனால் இராமானுஜர் பக்திக்கு இடம் கொடுக்கின்றார். பிரபத்தியின் மூலம் இறைவனை அடையலாம் என கூறுகின்றார்.

மோட்சநிலையில் ஆன்மாவும் பிரமமும் ஒன்று என சங்கரமும் இராமானுஜரும் கூறுகின்றனர். ஆனால் சங்கரர் அது பேரின்பமான நிலை அங்கு ஆன்மா முற்றாக பிரமமே ஆகிவிடுகிறது. எனவே மோட்சநிலையில் பிரமம் மட்டுமே உண்மை. ஆன்மாவும் பிரமமும் இரண்டில்லை உள்ளது ஒன்று அது தான் பிரமம் என்று கூறுகின்றார்.

ஆனால் இராமானுஜர் ஆன்மா முற்றுமுழுதாக இறைவன் ஆவதில்லை இறைவனிடமிருந்து பிரிக்க முடியாதவாறு இறைவனுடன் கலந்துவிடுகிறது. இந்நிலையில் அது இறைவனது ஆனந்தத்தை அனுபவிக்கிறது. ஆன்மாக்கள் இறைவனுடன் இரண்டறக் கலக்கின்றன எனக் கூறுகின்றார்.

இவ்வாறு மேற்கூறப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து நோக்கும் போது சங்கரரின் அத்வைதம் இராமானுஜர் கூறும் விசிஷ்டாத்வைதத்தில் இருந்து வேறுபடுகின்றது என்பதை அறிந்துகொள்ளலாம்.

★★★

## சிதம்பரம் கோயில் ஸ்ரீநடராஜப் பெருமான்

கோயிலைப்பற்றிய விரிவான தத்துவம் சிதம்பரம் போன்ற ஆலயத்தில் அமைந்திருக்கிறது. உபாசனைக்குரிய மூர்த்தியாகிய நடராஜா நான்கு ஸ்தம்பங்களை உடைய ஒரு கொலுமண்டபத்தில் எழுந்தருளியுள்ளார். அந்த நான்கு ஸ்தம்பங்கள் நான்கு வேதங்களின் சின்னமாகும். அதற்குச் சற்று முன்பு ஆறு தூண்களுடைய மண்டபம் உள்ளது. ஆறு சாஸ்திரங்களுக்கு அவைகள் சின்னமாய் அமைந்துள்ளன. அதற்குச் சற்று வெளியே பதினெட்டு தூண்களுடைய மண்டபம் இருக்கிறது. பதினெட்டு புராணங்களுக்கு அவைகள் அறிகுறியாய் அமைந்துள்ளன. நடராஜாவின் அருகில் செல்லுதற்கு ஐந்து படிகளில் மேலே ஏறியாக வேண்டும். சிவனுடைய திருநாமமாகிய பஞ்சாக்ஷரம் அல்லது ஐந்தெழுத்தின் சின்னமாக இந்த ஐந்து படிகள் அமைந்துள்ளன. நடராஜாவுக்கு இடப் புறம் சிவகாமி அம்மையார் எழுந்தருளியுள்ளார். வலப் புறம் சிதம்பர ரகசியம் அமைந்திருக்கிறது. இதிலும் மேலான கோட்பாடு புதைந்திருக்கிறது. பராசக்தியின் அருளால் சகுண பிரம்மமாகிய பிறகு நடராஜமூர்த்தியின் தரிசனம் கிட்டுகிறது. சகுண பிரம்மம் பிறகு நிர்க்குண பிரம்மத்துக்கு வழிகாட்டுகிறது. அது மனம் மொழியைக் கடந்திருப்பதால் ரகசியம் என்று இயம்பப் பெறுகிறது. நிர்க்குண பிரம்மத்தை அடைந்த ஜீவன் திரும்பவும் ஜீவபோதத்துக்கு வருவானாகில் சகுண பிரம்மத்துக்கு வந்து கீழிறங்கி வருகிறான். சிதம்பரத்தில் நிகழும் தீபாராதனை இக்கோட்பாட்டை விளக்குகிறது.

*- ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்*



★★★

# நண்பனைத் தேடி ஓடாதே

*- தர்மலிங்கம் மனோகரன்*

*த*ன்னைத் தன்னாலே உயர்த்திக் கொள்க. தன்னை இழிவுறுத்தலாகாது. ஏனென்றால் தானே தனக்கு நண்பன். தானே தனக்குப் பகைவன் என்று கூறுகின்றது பகவத்கீதை.

ஆம், நண்பனைத் தேடி எங்கும் நாம் அலைய வேண்டியதில்லை. நல்ல நோக்கத்துடன் சிந்தித்து அதன்படி செயல்படும்போது அச்செயல் நன்மையாக இருக்கும். நமது மனமே, சிந்தனையே செயற்பாடுகளே நம்மை உயர்த்தவும், தாழ்த்தவும் வழிவகுக்கின்றன.

நல்ல நோக்கத்துடன் செயற்படும்போது அதற்குத் தூண்டு கோலாக, துணையாக இருக்கும் நமது மனமே நமக்கு நல்வழி காட்டும் உற்ற நண்பன். தீய வழிகளில் சிந்தனையை ஒட்டி தீயவழிகளில், ஏனையோர் வெறுக்கும் வழியிலே செயல்பட நம்மை நமது மனம் தூண்டுமேயானால் அது தீய நண்பன் ஆகின்றது.

உள்ளத்தில் தூய சிந்தனைகள் உதிக்கும்போது அதன் வழிவரும் செயற்பாடுகள் மற்றவர்கள் போற்றக்கூடிய செயற்பாடுகளாயமையும். நல்ல நண்பன் என்பவன் எப்போதும் நல்வழி காட்டும் உத்தமனாகவே இருப்பான்; இருந்து செயற்படுவான். உற்ற நண்பன் என்பவன் நல்வழி நடத்தும் சிறந்த பண்பாளனாகவே இருப்பான்.

தீய சிந்தனைகள் உள்ளத்திலே உதிக்கும்போது அதன்வழி வரும் செயற்பாடுகளும் விரும்பத் தகாதவைகளாகவே இருக்கும். உள்ளத்திற்கு வேதனையையும் வெறுப்பையும் ஏற்படுத்தி நமது வாழ்வைச் சீரழிக்கும். தீய செயல்கள் மூலம் சேர்க்கும் சொத்து வெறுப்பாகவே இருக்கும்.

நல்ல சிந்தனை கொண்டவன் மனம் என்றும் மகிழ்ச்சியாக இருக்கும். தீய சிந்தனை கொண்டவன் மனம் அச்சத்தாலும், அமைதியின்மையாலும் அல்லலுறும்.

அதைத்தான் பகவத்கீதை தன்னைத் தானே உயர்த்திக் கொள்க என்கின்றது. தன்னைத்தானே உயர்த்திக் கொள்வதற்கு உரிய ஒரே வழி நல்ல சிந்தனைகளும் நல்ல செயற்பாடுகளுமே ஆகும்.

அடுத்து கீதையிலே சொல்லப்படுகின்றது தன்னை இழிவுறுத்தலாகாது என்று. எவரும் தன்னைத் தானே தாழ்த்திக் கொள்ள விரும்புவார்களா? இல்லவே இல்லை. தம்மை மற்றவர்கள் போற்ற வேண்டும், மதிக்க வேண்டும், தாம் சொல்வதைக் கேட்க வேண்டும், தம்மை உயர்த்தவர்களாகக் கணிக்க வேண்டும் என்று தானே எவரும் விரும்புவார்கள். தன்னைத் தானே தாழ்த்திக் கொள்வது உள்ளத்தில் உதிக்கும் சிந்தனைகளும் அதன் வழிவரும் செயற்பாடுகளுமே. உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று உலகிலே யாரும் பிறப்பதில்லை. உயரிய சிந்தனை கொண்டு செயற்படுபவர்கள் உயர்ந்தவர்கள். தாழ்ந்த சிந்தனையுடன் செயற்படுபவர்கள் இழிந்தவர்கள்.

மேலான சிந்தனை கொண்டவர்களை நல்லவர்கள் நாடி வருவார்கள். நட்புக்கரம் நீட்டுவார்கள். சமுதாயம் மதிக்கும். தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளக் கூடிய மேலான சிந்தனை உள்ளத்தில் உதிக்க வேண்டுமானால் அன்பு என்னும் பண்பு உள்ளத்தில் நிறைய வேண்டும்.

மற்றவர்களையும் மதித்து நடக்கும் பக்குவம் வந்துவிட்டால், மற்றவர்களுக்குத் தன்னாலான உதவி, ஒத்தாசைகள் செய்யும் பக்குவநிலை வந்துவிட்டால் தனக்குத்தானே நல்லதோர் நண்பன் ஆகிவிடுகின்றான். நல்லோர் உறவு தானாகவே வந்தடைந்துவிடும்.

மாறாக, மற்றவர்களுக்கு இடைஞ்சல் செய்வதிலே மனதைவிட்டால் பகைமை தானாகவே வந்துவிடும். மற்றவர்கள் மட்டுமா வெறுப்பார்கள். தனக்குத் தானே வெறுப்பால், வேதனையால் நிம்மதி இல்லாது போய்விடும். எந்நேரமும் அச்சமும் ஆத்திரமும் மனதிலே குடி கொண்டுவிட்டால் அல்லது பிறர் துன்பத்திலே இன்பம் காண முற்பட்டுவிட்டால் அதைவிட மனதிற்கு வேறென்ன பகைமை வேண்டும்? தீய வழியில் சிந்திப்பவர்கள் என்றுமே நிம்மதியுடன் வாழ்ந்ததாக வரலாற்றில் இல்லை. நல்ல சிந்தனைகளின் வழி நடப்பதே சமய வாழ்வின் அடிப்படைத் தத்துவம். அதைவிட்டு தவறான வழியில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் மிஞ்சுவது வேதனை மட்டுமே. உயர்ந்த சிந்தனைகள் நம்மை உயர்த்தும் என்பதைத்தான் தன்னைத் தானே உயர்த்திக் கொள்க என்று பகவத்கீதை கூறுகின்றது.

எனவே, சமயநெறிகள் காட்டும் சீரிய பாதையில் வழிநடந்து, செம்மையான செயற்பாடுகளின் மூலம் நம்மை நாமே உயர்த்திக் கொள்வோம் என ஒவ்வொருவரும் திட சங்கற்பம் பூணல் வேண்டும்.

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் - வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்* என்ற வள்ளுவர் வாக்கும் இங்கு நினைவு கூரத்தக்கது. பெரியார்களென நாம் போற்றும் நன்மக்களின் வாழ்வைப் பாருங்கள். அவர்கள் பிறருக்குத் துன்பம் செய்யாமல் முடிந்தவரை நன்மையே செய்து நல்லறிவைப் புகட்டியதால் அல்லவா எல்லோர் மனங்களிலும் நிறைந்திருக்கின்றனர்.

எனவே, முதலில் வெளியிலிருந்து நண்பரைத் தேடுமுன் நம்மையே, நமது மனத்தையே செம்மைப்படுத்தி நம்முள்ளேயே வழிகாட்டும் நல்ல நண்பரை உருவாக்கிக்கொள்ள வேண்டும். நல்ல நண்பனாக நம்மை நாமே உயர்த்திக் கொண்டால் அது கீதை காட்டிய பாதையில் சிறந்த வாழ்வை எமக்கு அளிக்கும். பகையை வெல்ல பகையால் முடியாது. நன்மையால் தான் அது கைகூடும். நல்ல சிந்தனை, செயற்பாடுகள் மூலம் நம்மை நாமே உயர்த்தி நல்லோர் போற்ற வாழ்வோம்.

**மாணவர் ஒளி**

**இது மாணவர்களுக்கான பக்கம். இதில் சமய வரலாறு மற்றும் புராணக் கதைகள் உட்பட மாணவர்களுக்குப் பயனுள்ள பல விஷயங்கள் அலங்கரிக்கும். இதுபோன்ற விஷயங்களை மாணவர்களும் எழுதியனுப்பலாம். உங்கள் கருத்துக்களையும் எதிர்பார்க்கிறோம்.**

# பெரிய புராணக் கதைகள்

**(நாயன்மார்கள் வரலாறு கூறும் பெரிய புராணத்திலிருந்து இரு கதைகளை இங்கு தருகிறோம். இக்கதைகளின் போதனைகளை சிறார்களுக்கு விளக்கி எடுத்துரைப்பது பெரியோர்களின் கடன்.)**

## இயற்பகை நாயனார்

வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியின் வளம் பெற்ற புகார் என்று புகழப் பெறும் காவிரிப்பூம்பட்டினம் முற்காலத்தில் சோழ நாட்டுத் தலைநகராக விளங்கியது. அங்கு வணிகர் மரபில் ஒரு பெரியார் வாழ்ந்து வந்தார். அவர் அடியார்கள் எதைக் கேட்பினும் இல்லை என்று கூறாத இதயம் படைத்தவர். உலக இயல்புக்குப் பகையாக விளங்கியவர்; அவர் 'இயற்பகையார்' என்று பலராலும் அழைக்கப்பட்டார்.

ஒரு சமயம் சிவபெருமான் அவர் அன்பைச் சோதனை புரிய எண்ணிக் காமுக வேதியர் உருக்கொண்டு வந்தார். அவர் இயற்பகையாரை நோக்கி, "அன்பனே! உன் காதல் மனைவியை எனக்குத் தருக " எனக் கேட்டார். இயற்பகையார், "எனக்குரிய பொருள்களெல்லாம் சிவனடியார்களுக்கே உரியனவாகும் " என்று கூறித் தன் மனைவியைத் தடையின்றிக் கொடுத்தார்! வேதியர் அவர் மனைவியை அழைத்துச் செல்லும் வழியில் இயற்பகையாரின் உறவினர்கள் அவரைத் தடுத்து ஆயுதங்களால் தாக்க முயன்றனர். நாயனார், அவர்களையெல்லாம் கொன்று வேதியரைத் திருச்சாய்க்காடு என்னும் தலம்வரை வழியனுப்பினார்.

அவ்வூரையடைந்தவுடன் வேதியர் ஏதோ பயந்தவர் போலத் தொண்டரை நோக்கி, "இயற்பகை முனிவனே! இங்கே வா" என்று சொல்லி ஓலமிட்டார்.

"இயற்பகை முனிவா! ஓலம்!
*ஈண்டுநீ வருவாய் ஓலம்!*
*அயர்ப்பிலா தானே! ஓலம்!*
*அன்பனே ஓலம்! ஓலம்!*
*செயற்கருஞ் செய்கை செய்த*
*தீரனே ஓலம்! என்றான்*
*மயக்கறு மறையோ லிட்டு*
*மாலயன் தேட நின்றான்.*

இவ்வாறு அந்த வேதியர் ஓலமிட்டதாகச் சேக்கிழார் பாடுகின்றார். " செயற்கருஞ் செய்கை செய்த தீரனே" என்று இயற்பகையாரை ஈசனார் விளித்தாராம் ! என்னே! என்னே! தமது காதல் மனையாளைச் சிவனடியார் ஒருவருக்கு ஈதல் செயற்கருஞ் செயல் அன்றோ? அவ்வாறு அருஞ்செயல் செய்த இயற்பகையார் தீரர் அல்லரோ?

ஓலமிட்டழைத்த ஓசையைக் கேட்ட இயற்பகையார், "அடியேன் இதோ வந்து விட்டேன். தங்களுக்குத் துன்பம் விளைப்பவர் இன்னும் உளராயின் அவரையும் கொன்று ஒழிக்கின்றேன்" என்று ஓடி வந்தார். வேதியர் மறைந்தார். சிவபெருமான் உமாதேவியாரோடு வெள்ளைக் காளையின் மீதேறி காட்சியளித்தார். இயற்பகையார் தம் மனைவியாருடனும் இறந்த சுற்றத்தினருடனும் வீடுபேற்றை அடைந்தார்.

## இளையான்குடி மாற நாயனார்

ஈண்டிய வளமுடைய பாண்டிய நாட்டில் இளையான்குடி என்ற ஓர் ஊர் உண்டு. அவ்வூரில் நெடுநாட்களுக்கு முன்பு வேளாளர் குலத்தில் மாற நாயனார் என்னும் சிவனடியார் ஒருவர் தோன்றினார். அவர் உழுதொழிலால் மிகுந்த செல்வம் படைத்து அச்செல்வத்தைக் கொண்டு சிவனடியாரைப் பெரிதும் விரும்பி உபசரித்து வந்தார்.

அவர் தமக்கு எதிர்ப்படும் சிவனடியாரைக் கைகூப்பி எதிர் கொண்டழைத்து இன்சொல் கூறித் தம் இல்லத்திற்கு அழைத்துச் செல்வார்; அங்கு அவர்தம் அடிகளைத் தூய நீரால் கழுவி உயரிய ஆசனத்தில் அமர்வித்து, அவர்தம் பாதங்களைப் பூசித்து அறுசுவை உண்டிகளை வழங்குவார். இதனால் மாறனாருடைய செல்வமும் பன்மடங்கு வளர்ந்து பெருகிற்று.

இத்தகைய செல்வச் சிறப்புடன் பலராலும் போற்றப்பட்ட மாறனாரின் பெருமையைச் சிவபெருமான் மக்களறியச் செய்ய விரும்பினார். அதன் விளைவாக மாறனாருடைய செல்வம் சிறிது சிறிதாகச் சுருங்கத் தொடங்கிற்று. செல்வம் சுருங்கிய பின்னும் மாறனார் மனம் சுருங்கவில்லை. அவர்தம் நிலங்களை ஒவ்வொன்றாக விற்றுத் தம்மை நாடி வரும் அடியார்களுக்கு உணவளித்துக் குறைவின்றி உபசரித்து வந்தார்.

ஒரு நாள் அவ்வூரில் காலையில் தொடங்கிய மழை விடாமல் பெய்து கொண்டிருந்தது. அன்று மாறனார் வீட்டில் உணவுப் பொருள் ஏதும் இல்லையாதலின் தம்முடைய கடும் பசியைத் தாங்கிக்கொண்டு தெருக் கதவைத் தாளிட்டுப் படுத்துறங்கலானார்.


நள்ளிரவில் தெருக் கதவை யாரோ தட்டும் ஓசை கேட்டுப் படுக்கையில் இருந்து நாயனார் எழுந்து வந்து கதவைத் திறந்தார். அப்போது வாயிற்படியில் மழை நீரால் நனைந்து குளிரால் நடுங்கிக்

கொண்டிருந்த பெரியாரொருவரைக் கண்ட நாயனார் அவரை வீட்டினுள் அழைத்துச் சென்று, அவருடைய உடலைத் துடைத்து வெண்மையான ஆடைகளை உடுக்கச் செய்து இருக்கையும் தந்தார்.

பின்னர் அந்நாயனார் தம் மனைவியிடம் சென்று, "இப்பெரியார் பெரிதும் பசியுடனிருக்கின்றார். என் செய்வோம்?" என்றார் அது கேட்ட அவர்தம் அன்பு மனைவியார், "இன்று காலை நாற்றங்காலில் தூவிய முளை நெல்லை வாரிக்கொண்டு வந்தால் அதை முடிந்தவரை பக்குவப்படுத்திச் சோறு சமைக்கலாம்" என்றார். மாறனாரும் அந்நள்ளிரவில் தட்டுத் தடுமாறித் தம் நாற்றங்காலையடைந்து அதில் படிந்திருந்த முளைநெல்லைச் சேற்றோடும் வாரிக் கூடையிற்போட்டு தம் தலைமேல் தூக்கி வந்து தம் மனைவியிடம் கொடுத்தார். அவ்வம்மையாரும் மனமகிழ்வுடன் அதனைக் கழுவி வறுத்து அரிசியாக்கிச் சோறு சமைத்தார். இதற்குள் மாறனார் தம் வீட்டுப் புறத்தில் முளைத்திருந்த பலவிதமான கீரைகளைப் பிடுங்கி வந்து மனைவியாரிடம் கொடுத்தார். மனைவியாரும் அவற்றைக் கழுவி ஆய்ந்து இன்சுவைக் கறியாக்கி வைத்தார். நாயனார் உடனே இளைப்புற்றிருந்த விருந்தினரை அமுது உண்ண அழைப்பதற்காக அவர் இருப்பிடத்தை அடைந்தார்.

அச்சமயம் அப்பெரியார் சோதிவடிவாய் மேலெழுந்து தோன்றி நின்றதைக் கண்ட மாறனாரும் அவர் தம் மனைவியாரும் திகைத்து நின்றனர். உடனே சிவபெருமான் தம் அடியவர்களுக்கெல்லாம் அன்புடன் உணவளித்த அவ்வடியார்முன் உமையம்மையாரோடும் விடைமீதிருந்து வானவீதியில் காட்சியளித்து, "அன்பனே, அடியார்க்குக் குறைவின்றி உண்டி வழங்கி உபசரித்த நீ நின் மனையாளுடன் சிவபதம் அடைந்து அங்குக் குபேரனும் நின் ஏவல் கேட்டு நிற்க இன்ப வாழ்வு பெறுவாய்" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார்.

★★★



# ஆலய வழிபாடு

*செல்வி ஜெனனி ஜெயரட்ணம்*
*இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி.*
*கொழும்பு*

*"கோயில் விளங்கக் குடி விளங்கும்"*
*"கோயிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்"*

என்பது எமது மூதாதையரது கூற்று ஆகும். இதற்கமைய மனிதன் இருக்கும் இடமெல்லாம் கோயில்களும் இருக்கும். இறைவன் வீற்றிருக்கும் இடம் ஆலயம் ஆகும். இதை திருக்கோயில் என்றும் அழைப்பர். ஆ என்றால் பசு, லயம் என்றால் ஒன்றித்து நிற்றல், ஆலயம் என்றால் ஆன்மா ஒன்றித்து நிற்கும் இடமாகும்.

நாம் ஆலயத்திற்குச் செல்லும் போது நீராடி தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து அர்ச்சனைக்குரிய பொருட்களான பால், பழம், வெற்றிலை, பாக்கு என்பவற்றை எடுத்துச் செல்ல வேண்டும். எமக்கு முதல் முதலாகத் தென்படுவது கோபுரமாகும். இக்கோபுரம் எமக்கு இறை சிந்தனையைத் தோற்றுவிக்கிறது. நாம் கோயிலுக்குச் செல்லும் முன் கை, கால்களைக் கழுவி கோபுரத்தை வணங்கிச் செல்ல வேண்டும்.

கோயிலுக்குள் சென்றதும் பலிபீடத்துக்கு இப்பால் நின்று ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்ய வேண்டும். பின்னர் எழுந்து நந்தி தேவரை வணங்கி அனுமதி பெற்று சிவபெருமானது சந்நிதிக்குச் செல்ல வேண்டும். அங்கு சிவபெருமானையும் உமாதேவியாரையும் பக்தி சிரத்தையோடு வணங்கி, கொண்டு சென்ற அர்ச்சனைப் பொருட்களைக் கொடுத்து அர்ச்சனை செய்ய வேண்டும். அர்ச்சகரிடம் விபூதி வாங்கித் தரித்துக் கொள்ள வேண்டும். பின்பு உள்வீதியை வலம் வர வேண்டும். இறுதியில் சண்டேசுவரர் சந்நிதியை அடைந்து மூன்று முறை கை கொட்டி சிவ தரிசனப் பலனைத் தரும்படி வேண்டுதல் வேண்டும். அதன்பின் நந்திதேவரை வணங்கி பலிபீடத்திக்கு இப்பால் நின்று மும்முறை நமஸ்கரித்து எழுந்து வடக்கு நோக்கி இருந்து சிவபெருமானைத் தியானித்து பஞ்சாச்சர செபஞ் செய்ய வேண்டும். பின்னர் எழுந்து அமைதியாக வீடு செல்ல வேண்டும்.

ஆலய வழிபாட்டின் போது சுவாமி சந்நிதானத்தில் சிரசிலும், இருதயத்திலும் அஞ்சலி செய்தல், இறைவன் நாமங்களை உச்சரித்தல், மனதினால் தியானித்தல், அர்ச்சனை செய்தல், தோத்திரம் பாடுதல் போன்றவற்றைச் செய்தல் சிறந்ததாகும். அவையாவும் பிறர்க்கு இடையூறின்றிச் செய்ய வேண்டும். அர்ச்சனை செய்தல், அங்கப் பிரதட்சணம் செய்தல், அடியழித்தல், காவடி எடுத்தல், திருவிழாக்களை நடத்துதல் என்பன ஆலய வழிபாட்டின் அங்கங்களாகும். *"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"* என்பது ஔவையாரின் கூற்று. ஆலய வழிபாடானது மனிதனுக்கு மனத் தூய்மையையும் மன அமைதியையும் கொடுத்து வாழ்வை வளம் பெறச் செய்கிறது. இதன் மூலம் ஆன்மா ஈடேற்றம் அடைகிறது.

# திருவிளையாடற் புராணக் கதைகள்

(திருவிளையாடற் புராணக் கதைகளையும் எங்கள் இளம் சமுதாயத்திற்கு எடுத்துரைத்து, அவற்றின் பொருளை பெரியவர்கள் உணர்த்த வேண்டும்.)

## வெள்ளையானை சாபந் தீர்த்த படலம்

துருவாச முனிவர் ஒரு சமயம் காசியில் சிவபூஜை செய்து, முடிவில் சிவபெருமானின் திருமுடியினின்றும் விழுந்த தாமரைப் பூவை எடுத்துச் சென்று, வழியில் வெள்ளை யானையின் மீது பவனி வந்த இந்திரனுக்குக் கையுறையாகக் கொடுத்தார், இந்திரன் செல்வச் செருக்கினால் அதனை ஒரு கையால் வாங்கி வெள்ளை யானையின்மேல் வைத்தான். அது அந்த மலரைக் கீழே தள்ளிக் காலால் சிதைத்தது. இந்த நிகழ்ச்சியால் துருவாச முனிவர் கண்களில் தீப்பொறி பறந்தது. அவர் இந்திரனைப் பார்த்து, "பேதையே, நீ செய்த சிவத் துரோகத்தினால் உன் தலை பாண்டியன் ஒருவனின் வளையினாலே சிதறிப்போகும். கர்வம் பிடித்த இந்த வெள்ளை யானை காட்டானையாகும்" என்று சபித்தார்; பின்னர் இந்திரனும் வெள்ளை யானையும் அவர் திருவடிகளைப் பணிந்து சாபத்தை நீக்கியருள வேண்டியதால், இந்திரனுக்குத் தலையளவாக வந்தது முடியளவாகப் போகட்டும் என்றும், வெள்ளை யானை காட்டானையாக மாறி நூறு ஆண்டுகள் கழித்துப் பழையபடியே இருக்கக் கடவது என்றும் அவர் கூறியருளினார்.

இந்திரனுக்கு வந்த சாபம் முடியளவாக நீங்கிய செய்தி பின்பு கூறப்பெறும்.

வெள்ளை யானை சொர்க்கத்தை விட்டுப் பூலோகத்துக்கு வந்தது; அங்குக் கடம்ப வனத்தில் காட்டானையாக இருந்து சோமசுந்தரப் பெருமானை வழிபட்டு வந்தது, சிவபெருமான் அதன் அன்பைப் பாராட்டி அதற்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டார், யானை, "தங்கள் திருவடிகளைப் பிரியாத எட்டு யானைகளுடனே ஒன்பதாவதாக என்னையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்" என்றது. சோமசுந்தரர் அந்த யானையைப் பார்த்து, ' இந்திரன் என்னிடத்தில் மிகவும் அன்புடையவன், நீ அவனைத் தாங்குதல் என்னைத் தாங்குவதாகும் ' என்று கூறினார்.

வெள்ளை யானை அவரை வணங்கி மேற்கே சென்று தன் பெயரால் ஒரு தீர்த்தம் உண்டாக்கிற்று; சொக்கலிங்கருக்குத் தன் பெயரால் ஐராவதபுரம் என்னும் நகரத்தை உண்டாக்கி, தன் தலைவன் பெயரால் இந்திரேச்சுரர் என்று ஒரு சிவலிங்கம் ஏற்படுத்திப் பூசை செய்து வந்தது. பின்னர் இந்திரன் அவ் யானையை அழைத்துக்கொண்டான். இருவரும் சாபம் நீங்கி இன்பம் அடைந்தனர்.

## திருநகரங் கண்ட படலம்

கடம்பவனத்துக்குக் கிழக்கில் குலசேகரப் பாண்டியனின் நகரமாகிய மணவூரில் தனஞ்சயன் என்னும் ஒரு வாணிகன் இருந்தான். அவன் ஒரு நாள் இரவு அக்கடம்பவனத்தில் இருந்த சொக்கலிங்கப் பெருமானைக் கண்டு வழிப்பட்டான்; அங்கு தேவர்கள் வந்து பூசை செய்தலைக் கண்டு மகிழ்ந்தான்; பின்னர் குலசேகர பாண்டியனிடத்தில் சென்று கடம்பவனத்தில் தான் கண்ட அதிசயங்களைக் கூறினான். பாண்டியன் மனமகிழ்ந்து சிவபெருமான் திருவடிகளைச் சிந்தித்த வண்ணமாய் இருந்தான். அன்றைய இரவு சோமசுந்தரர் அவன் கனவில் ஒரு சித்தராக வந்து பாண்டியனை நோக்கி, ' அரசே காட்டை வேரோடு அழித்து நகரமாகச் செய்வாயாக ' என்று சொல்லி மறைந்தருளினார். மன்னனும் அவர் ஆணைப்படியே சிற்ப நூல் வல்லாரைக் கொண்டு அற்புதமான கோயில் ஒன்றைக் கட்டுவித்தான். பின்பு அவன் அந்த நகரத்துக்கு சாந்தி செய்ய நினைத்தான்.

அச்சமயத்தில் சோமசுந்தரர் தன் சடை முடியில் உள்ள சந்திரக் கலையின் அமிர்தத்தைக் கங்கை நீரோடு கலந்து ஒழுகவிட்டார். அது மதுரமான (இனிமை) தன்மையாக இருத்தலால் அந்நகரம் மதுரை என அழைக்கப்பட்டது. குலசேகர பாண்டியன் தன் மகனாகிய மலயத்துவசனுக்கு முடிசூட்டித் தானும் இறைவனின் இனிய திருவடிகளில் இரண்டறக் கலந்தான்.

## மாணவர் விடுதியில் வெற்றிடங்கள்

*அகில இலங்கை இந்து மாமன்றம் பராமரிக்கும் இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரி இலவச மாணவர் விடுதியில் இன்னும் ஒரு சில இடங்கள் இருக்கின்றன.*

*ஆதரவற்ற மாணவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.*

*மாமன்றத்திலிருந்து பெறப்படும் விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பங்களை அனுப்பலாம்.*


*அதிபர்*
*கொழும்பு இந்துக் கல்லூரி*
*இரத்மலானை.*

*(இது சிறுவர்களுக்கான சிறப்புப் பகுதி. ஸ்ரீராமகிருஷ்ணரின் நீதிக் கதை ஒன்றினை இங்கு தருகிறோம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இக்கதையை படித்துக்காட்டி அதன் தத்துவத்தை விளக்குவது கடன்)*

# கடவுள் சாப்பிடுவார்

ஒரு கிராமத்தில் சிவன் கோயில் ஒன்று இருந்தது. ஒரு பிராமணர் அந்தக் கோவிலில் தினந்தோறும் பூஜை செய்து வந்தார். அவருக்கு மனைவியும் ஒரு மகனும் ஒரு மகளும் இருந்தார்கள். மகனை சிவகுமார் என்று அன்புடன் அழைத்து வந்தார்கள். அந்தச் சிறுவன் சிவபெருமானிடம் அதிகபக்தி கொண்டவன். அவ்வப்போது பூஜைக்கு வேண்டிய பொருட்களைச் சேகரிப்பதில் தந்தைக்கு உதவியும் செய்வான்.

ஒருநாள் தொலைவில் உள்ள நகரம் ஒன்றில் நடக்கவிருக்கும் திருமணத்திற்கு அந்தப் பிராமணர் போக வேண்டியிருந்தது. அவரது மனைவியும் மகளும் கூடப் போக இருந்தார்கள். ஆகவே அவர் சிவகுமாரைக் கூப்பிட்டு, 'குமார், நாங்கள் எல்லோரும் வெளியூர் போகிறோம். வர மூன்று நாட்கள் ஆகும். உன்னையும் எங்களுடன் அழைத்துச் செல்ல மிகவும் ஆசைதான். ஆனால் எம்பெருமானின் பூஜை எக்காரணத்தாலும் தடைப்படக் கூடாது. நான் பூஜை செய்வதை இவ்வளவு நாள் கவனித்து வந்துள்ளாய், உதவியும் செய்திருக்கிறாய். நான் வெளியூர் போகும் இந்த நேரத்தில் பூஜையை நீ செய்வாயா?' என்று கேட்டார்.



சிவகுமார் கண்களில் பெருமையும் மகிழ்ச்சியும் பளிச்சிட, 'அப்பா, நீங்கள் கவலைப்பட வேண்டாம். பூஜை முறைகள் எனக்கு நன்றாகத் தெரியும். சுவாமிக்குப் பூஜை செய்ய உண்மையிலேயே நான் மிகவும் பாக்கியம் செய்திருக்க வேண்டும். நீங்கள் எல்லோரும் சந்தோஷமாக ஊருக்குப் போய்வாருங்கள், என்றான்.

எல்லோரும் சென்றபின் சிவகுமார் குளித்து, தூய பட்டாடை அணிந்து, பூஜைக்கு வேண்டிய மலர்கள் பறித்துக் கொண்டான். நைவேத்தியத்திற்காக மிக ஜாக்கிரதையாகச் சமையல் செய்தான். பூஜை முடிந்தபின் சுவாமியின் முன் நைவேத்தியத்தைப் படைத்தான். சுவாமி சாப்பிடுவதற்காகத் திரையை மூடிவிட்டு வெளியே காத்திருந்தான்.

இருபது நிமிடம் கழித்து உள்ளே சென்று பார்த்தான். அவன் உணவு வகைகளை எப்படி வைத்திருந்தானோ அப்படியே இருந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தான். அவன் படைத்ததில் ஒரு சிறிதுகூட சிவபெருமான் உண்டிருக்கவில்லை.

சிவகுமார் கண்களில் கண்ணீர் பொங்கியது. விம்மல் வெடிக்க அவன், 'சுவாமி! என்னிடம் ஏன் மிகக் கடுமையாக இருக்கிறீர்கள்? தினமும் என் தந்தை படைக்கும் நைவேத்தியத்தை ஏற்றுக்கொண்டீர்களே! ஆனால் இன்று எதையும் தொடவே மறுக்கிறீர்கள். ஏன் என்னிடம் மட்டும் இப்படி நடந்து கொள்கிறீர்கள்? நான் ஏதாவது தவறு செய்துவிட்டேனா? ஏதாவது செய்யத் தவறிவிட்டேனா?' என்று மனமுருக வேண்டினான்.

தந்தை பூஜை செய்யும் விதத்தை எல்லாம் அவன் நினைத்துப் பார்த்தான். அவனும் எல்லாவற்றையும் முறையாகச் செய்திருக்கிறான். அவன் உள்ளம் உடைந்து போயிற்று. கண்களில் கண்ணீர் வெள்ளமெனப் பெருக்கெடுத்தது. கீழே விழுந்து கதறிக்கதறி அழுதான்.



அடியாரை ஆட்கொள்ளும் ஈசனால் இந்தச் சிறு குழந்தையின் அழுகையைத் தாங்க முடியவில்லை. கள்ளங் கபடமற்ற வெள்ளை உள்ளத்துடன் தன் முன் நிற்கும் சிறுவன் முன் மனித உருவுடன் எழுந்தருளினார். அவன் படைத்த உணவையும் மகிழ்வோடு உண்டார்.

சிறுவனின் உள்ளம் மகிழ்ச்சியால் பூரித்தது. ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். ஈசன், அவன் செய்த பூஜையை ஏற்றுக் கொண்டார். அது ஒன்றே அவனுக்குப் போதும்.

மூன்று நாட்களாக அவன் இவ்வாறு இறைவனுக்குப் பூஜை, நைவேத்தியம் செய்து வந்தான். இறைவனும் அந்தச் சிறுவன் அன்போடு செய்யும் பூஜை, நைவேத்தியத்தை ஏற்றருளினார்.

நான்காம் நாள் அவனது தாய், தந்தை, தங்கை எல்லோரும் ஊர்வந்து சேர்ந்தார்கள். அப்போதுதான் சிவகுமார் பூஜையை முடித்துக்கொண்டு கோவிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தான். அவனது தந்தை அவனைக் கட்டி அணைத்துக் கொண்டு, 'குழந்தாய்! பூஜையைத் தினமும் முறையாகச் செய்து வருகிறாயா?' என்று கேட்டார்.

'தங்கள் ஆசியால் முறையாகச் செய்து வருகிறேன் அப்பா' என்றான் சிவகுமார். மகிழ்ச்சியும் அன்பும் நிறைந்த கண்களோடு அவன் தந்தை, 'அப்படியானால் எங்களுக்கெல்லாம் சிறிது பிரசாதம் கொடு குழந்தாய். சாப்பிடுவதற்கு முன் சிறிது பிரசாதம் எடுத்துக் கொள்ள வேண்டும், என்றார்.

ஆனால் சிவகுமார், 'அப்பா, நான் நைவேத்தியம் செய்தவற்றை எல்லாம் சுவாமி சாப்பிட்டு விட்டார். ஒன்றும் மீதி வைக்கவில்லை' என்று கள்ளங் கபடமற்ற வெள்ளை உள்ளத்துடன்

பதில் சொன்னான்.

அவன் தந்தையால் இதைச் சிறிதும் நம்ப முடியவில்லை. அவர், 'குழந்தாய், என்ன சொல்கிறாய்? கடவுள் சாப்பிட்டாரா? நான் ஒவ்வொரு நாளும் பூஜை முடித்து வீடு திரும்பும் போது கையில் பிரசாதம் கொண்டு வருவதை நீ பார்த்ததில்லையா? ஈசனுக்கு நாம் நைவேத்தியம் செய்வதுதான் பிரசாதமாகிறது. அவர் ஒன்றும் சாப்பிட்டு விடுவதில்லையே' என்று ஆச்சரியத்தோடு கேட்டார்.



சிவகுமார் கண்களில் ஆச்சரியம் நிரம்ப, 'அப்பா, நீங்கள் சொல்வது சரி இல்லை. கடவுளும் சாப்பிடுவார். நான் அவருக்குப் படைத்த நைவேத்தியம் எல்லாவற்றையும் என் எதிரேயே சாப்பிட்டாரே! இதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லையே!' என்று சொன்னான்.

அவனுக்கு என்ன பதில் சொல்வதென்றே அவன் தந்தைக்குப் புரியவில்லை. 'நீ சொல்வது உண்மைதான் என்றால் நாளைக்கும் கூட நீயே பூஜை செய், பார்ப்போம்' என்றார் தந்தை.

தந்தையின் விருப்பப்படி மறுநாளும் அவனே பூஜை செய்தான். பின் நைவேத்தியத்தை சிவபெருமான் முன் வைத்து திரையைத் தொங்க விட்டுவிட்டு வெளியே அவன் தந்தையோடு இறைவனது திருநாமத்தை ஓதிக்கொண்டு காத்திருந்தான்.

அரைமணி நேரம் கழித்து திரை விலக்கப்பட்டது. அவனது தந்தைக்கு அவர் கண்களையே அவரால் நம்ப முடியவில்லை. நைவேத்தியத்திற்கு வைக்கப்பட்டிருந்த எல்லா உணவுப் பண்டங்களும் காலியாகி இருந்தது. அந்தச் சிறுவனால் படைக்கப் பட்ட எல்லாம் உண்மையிலேயே கடவுளால் ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தது.

கண்களில் நீர் ஆறாகப் பெருக அந்தப் பிராமணர் நெடுஞ்சாண் கிடையாக இறைவன் முன் வீழ்ந்து, 'எம்பெருமானே! என் குழந்தை பெற்றுள்ள அந்தத் தூய்மையான இதயத்தை எனக்கும் தந்தருள்வாய் அப்பா' என்று மனம் உருக வேண்டிக் கொண்டார்.

நம் உள்ளம் தூய்மையாக இருந்தால் கடவுளும் நம் அருகிலேயே இருக்கிறார். எப்போது உள்ளம் முழுவதும் தூய்மையாகிறதோ அப்போது இறைவனும், சாதாரண மனிதர்கள் பழகுவதுபோல் நம்மிடம் பழகுகிறார், நம்மோடு பேசுகிறார், நம்மோடு விளையாடுகிறார், நம்முடனே வாழ்கிறார்.

*(நன்றி : மயிலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வெளியீடான ஸ்ரீராமகிருஷ்ணரின் நீதிக் கதைகள்)*

★★★

# MODERN YOUTH. . . . .

The modern youth develops a self-seeking individuality, because he sees examples of it everywhere. He wants to be served and not to serve others, Self-aggran-dizementd ruins him all through. The youth of the olden days was fortunate in being placed in the care of a preceptor whose life was an endless process of dedication. Instinctively the pupil caught that spirit and he felt it a privilege to serve the master. This spirit and the act of service which started here remained aglow all through life. The pupil developed universal love, forbearance and austerity as a matter of course. With the commencement of adolescence he was initiated into Atma Vidya or Self-knowledge. And his training was directed as much to the public weal as to personal refinement. The pupil's future place and responsibility in society received due attention. He was trained in the arts and sciences useful to corporate living. His beaming countenance was expressive ofpurity in the heart, clarity of intellect, willingness to serve and confidence to face any emergency. After being fixed in these sterling qualities the pupil was sent back to society with the benign blessings of the preceptor. The ancient Indian psychologists had realized through their experience that a youth processed and moulded in a Gurukdula for a period between twelve and fourteen years gets permanently cast in that mould. No adverse environment can make him swerve from the path of righteousness. Our task today is to resuscitate the Brahamacharya Ashrama and the Gurukula system. A country does not become great merely on material prosperity. History bears evidence to diabolical characters amassing wealth and even administering efficiently. Though money and power are necessary for a peaceful and prosperous earthly life they in themselves are incapable of evolving a higher order of society. Righteous characters alone add sanctity to wealth and power. Such characters emerge only out of the man moulding smithy of the Brahmacharya Ashrama.

*-SRIMATH SWAMI CHIDBHAVANADA*

# Science and Religion

By

Swami Ranganathananda

## Faith and Perseverance

The search for truth in the physical sciences also involved similar challenges, set-backs, and disappointments, and called for similar courage and persistence to achieve final success. Behind a successful scientific discovery lie many failures and disappointments. Take the case of Madame Curie who discovered and isolated radium Behind that momentous discovery lie years and years of frustrating research with pitchblend, conducted in a damp and ill-equipped cellar, and in a spirit of what India calls tapas, or austere discipline in the pursuit of truth, in which she had the help and encouragement of her great scientist husband. Thus we see the close kinship in method and spirit and temper between the tapas and sadhanas of physical science and of the science of religion. Gaudapada refers to the dauntless persistence characteristic of all such tapas in a famous verse in his Mandukya Karika (III. 41):

Utseka udadheryadvat
Kusagrenaika-binduna;
Manaso nigrahas-tadvat
bhavet aparikhedatah-

'The disciplining of the mind is to be pursued with dauntless and cheerful determination just like the determination to empty the ocean, drop by drop, by the tip of a kusa grass.'

The spirit behind both pure science and religion,therefore, is the same, namely, persistent search for truth; difference is only in the field of the search. The physical scientists seek for truth in the physical universe, in the world revealed by the five senses, and by the instruments helpful to the senses. The seeker of the science of religion seeks for it in that field of experience that lies beyond that world revealed by the five senses, beyond 'where the organ of speech (and other senses), and the mind (dependent on mere sense-data), do not reach'-yato Vaco nivartante aprapya manasa saha, as the Taittiriya Upanisad puts it (11.9). Soul and God belong to that category. That is India's testament after long ex-periments and verifications, from the time of the Upanisads to Sri Ramakrishna.

## The Tapas of Truth-seeking in Science and Religion

That is why, in the field of religion in India, the question is not of believing in a creed or dogma, but experimenting with and experiencing the truth about the soul, about God. Belief is nothing. As I said in the beginning, any fool can say, 'I believe'; and he or she believes; yet he or she remains the same stagnant pool of a man or a woman for years and years. That belief has not made any difference in his or her character, or in his or her inter-human relationships. But one who follows the way of the science of religion does not remain satisfied with such cosy belief yielding only a static piety. He dares to question his belief, to experiment with it, and does not find satisfaction till he has converted it into a true belief. Indian history is full of accounts of spiritual seekers, drawn from all classes and levels of society, who reached such true beliefs and became saints-scientific discoverers in the field of religion. Incidentally, it also demonstrates the truth, that the scientific mind and the spiritual mind, in a free society, can rise and flourish irrespective of caste or class or education or income levels. They meditated and prayed, struggled and suffered, lived and worked, with dedication for years, before they experienced the light of God. The discoveries of physical science have also such tapasya behind them, as the one example, out of many, of Madame Curie mentioned earlier, makes clear. Training our children for pure science will in due course fit them for pure religion also. Search for truth in all science begins with the sense organs, by transforming mere seeing into observing. The training of the senses and the mind into effective instruments in the search for truth and character-excellence is education; and religion is only continued education.

## Fundamental Science Education

The more our children get such an education, the more will trained minds be made available to our country in all fields of national activity. But, today, we are far from it; our current education is largely stuffing the brain

and not training the senses and the mind. Even in many of our university graduates, including science graduates, this power of observation is very limited, and the power of independent thinking and judgement and decision-making is still more limited. What the country needs is, therefore, not plenty of mere science graduates but batches and batches of scientific minds, out of whom will come giants in all secular and spiritual fields. That is the wonderful type of mind that can bring the galvanic touch to rouse and raise the six hundred and fifty million pe9ple of India. Quantitatively, we are big; but qualitatively, we are small. Our national mind is to be trained in sraddha, out of which will come the creative power of imagination and the critical power of thinking.

That is fundamental science education. We need such an education to be imparted to our children from primary classes upwards. We can inspire our children with authentic stories taken from the history of physical science, for example, the story of the boy Watts who observed the power of steam and whose work later enabled Stevenson to develop the steam engine. When he was a young boy, Watts was sitting at break-fast table with the other members of his family; his mother was preparing the breakfast. The kettle, filled with water for tea, was on the fire; the water was boiling. The boy looked at the kettle; he saw the lid of the kettle jumping up; he observed it, not merely saw it, and felt it to be a unique phenomenon. The mother called the boy to join the party at breakfast, but he did not hear it; he was concentrated on that one single phenomenon in front of him; in the course of observation, his mind caught its significance imaginatively. There is power, or energy, hidden in the steam, it makes the lid jump up all the time, and that energy of the steam can be disciplined and made to serve the purposes of man. Out of that experience came the great discovery of the steam engine which was one of the important ingredients behind the early phase of the modern Industrial Revolution. It is this scientific curiosity and power of critical observation and love of truth, instilled in a big way in our children, that will produce the much needed scientific and social and spiritual revolution in India.

### The Example of a Modern Indian Scientist

In one such youth of our country, the late Dr. Yellapragada Subba Row of Andhra Pradesh, we have a wonderful recent example of this scientific and spiritual quest. When I read his story a few years ago in the American Reporter of New Delhi (June 11, 1952), I felt deeply inspired and I felt that we have to awaken such Subba Row spirit, consisting of love of truth and the inquiring spirit, and also love of man, in many thousands of our youths, before we can become a scientific nation. What did he do? As a student at school at Madras, he was a bright boy, but very poor. His brother fell ill of sprue of a serious kind. The boy watched his brother sinking day by day from what, at that time, was an incurable malady. Helplessly watching his dear brother dying away, his imagination became fired with the thought: Why is my brother dying like this?

Is there no remedy for this serious ailment? And he, then and there, resolved within himself that he would dedicate his life to find such a remedy. That is the confluence of tapas and svadhyaya, self-discipline and study-research, pursued by him thereafter till his own death a confluence highly praised and prized in Valmiki Ramayana. and other great books of Indian culture.

What a resolution for a young and poor school boy to take! But, when behind such resolutions lie love of truth and love of man, and courage, they cease to be idle resolutions of immature minds, but become silent onward creative movements of the human soul. Love of truth and love of man go together in many scientific and spiritual discoveries, and also in many social undertakings like prison reform. All antiseptic measures in modern surgery, and penicillin among drugs, are a few of the many such scientific examples. Buddha's compassion for man made him discover profound spiritual truths during his historic meditation under the bodhi tree at Buddha Gaya two thousand five hundred years ago. Gandhiji's going to prison, armed with truth and non-violence only, was with a view to re-leasing millions of his countrymen from the larger prison of political slavery and helplessness.

Helped by friends to study medicine. He finished duly the M.B.B.S. and M.S. courses. But, all through, only that one idea dominated his mind: how to discover a remedy for that pernicious ailment? So, after finishing his medical course at Madras, he wanted to do research. But where were such research facilities in India then? So he went first to U.K. in 1923 and then to America where he joined a research team at the Harvard University. Along with doing commendable research work there, he also worked hard and obtained a degree in biochemistry. During this time, he did also menial jobs to earn money to meet his expenses. He later accepted an invitation extended by the Lederle Laboratories of the American Cyanimid Company, New York, in 1940, to use its facilities for his research. Impressed with his earnestness

and talents, the management of that drug-research laboratory encouraged him to go ahead in his search and, from 1942, to direct the research work of its team of scientists.

Research with tons of liver for experiment continued for years. Like many other scientific seekers, he also must have often experienced frustration and dejection for not getting the expected results. Ultimately, he succeeded in isolating a tiny bit of folic acid., and, later, his team succeeded in producing synthetic folic acid in the form of a yellow powder in 1945. It was a great discovery. Then came its testing by application to hospital patients. When it was administered, the results were marvellous, and it soon entered the market as a wonderful remedy for this pernicious disease.

He did not take any personal credit for this discovery, but he gave that credit to the members of his team. Soon after, he and his team developed another wonder-drug, aureomycin. During all those years, he gave freely from his earnings to relieve the sufferings of other people around him. Dr. Yellapragada Subba Row died young in 1948 at the age of 52 in the United States, after ensuring, through his work, life for millions of his fellow human beings.followed by the inscription : Science simply prolongs life; religion deepens it.

His life illustrates the spirit conveyed in a brief but powerful utterance by queen-mother Vidula to her prince-son Sanjaya, as recorded in the Udyogaparva of the Mahabharata (120. 15):

Muhurtam jvahtam sreyo
Na tu dhumauitam ciram-

'It is better to flame forth for one instant than to smoke away for ages!'

I have given this example of Young Subba Row to emphasise that pure science needs, along with critical reason, tremendous sraddha, with its richness of imagination, out of which Comes not only science but also humanism. And, in religion, we have this fund of imagination in our bhaktj tradition, and this kind of critical reason in our jnana tradition.

(These are part of the lectures delivered by Swami Ranganathananda the Bengaloor University in 1976.)

## அகில இலங்கை இந்து மாமன்றத்தின் புதிய நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள்

தலைவர் :
திரு. வி. கயிலாசபிள்ளை

பிரதி தலைவர் :
திரு. மா. தவயோகராஜா

துணைத் தலைவர்கள் :
திரு. சி. தனபாலா
திரு. த. கணநாதலிங்கம்
திரு. இ. நமசிவாயம்
திரு. மு. கந்தசாமி
திரு. க. இராஜபுவனீஸ்வரன்
திரு. க. அருணாசலம்
திரு. அ. கருப்பண்ணாபிள்ளை
திரு. மு. பவளகாந்தன்
திரு. என். பேரின்பநாயகம்

பொதுச்செயலாளர் :
திரு. கந்தையா நீலகண்டன்

பிரதிச் செயலாளர் :
திரு. ந. மன்மதராஜன்

உப செயலாளர்கள் :
திரு. க. பாலசுப்பிரமணியம்
திரு. மா. கணபதிப்பிள்ளை

பொருளாளர் :
திரு. வி. கந்தசாமி

துணை பொருளாளர் :
திரு. எம். சொக்கலிங்கம்

ஏனைய உறுப்பினர்கள் :
(குழுத் தலைவர்கள், செயலாளர்கள் )
திரு. எஸ். சிவராசா
புலவர் அ. திருநாவுக்கரசு
திரு. கு. மகாலிங்கம்
திருமதி அ. கயிலாசபிள்ளை
திருமதி வானதி இரவீந்திரன்
திரு. க. விவேகானந்தன்
திரு. பி. கருப்பையா
திரு. பொ. விமலேந்திரன்
திரு. எஸ். ஜெயக்குமார்
திரு. த. மனோகரன்

# சுவாமி விபுலானந்தர் நினைவு கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களிடையே சுவாமி விபுலானந்தர் நினைவு கட்டுரைப் போட்டிகளை நடத்த தீர்மானித்திருக்கின்றோம். ஜூலை 19ம் திகதி சுவாமி விபுலானந்தர் நினைவு தினம். இந்து மாமன்றத்தின் விதந்துரைப்பில் ஜூலை 19ம் திகதி தமிழ்த்தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. தொடர்ந்தும் அப்படி அனுஷ்டிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கல்வி அமைச்சுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

கீழ்ப்பிரிவு (ஆண்டு 6 - 9) மாணவர்கள் "சுவாமி விபுலானந்தர் அடிகளாரை என்றும் போற்றுவோம்" எனும் தலைப்பில் 750 சொற்களுக்கு மேற்படாமலும், மேற்பிரிவு (ஆண்டு 10 -13) மாணவர்கள் "இந்து பண்பாட்டு வளர்ச்சியில் சுவாமி விபுலானந்தரடிகளின் பங்கு" எனும் தலைப்பில் 2000 சொற்களுக்கு மேற்படாமலும் கட்டுரைகள் எழுதி தங்களது பாடசாலை அதிபரினால் அத்தாட்சிப்படுத்தி பின்வரும் மாதிரிக் கூப்பனையும் நிரப்பி அனுப்ப வேண்டும்.

---

மாணவரின் பெயர் :

பாடசாலை (முழு முகவரி) :

கல்வியிலும் ஆண்டு :

கட்டுரையிலுள்ள சொற்களின் தொகை :

இக்கட்டுரை எனது சொந்த ஆக்கம் என உறுதிப்படுத்துகிறேன்

திகதி : ..........................................
மாணவனின் கையொப்பம்

இக்கட்டுரை, மேற்கூறிய எனது பாடசாலை மாணவன்/ மாணவி
செல்வன்/ செல்வி ....................................................................................யால்
எழுதப்பட்டது என்றும், அவர் ஆண்டு........... ல் பயிலுகிறார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

பாடசாலை முத்திரை
திகதி : பாடசாலை அதிபர்

---

சகல கட்டுரைகளும் 2001 . 06. 31ம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக,

அகில இலங்கை இந்து மாமன்றம்
All Ceylon Hindu Congress.
91/5, சேர் – சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை
91/5 Sri Chittampalam A. Gardiner Mawatha
கொழும்பு – 2
Colombo - 2

என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த கட்டுரைக்கு முதற் பரிசு ரூபா. 2000 வழங்கப்படுவதுடன், பரிசுக்குரிய கட்டுரை அடுத்த "இந்து ஒளி" சஞ்சிகையிலும் வெளியிடப்படும். இரண்டாம் முன்றாம் இடங்களையும், மற்றும் பாராட்டுப் பெறும் கட்டுரைகளுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஆசிரியர் குழு

*அகில இலங்கை இந்து மாமன்ற இணையத்தளம்*

**http:// www. hinducongress.org.**

இந்நாட்டின் இந்து மன்ற அமைப்புகளினதும், ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பான அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இணையத்தளம் 7–5–2001 முதல் மாமன்றச் செய்திகளையும் "இந்து ஒளி" சஞ்சிகையில் வரும் விடயங்களையும் கொண்டு வெளிவரும். பார்க்கவும். பார்த்துப் பயன் பெறவும். மேலும் இது சிறப்புற ஆக்கபூர்வமான ஆலோசனைகளை அனுப்பவும்.

*- அகில இலங்கை இந்து மாமன்றம்.*

## தொழில் வாய்ப்பிற்கு ஆங்கிலப் பயிற்சி

***அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான இந்து வித்தியா விருத்திச் சங்கம், கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் சலுகை அடிப்படையில் ஆங்கிலம் பேச, எழுதக் கற்றுத்தர ஒழுங்குகள் செய்துள்ளது. தொழில் வாய்ப்புத் தேடும் இளைஞர்களுக்கு நல்லதொரு வாய்ப்பு. தொடர்பு கொள்ளவும்.***

**சரஸ்வதி மண்டபம்**
**75, லோறன்ஸ் வீதி, கொழும்பு -4.**
**தொலைபேசு : 585975**

**செயலாளர்,**
**இந்து வித்தியா விருத்திச் சங்கம்**

## அகில இலங்கை இந்து மாமன்றம்

**அங்கத்துவம்**

**சம்பந்தமான அறிவித்தல்**

### நிறுவன உறுப்பினர்கள்

இலங்கையிலிருக்கும் இந்து நிறுவனங்களும் ஆலய தர்மகர்த்தாகளும் அகில இலங்கை இந்து மாமன்றத்தில் அங்கத்துவம் பெறலாம். அங்கத்துவம் பெறவிரும்பும் நிறுவனங்களும், தர்மகர்த்தாகளும் இல. 91/ 5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 02 என்ற முகவரியிலிருக்கும் எமது தலைமையகத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமோ விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம்.

### இணை உறுப்பினர்கள்

இணை உறுப்பினராக விரும்பும் தனிநபர்கள் அதற்கான விண்ணப்பப் படிவத்தை மேற்படி முகவரியில் பெற்று விண்ணப்பிக்கலாம். இணை உறுப்பாண்மை வருடாந்தக் கட்டணம் ரூபா 150/–. இணை உறுப்பினர்களுக்கு மாமன்றத்தின் காலாண்டு வெளியீடான 'இந்து ஒளி' இலவசமாக அனுப்பப்படும்.

## அகில இலங்கை இந்து மாமன்றம் இந்து வித்தியா விருத்திச் சங்கத்துடன் இணைந்து நடத்தும் பண்ணிசைப் பயிலரங்கு

தமிழ்நாடு அடையார் அரசு இசைக் கல்லூரி இயல் இசை விரிவுரையாளர் பண்ணிசைச் செல்வி திருமதி சுப்புலஷ்மி மோகன் (M.A, M. Sc, M.ph, Dip in Music) அவர்களினால் நடத்தப்படும் இப்பயிலரங்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 5.5.2001 சனிக்கிழமையிலிருந்து சனி, ஞாயிறு தோறும் நான்கு வாரங்களுக்கு (8நாட்கள்)காலை 8.30 மணிமுதல் நண்பகல் வரைதொடர்ந்து நடைபெறுகிறது. பாடசாலைகளையும், அறநெறிப் பாடசாலைகளையும் சேர்ந்த ஆசிரியர்களும் மாணவர்களும் மற்றும் பண்ணிசையில் ஆர்வமுள்ளவர்களும் இப்பயிலரங்கில் கலந்து கொள்ளலாம். பயிலரங்கில் பங்குபற்றியவர்களுக்கு அத்தாட்சிப்பத்திரம் வழங்கப்படும்

## நெஞ்சம் மறவாத பெரியார்



அண்மையில் அமரத்துவமடைந்த சிவநெறிச் செல்வர், சைவ நன்மணி, ஞானவாரிதி, சைவப் பெரியார். இரா. மயில்வாகனம், (சமாதான நீதவான்) அவர்கள் மட்டுநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் ஆசிரிய சேவையில் சேர்ந்து படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று இறுதியில் அதிபராக நியமனம் பெற்றுப் பல இடங்களிலும் நற்பணி புரிந்தவர். தனது சேவைக்காலப் பிற்பகுதியில் கொழும்பை வதிவிடமாக்கி கொழும்பில் பணிபுரிந்தார்.

பெரியார் மயில்வாகனம் அவர்கள் ஒரு பாடசாலை ஆசிரியராக இருந்த போதும் ஆரம்ப காலம்தொட்டுத் தன்னைச் சமூகப் பணிகளிலும், சமயப் பணிகளிலும் ஈடுபடுத்தி அரும்பெரும் சேவை ஆற்றினார். கொழும்பு விவேகானந்தசபை, கொட்டாஞ்சேனை வரதராஜ விநாயகர் தொண்டர் சபை ஆகியவற்றின் உறுப்பினராகவும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முகாமைச்சபை உறுப்பினராகவும், அதன் உப தலைவர்களுள் ஒருவராகவும் அவர் ஆற்றிய பணிகள் பல.

திரு. மயில்வாகனம் அவர்கள் மக்களின் மனதில் சைவசமய உண்மைகள் பதியும் வண்ணம் சிந்தனைக் கோவை ஒன்று, இரண்டு, ஒன்பதாந் திருமுறை ஒரு நோக்கு, வைரவ மான்மியம், தேவிதிருமுகம் ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டதன் மூலம் சைவ மக்களுக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியதாகும்.

மேலும், சென்னை, கனடா போன்ற வெளிநாடுகளில் நடைபெற்ற சைவ மாநாடுகளில் பங்கு கொண்டு சொற்பொழிவாற்றியும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பித்தும் பலரின் பாராட்டுக்களையும் பெற்றதன் மூலம் தனக்கும், தான் சார்ந்த நிறுவனங்களுக்கும் மட்டுமன்றித் தான் பிறந்த மண்ணுக்கும் பெருமை தேடித் தந்த உத்தமனாவார்.

1999 ஜூலை மாதம் சுவாமி விபுலானந்தர் நினைவு தினத்தையொட்டி வணக்கத்திற்குரிய சுவாமிஜி ஆத்மகனானந்தா தலைமையில் அகில இலங்கை இந்து மாமன்றக் குழுவினர் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தபோது திரு. மயில்வாகனம் ஐயா தன் சொந்த மண்ணில் எங்களை வரவேற்று உபசரித்து விருந்தளித்த சிறப்பான நிகழ்வை நாங்கள் மனம் நெகிழ நினைவு கூறுகிறோம்.

அன்னாரின் இழப்பு தமிழ் மக்களுக்கு குறிப்பாகச் சைவப் பெருமக்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அவரது ஆத்ம சாந்திக்கு மாமன்றம் பிராத்திக்கின்றது.

பொதுச் செயலாளர்

## யோகானந்தன் எனும் சகாப்தம்



கடந்த 25 வருடங்களாக சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கத்தின் மூலமாக சைவத்துக்குத் தொண்டாற்றி அன்னாரது 48 வயதில் அண்மையில் சிவபதம் அடைந்த சுங்க உதவிப் பணிப்பாளர் உயர்திரு இராசக்கோன் யோகானந்தன் அவர்கள் பத்து வருடங்களுக்கு மேலாக சங்கத்தின் பொதுச் செயலாளராகக் கடமையாற்றியதுடன் இறுதியில் உபதலைவராகக் கடமையாற்றி வந்தார். பதவி தாங்குனர்கள் எவராக இருந்திருப்பினும் கடந்த 16 வருடங்களாக செயலாளர், பொருளாளர் ஆகிய பொறுப்புக்களை உண்மையாகத் தாங்கி நின்று உழைத்தார். சங்கத்தின் சார்பில் திருமலை வில்லூன்றிக் கந்தன் திருவிழா, ஆடிவேல் விழா, கலை விழா, சரஸ்வதி பூஜை போன்றவற்றை தனது நேரடி மேற்பார்வையின் கீழ் நடத்தி சிவசேவையில் சங்கத்தின் பங்களிப்பை உறுதி செய்தார்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தில் முகாமைச் சபை உறுப்பினராக கடந்த 10 ஆண்டுகள் கடமையாற்றி மறைமுகமாக பல உதவிகள் செய்தார். உதாரணமாக மாமன்றம் நடத்திவரும் இரத்மலானை சிறுவர் இல்ல நிதி சேகரிப்பு நிகழ்வுக்கு ரூபா. இரண்டு இலட்சத்திற்கு மேல் சேகரிக்க உதவி புரிந்தார். 'இந்து ஒளி' சஞ்சிகையை இலவசமாக பாடசாலை மட்டத்தில் விநியோகிக்க சங்கம் உதவ வேண்டுமென்ற எனது கோரிக்கையை வழிமொழிந்து சஞ்சிகையின் சிறப்பை இதர உறுப்பினர்களும் அறியச் செய்தார். 'இந்து ஒளி' தற்போது கொழும்பு மாவட்டப் பாடசாலைகளுக்கு எமது அன்பளிப்பாக அனுப்பப்பட்டு வருகிறது. சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகத்தால் வெளியிடப்படும் 'சங்க நாதம்' இந்து மத சஞ்சிகையின் ஆலோசகராக இருந்ததுடன் பலருக்கும் இஞ்சஞ்சிகை கிடைப்பதற்கு உதவி செய்தார்.

மேலும் சுங்க விளையாட்டுக் கழகத்தைப் புனரமைத்து தலைவராக இருந்து உலகின் பலநாடுகளுக்கும் அதன் நடவடிக்கைகளை வியாபித்தார். சுங்க அதிகாரிகள் சங்கம், சுங்க அத்தியட்சகர்கள் சங்கம் ஆகியவற்றின் தமது சேவை மூலம் தமிழரான அவரை தலைமைப் பதவியில் இருத்தி பிற இனத்தவர்கள் பெருமை பாராட்டும் பேறினைப் பெற்றவர். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வளர்ச்சிக்கு பழைய மாணவர் சங்கம் மூலம் நிதிகள் சேகரித்து தன்னை ஆளாக்கிய கல்லூரிக்கும் தொண்டாற்றினார்.

எப்போதும் சிரித்தமுகத்துடன் அன்புடனும் யாருடனும் கோபப்படாமல் சிறப்பாக பணியாற்றி மறைந்த அவர் நினைவு சங்கம் உள்ளளவும் நிலைத்து நிற்கும். யோகா காட்டிய வழியில் எமது சங்கம் தொடர்ந்தும் சைவத்துக்குத் தொண்டாற்றும். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திப்போமாக. ஓம் சாந்தி.

எம். ஆர். ராஜ்மோகன்
கௌரவ பொதுச் செயலாளர்
சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கம்

## இந்தச் சுடரில்.............................


1. பஞ்ச புராணங்கள்
2. கண் திறந்து பாருமம்மா
3. மாமன்றத்தின் பகிரங்க வேண்டுகோள்
5. இருள் அகல இடர் விலக ஏற்றுக சிவக்கொடி
7. பண்பாட்டுச் சுடர்கள்
9. Polonnaruwa Bronzes and Siva Worship and Symbolish
11. கௌமார நெறியின் தோற்றமும் வளர்ச்சியும்
13. சமய வாழ்வு என்பது
14. இதிஹாசங்கள் காட்டும் நாகரிகம்
15. இறை உணர்வும் மாயையும்
16. குடமுழுக்கு
17. எங்கும் நிறைந்தவன் இறைவன்
18. பரிவாரத் தெய்வங்கள்
20. சங்கரரின் அத்துவைதமும் இராமானுஜரின் விசிஷ்டாதத்துவைதமும்
22. நண்பனைத் தேடி ஓடாதே
23. பெரிய புராணக் கதைகள்
24. ஆலய வழிபாடு
25. திருவிளையாடற் புராணக் கதைகள்
26. கடவுள் சாப்பிடுவார்
28. Science and Religion
31. கட்டுரைப் போட்டி


நூலகம்

**அடுத்த சுடர்**

விஷு வருடம்

ஆடி - புரட்டாதி

### வாழ்த்து

இந்து வாழ்சடையார் சீர் இந்நெடு உலகெங்கு மோங்கி
அந்தி வாய் நிழலிடை அரும்பணி யாற்ற வேண்டி
சுந்தரப் பூசநன்னாள் சுடர் விரிந்தெழுந்த இலங்கை
இந்து மாமன்றப் பைங்கூழ் என்றுமே வாழி வாழி.


### இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
விஷு வருடம் சித்திரை - ஆனி இதழ்
சித்திரைத் திங்கள் 24ம் நாள்
07. 05. 2001.



**ஆசிரிய குழு :**

புலவர் அ. திருநாவுக்கரசு
திரு. கந்தையா நீலகண்டன்
திரு. க. இராஜபுவனீஸ்வரன்
திரு. எம். பவளகாந்தன்
திரு. த. மனோகரன்



| | | |
|---|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா | 20.00 |
| வருடாந்தச் சந்தா | ரூபா | 80.00 |
| வெளிநாட்டு வருடாந்தச் சந்தா | டொலர் | 10.00 |



**அகில இலங்கை இந்து மாமன்றம்**
A. C. H. C கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 2, இலங்கை.
தொலைபேசி எண் : 434990,
தொலைநகல் எண்: 344720


இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.


## HINDU OLI

Sithirai - Aani of
ALL CEYLON HINDU CONGRESS
7th May 2001



**EDITORIAL BOARD :**

Pulavar A. Thirunavukarasu
Mr. Kandiah Neelakandan
Mr. K. Rajapuvaneeswaran
Mr. M. Pavalakanthan
Mr. D. Manoharan



| | | |
|---|---|---|
| Price | Rs. | 20.00 per copy |
| Annual Supscription | Rs. | 80.00 |
| Foreign Supscription (Including Postage) | U. S. $ | 10.00 |



ALL CEYLON HINDU CONGRESS,
A. C. H. C. Bldg.
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha,
Colombo - 2, Sri Lanka.
Telephone No : 434990, Fax No : 344720


Next Issue :
AADI - PURADDATHY

Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 330195